d. No. M. 2569

1231

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الاسلام

மலர் 7

செந்தமிழ் மாதசஞ்சிகை

இதழ் 9, 10

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1355 ஜமாதுல் ஆகிர், ரஜப் ௴
1936 ௵ செப்டம்பர், அக்டோபர் ௴

1. அல்குர்ஆன் ... 265; 2. அல்ஹதீது ... 266
3. இஸ்லாமும் தேசாபிமானமும் ... 268
4. மிஃராஜின் சிறப்பு ... 269
5. இஸ்லாத்தின் அற்புதச் சக்தி ... 276
6. நாம் முன்னேறுவ தெங்ஙனம்? ... 279
7. பொறாமையாளனின் பரிதாப முடிவு ... 283
8. "நஞ்சிறார்கட்கு" ... 286
9. முஸ்லிம்களின் வீழ்ச்சிக்குக் காரணமென்ன? 287
10. வஹ்தத்துல் உஜூத். அல்லது உள்ளமைப் பொருள் ஒன்றே ... 292
11. மதம்மாறும் பிரசினையும், ஹிந்து மனப் பான்மையும் ... 294
12. முஸ்லிம்களின் முதற்கிப்லாவும், இந்திய முஸ்லிம்களது கடமையும் ... 296
13. நம்மவரின் பெரும்பாவம் ... 298
14. இஸ்லாமிய சமத்துவம் ... 301

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3	0	0
பிஞங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு...	”	4	0	0
தனிப் பிரதி ...	”	0	4	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,
“ ஹிபாஜத்துல் இஸ்லாம் ” ஆபீஸ்,
43, போஸ்டாபீஸ் தெரு,
G. T., மதராஸ்.

...... காட்சி நிலையம்
209433
10 OCT 1936
MADRAS

حفاظة الإسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 7	ஹிஜ்ரி 1355 ஜமாதுல் ஆகிர், ரஜப் ௴ 1936 ௵ செப்டம்பர், அக்டோபர் ௴	இதழ் 9.10

அல் குர்ஆன்

(முஹம்மதே!) சொல்லும் அறிவாளிகளும் அறிவில்லாதவர்களும் ஒன்றாவார்களா?

—அல் குர்ஆன்.

சோதரீர்! அல்லாஹு தஆலா எதைக் கொண்டு மனிதனுடைய பதவியை உயர்த்தி யிருக்கிறான்? எவ்வாறு வானம் பூமியை அவனுக்கு வயப்படுத்திக் கொடுத்திருக்கிறான், என்பதை உற்றுணர்ந்து பார்த்து இவ்வாறான மேன்பதவி கிடைப்பதற்குள்ள காரணம் அவனில் யாதிருக்கிற தென்பதை நோட்டமிட்டுப் பார்ப்போமாகில் அதற்கு குர்ஆனே கரீமே தக்க சமாதானம் கூறுவதைத் தெரிந்து கொள்வோம்.

மானிடன் உலகின்கண் படைக்கப் படுவதற்கு முன்பே, உலகில் தன்னுடைய பிரதிநிதியை அனுப்புவதற்கு அல்லாஹு தஆலா நாடியபோது மலக்குகளை நோக்கி, ஏ மலக்குகளே! "யான் உலகில் ஒரு பிரதிநிதியை உண்டாக்கப் போகின்றேன்" என்று அறிவித்தான். அதுபொழுது மலக்குகள், "சகல தத்துவங்களையு முடைய எங்கள் றப்பே! யாங்கள் உன்னை சதா துதித்துக்கொண்டும் புகழ்ந்து கொண்டு மிருக்கும் நிலைமையில் உலகிற் சென்று பலவாறான சண்டை சச்சரவுகள் புரிந்து இரத்தத்தை ஓட்டக்கூடிய பிரதிநிதியையா படைக்கப் போகின்றாய்," என வினவினார்கள். அதற்கு அல்லாஹ் தஆலா, "ஏ மலக்குகளே! உங்களுக்குத் தெரியாத விஷயங்களெல்லாம் எனக்கு நன்கு தெரியும்" என அறிவித்துவிட்டான்.

மலக்குகளில்கூட அமைந்திராத எவ்வாறான இரத்தனம் மனிதனில் அமைந்திருப்பதால் அவன் அல்லாஹ்வின் பிரதிநிதியாக இவ்வுலகின் கண் அனுப்பப்பட்டிருக்கிறான் என்பதை அல்லாஹ்வே அறிவிக்கின்றான். அதாவது, அல்லாஹ் தஆலா ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களுக்குச் சகல வஸ்துக்களையும் அறிவித்துக் கொடுத்துவிட்டு மலக்குகளை நோக்கி ஏ மலக்குகளே! உங்களுக்கு இவ் விஷயங்கள் தெரியுமா? என வினவியதற்கு, எங்களுடைய றப்பே! எங்களுக்கு யாதொன்றும் தெரியாதென அம்மலக்குகள் அறிவித்தார்கள். பின்னர் அல்லாஹ்வின் கட்டளைக் கேற்ப சகல மலக்கு

களும் அந்த ஆதம் (அலை) அவர்களுக்கு முன் தலை குனிந்து நின்றனர்.

சோதரீர்! ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களுக்கு நிகழ்வுற்ற இச்சம்பவத்தால் நாம் தெரிந்து கொள்வது யாதெனில், மனிதனுக்கு மிக மிக மேன் பதவி அளிக்க வல்லதும் அவனுடைய பெருமையை உயர்த்தக் கூடியதும் கல்விதான் என்பதும், அதனுல்தான் மானிடன் மலக்குகளுக்கு மேன்பட்டவனுகி விடுகிருன் என்பதும், இக்கல்வியின் காரணமாகவே மானிடன் மானிடத் தன்மையை அடைகிருன் என்பதுமாகும். ஆகவே, மானிடனில் கல்வி அறிவு என்னும் பொக்கிஷம் இல்லாதிருக்குமாயின் அவன் மானிடத் தன்மையின் அந்தஸ்த்தை விட்டு கீழ் பதவிக்கு வந்துவிடுவான். இது பொதுவாக மானிடர்களை பொருத்த விஷயமாகும்.

இது பொழுது நம் முஸ்லிம்களின் நிலைமையைக் கவனிப்போம். அல்லாஹ் தஆலா முஸ்லிம்களை நோக்கி, "முஸ்லிம்களே! நீங்கள் உலகம் முழுதிலு முள்ளவர்களைப் பார்க்கினும் சிரேஷ்டமானவர்களாகும்" எனக் கூறியிருக்கிருன். இதனுல் நாம் தெரிந்து கொள்வது யாதெனில், உலகிலுள்ள படைப்புகளில் சிரேஷ்டமானது மானிடவர்க்கம் என்பதும், அவ்வர்க்கத்தின் இரத்தினம் முஸ்லிம்களென்பதுமாகும்.

ஆகவே, மானிடவர்க்கத்திற்கு கல்வி அத்தியாவசியமாகும் என்பது வெள்ளிடை மலை போல் பஹிரங்கமாக இருக்கும்போது, நம் முஸ்லிம் சமூகத்திற்கு எவ்வளவு தூரம் அஃது பிரதான விஷயமென்பதை நம் நேயர்களே அறியக் கடவார்களாக. இதனுல்தான் குர்ஆன் ஷரீபின் ஒவ்வொரு பக்கங்களிலும் கல்வியின் மேன்மை, அதன் அவசியம் முதலியவைகள் மிளிர்ந்து கொண்டிருப்பதை நாம் காண்கின்றேம்.

மானிடர்களுக்கு ஏற்படும் சங்கை மரியாதைகளெல்லாம் அவர்களின் கல்வி அறிவின் காரணமாகத்தான் என்பதை குர்ஆன் ஷரீப் தக்க முறையில் அறிவிப்பதுடன் கல்வி அறிவில்லாமை முதலியவைகளின் கெடுதிகளையும் விபரித்துக் கூறியிருக்கிறது. ஆகவே, நம் நேயர்கள் கல்வியை தக்க முறையில் கற்று மானிடர்களில் சிரேஷ்டமானவர்களாக விளங்குவார்களாக.

அல் ஹதீது

"உலகிலுண்டான முஸ்லிம்கள் யாவரும் ஒரே திரேகத்தைப் போன்று இருக்கிருர்கள். எனவே திரேகத்திலுள்ள ஒரு கண்ணில் நோவினை ஏற்பட்டுவிடுமோயின் திரேகமடங்கலுக்கும் கஷ்டம் நேரிடுகிறது. தலையில் வலி ஏற்பட்டுவிடுமோயின் அதுபோழுதும் திரேகம் முழுவதிற்கும் அவஸ்தை நேரிடுகிறது. இவ்வாறே ஒரு முஸ்லிமுக்கு ஏதாகிலும் கஷ்ட சங்கடங்கள் நேர்ந்துவிடின் இதர முஸ்லிம்கள் யாவரும் தங்களாலியன்றவரை அக்கஷ்டத்தை நிவர்த்திப்பதற்கு முயற்சிப்பது அத்தியாவசியமாகும், என சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் திருவாய் மலர்ந்தருளி யிருக்கிருர்கள்.

முஸ்லிம் நேயர்காள்! மேலே கூறப்பெற்ற நாயக வாக்கியத்தை நாம் தக்க முறையில் நோட்டமிட்டுப் பார்ப்போமாகில், நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள், முஸ்லிம்களில் ஒருவருடைய கஷ்டத்தை இதரர்கள் எவ்வாறு கவனிக்க வேண்டும் என்னும் அழகிய தக்க விதத்தை விளக்கியிருக்கிருர்களென்பது நன்கு புலனுகும். எனவே, ஒரு மனிதனுடைய திரேகத்திலுள்ள கை கால் காது மூக்கு கண் இவைகள் எவ்வாறு ஒற்று வாழ்கின்றனவோ அவ்வாறே உலகிலுள்ள முஸ்லிம்களும் ஒற்று வாழ வேண்டுமென்பது நபிகள் பெருமானுர் (ஸல்.) அவர்களின் கருத்தாகும். ஆகவே, மனிதனுடைய விரலில் சிறியதோர் வீக்கமேற்பட்டு விடுமாயின் உடனே அவன் அலறி அழ ஆரம்பிக்கிருன். கண்களிலிருந்து தண்ணீர் வடிய

ஆரம்பிக்கிறது. இவ்வாறு ஒரு விரலின் வலியால் திரேக முழுதும் நோவினை அனுபவிக்க நேரிடுகிறது. இவ்வாறே இஸ்லாத்தின் வாஞ்சையுமிருக்க வேண்டும். எனவே, மிஸ்ரிலுள்ள ஒரு முஸ்லிமுக்கு கஷ்ட சங்கடங்கள் நேர்ந்துவிடுமாயின் இந்தியாவிலுள்ள ஒவ்வொருவரும் அக்கஷ்டத்தை தங்களுக்குள்ள கஷ்டமென மதிக்கவேண்டும். சஹாபாக்கள் (ரலி.) அவர்கள் இதரர்கட்கு ஏற்படும் கஷ்டங்களை எவ்வாறு மதித்திருந் தார்களென்பது கீழ் குறிப்பிடப்படும் சில சம்பவங்களிலிருந்து நன்கு புலனாகும்.

ஹஸ்ரத் ஹாரிதிப்னு உமைர் (ரலி.) அவர்கள் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் தூதராக இருந்தார்கள். நபிகள் நாதர் (ஸல்.) அவர்கள், ஹாரிது (ரலி.) அவர்களிடம் ஷாம் தேசத்து அதிகாரிக்கு ஒரு கடிதத்தைக் கொடுத்து அனுப்பினார்கள். அவ்வதிகாரி கடும் கோபியாகவும் முரட்டுத்தனமுடையவனாகவுமிருந்தான். அவன் நபிகள் நாதர் (ஸல்.) அவர்களது கடிதத்தைக் கண்ணுற்றவுடன் பெரும் கோபத்தில் வந்து ஹஸ்ரத் ஹாரிது (ரலி.) அவர்களை ஷஹீதாக்கிவிட்டான். இச்செய்தி மதீனாவிலுள்ளவர்களுக்குத் தெரியவே முஸ்லிம்கள் தன்னிலையற்றவர்களாகி முவ்வாயிரம் முஸ்லிம்கள் வரை தங்களது இன்னுயிரை தியாகஞ் செய்வதற்கும் தயாராகி ஷாம் தேசம் போய் சேர்ந்துவிட்டனர். அவ்விடத்திய கிறிஸ்துவ அரசனும் ஒரு லக்ஷம் படைகளை திரட்டிக்கொண்டான். இதனைக் கண்டு முஸ்லிம்கள் ஒரு சிறிதும் அஞ்சாது மனோ உத்சாகத்துடன் யுத்தத்தில் ஈடுபட்டார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்களது கிலாபத் காலத்தில் இராக்கின் மீது படையெடுப்பு நடைபெற்ற போது குப்பார்கள் தங்களுடைய யானைப்படைகளை முஸ்லிம்களது படை மீது செலுத்தியதால் முஸ்லிம்களின் குதிரைகளானது எதிரிகளின் யானைகளைக் கண்டு விரண்டோட ஆரம்பித்தன. இதனால் 9 ஆயிரம் முஸ்லிம்களில் 6 ஆயிரம் முஸ்லிம்கள் அதே இடத்தில் கொல்லப்பட்டுப் போயினர். முஸ்லிம்களின் இந்நிலைமை அரப் தேசத்தில் பரவிவிடவே அத்தேசம் முழுதிலும் நிம்மதிக் குறைவு ஏற்பட்டு ஒவ்வொரு முஸ்லிமும் தன் உயிரை தியாகஞ் செய்வதற்குத் தயாராகி மதீனமா நகர்வந்து குழும்பிவிட்டனர். மத[illegible]வின் எப்பக்கல் பார்த்தபோதிலும் முஸ்லிம்களினது பட்டாளங்களின் தோற்றமாகவே தென்பட்டு வந்தது. முடிவாக இம்முஸ்லிம்கள் தங்கள் சோதர்களின் உதவிக்காக இராக் தேசம் சென்று கடும்போர் புரிந்து புவைபுடைய மைதானத்தைக் காபிர்களுடைய பிணத்தைக் கொண்டு நிறப்பிவிட்டார்கள்.

'தபூக்' யுத்தத்தில் அநேக முஸ்லிம்கள் மரணமாய்விட்டார்கள். அதுபொழுது ஹஸ்ரத் ஹுதைபா (ரலி.) அவர்கள் ஒரு கோப்பையில் தண்ணீர் எடுத்துக் கொண்டு யுத்தகளத்தில் குற்றுயிராய்க் கிடந்த தன் சிறிய தந்தையின் குமாரருக்குக் கொண்டுபோய் கொடுத்தபோது அவருக்கு சமீபத்தில் ஹிஷாமிப்னு ஆஸ் என்பவர் 'தண்ணீர்' என்று சப்தம் கொடுத்தார். அதுபோது அவர் அந்தத் தண்ணீரை ஹுதைபா (ரலி.) இடம் கொடுத்து ஹிஷாமுக்குப் புகட்டுமாறு சயிக்கினை செய்தார். ஹுதைபா (ரலி.) அத்தண்ணீரை ஹிஷாமிடம் கொண்டுபோகவே அவருக்குச் சமீபத்தில் காயப்பட்டுக்கிடக்கும் வேறொருவரிடமிருந்து 'தண்ணீர்' என்ற சப்தம்வந்தது. உடனே ஹிஷாம் அத்தண்ணீரை தமக்குப் பக்கத்திலுள்ளவருக்குக் கொடுக்குமாறு கூறினார். அந்த சப்தம் வரும் திசையை ஹுதைபா (ரலி.) அவர்கள் நோக்கி அவ்விடத்திற்கு அத்தண்ணீரைக் கொண்டு போகவும் அவர் மரணமாய்விட்டார். அவ்விடத்திலிருந்து ஹிஷாமிடம் வந்தபோது அவரும் ஷஹீதாய்விட்டார். பிறகு தமது சிறிய தந்தையின் குமாரரிடம் வந்தபோது அவரும் மரணமாய்விட்டதைக் கண்டு ஆச்சரியமுற்றார்.

முஸ்லிம் சோதரீர்! இதுதான் முஸ்லிம்களின் தயாளத்தன்மை. மூன்று முஸ்லிம்கள் தங்களது இன்னுயிர்களை அல்லாஹ்வின் பாதையில் தியாகஞ் செய்தார்கள். இவர்களில் ஒவ்வொருவரும் தன் சோதிரர் தாகத்தோடிருக்கும்போது தான் தண்ணீர் அருந்துவதற்கு சம்மதிக்கவில்லை. இது முஸலிம்களின் அனுதாபத்தின் நமூனாவாகும். இக்குணங்கள் முற்காலத்து முஸ்லிம்களில் குடிகொண்டிருந்ததால் தான் அன்னோர் உலகிலுள்ள மானிடர்களில் சிரேஷ்டமாகக் காணப்பட்டார்கள். இச்சிறந்த வழியை நாம் அழகிய முறையில் பின்பற்றி சிறப்புற்று விளங்குவோமாக.



இஸ்லாமும் தேசாபிமானமும்

இஸ்லாமியச் சட்டதிட்டங்களை நன்கு ஆராய்ந்து பார்ப்பவர்களான உலமாக்களிடையே தேசாபிமானம் இஸ்லாம் மதத்தில் எந்த அளவிற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்னும் விஷயமாய் விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தற்போது நந்தேயத்தில் நடைபெற்றுவருகிற தேசீய போராட்டத்தைக் கவனித்த சிலர், தேசாபிமானம் ஈமானில் ஒரு அம்சம் என்று சொல்லிக்கொண்டு, தேசிய இயக்கத்தில் தீவிரமாக ஈடுபடுகின்றனர். ஆனால், தற்போது ராஜீயத் தலைவர்களால் போதிக்கப்பட்டு வருகிற தேசாபிமானம் — தேசபக்தி— என்பது உண்மையில் இஸ்லாத்தின் உயரிய நோக்கத்திற்கு மாறாகவும் குறுகிய சித்த முள்ளதாகவு மிருக்கிறது.

எவ்வாறு மனிதனின் வளர்ச்சி ஆரம்பமாகிறதோ அவ்வாறே இஸ்லாத்தின் திட்டமும் ஆரம்பமாகிறது. மனிதன் ஆரம்பத்தில் தாயை மாத்திரம் உணருகின்றான். அப்பால் தகப்பனையுணர்கின்றான். பிறகு நெருங்கிய சுற்றத்தாரையும், அப்பால் தூர பந்துக்களையும், அப்புறம் தனது தெருவிலுள்ளவர்களையும், பிறகு, உள்ளூர் ஜனங்களையும், அதற்கப்புறம் சுதேசத்தினரையும், அப்பால் உலகத்தைப் பற்றியும் உணருகின்றான். இதுபோலவே அவன் செய்ய வேண்டிய கடமைகளும் படிப்படியாக ஏற்படுகின்றன. முதலில் தாய் தகப்பன், நெருங்கிய சுற்றத்தார், தூரபந்துக்கள், பிறகு தனதுகூட்டத்தினர், சுய ஊர்க்காரர்கள் இவ்விதமாக அவன் படிப்படியாக ஜனங்களுக்கு ஊழியம் செய்யவேண்டிய பொறுப்பும் ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. ஆகவே, இஸ்லாம் தேசாபிமானம் என்ற உணர்ச்சியை மட்டிலும் போதிக்கவில்லை, அதனைப் பார்க்கினும் பன்மடங்கு உன்னதமானதும் சிறந்ததுமாகிய ஜனாபிமானத்தைப் போதிக்கிறது. தேசாபிமானம் என்பது தனது சுய தேசத்தின் நன்மையை மட்டிலும் கருதுவதாக இருக்கிறது. இந்த தேசாபிமானத்தின் காரணமாகவே உலகில் போராட்டங்களும் யுத்தங்களும் நிகழுகின்றன. ஜனாபிமான மிருந்தால்—ஜனசமூகத்தினருக்கு ஊழியம் செய்தல் என்ற உணர்ச்சி இருந்தால்—உலகத்திலுள்ள சகல தேசத்தினரும் இன்புற்றிருக்க முடியும். உலக சமாதானத்திற்கு ஜனாபிமானம்தான் சிறந்த மார்க்கமாகும். உலகில் அமைதியையும் சமாதானத்தையும் நிலைநிறுத்தி யாவருக்கும் இதமே செய்ய விரும்பும் ஒவ்வொருவரும் ஜனாபிமானத்தைக் கைக் கொள்ளவேண்டும்; தன்னைப்போல் பிறரைப் பாவிக்கவேண்டும். தன்றேயத்தின் நன்மையை விரும்பும் அதேசமயத்தில் பிற தேயத்தின் நன்மையையும் விரும்புவதுடன் பிறருக்குத் தீங்கு வராமலும் பார்த்துக்கொள்ளவேண்டும். தேசாபிமானம் என்ற குறுகிய நோக்கத்தின் காரணமாகவே இத்தாலி அபிசீனியாவின் மீது படையெடுத்து தன்றேய மக்களின் நன்மைக்காக ஏழை அபிசீனியருக்கு கஷ்டத்தையும் நஷ்டத்

ளதயும் விளைவித்தது. இதே தேசாபிமான உணர்ச்சிதான் இன்றைக்கு ஐரோப்பியரை, ஒருவருக்கொருவர் குரல்வளையை நெரித்துக்கொள்ளப்பகீரதப் பிரயத்தனம் செய்யத்தூண்டி இருக்கிறது. இதனால்தான் இஸ்லாம் மதம் தேசாபிமானம் என்ற குறுகிய நோக்கத்திற் கிடங்கொடாமல் ஜனபிமானம் ஜன ஊழியம் என்பதை வற்புறுத்துகிறது. இஸ்லாத்தின் இந்தப் போதனை இம்மதம் சத்திய சன்மார்க்கமென்பதையும், மிகவும் தாராள சிந்தையுள்ளதென்பதையும் அறிவிக்கிறது. மேலும், இஸ்லாத்தின் இந்தக் கொள்கையால் பந்து மித்திரர்களையோ, உற்றார் உறவினர்களையோ, தேசத்தையோ கவனிக்கப்படாது என்பதில்லை. அவரவருக்குச் செய்யவேண்டிய முறைப்பிரகாரம் அவைகளைச் செய்யவே இஸ்லாம் போதிக்கிறது. ஆதலின், ஜன சமூகத்திற்கு தீங்கு செய்யும் முறையிலுள்ள தேசாபிமானத்தையோ சமூகாபிமானத்தையோ இஸ்லாம் ஆதரிக்கவில்லை. இந்நாளிலுள்ள தேசாபிமானமானது பிறநாட்டாருக்குத் தொந்தரை செய்யத் தூண்டுகிறதேயன்றி, யாவரும் க்ஷேமமாக வாழவேண்டுமென்பதை ஆதரிக்கவில்லை. நம்முடைய இந்நாட்டிலுள்ள சகோதரர்களிற் சிலர், நம் நாட்டிற்கு வெளியிலுள்ள சகோதரர்களுக்கு நேரும் கஷ்டத்தைப் பார்த்து அனுதாபம் காட்டுவதைக்கூட தேசாபிமானத்திற்கு முரண் என மதித்து முஸ்லிம்களைத் தூற்றிவருவது மறைந்த விஷயமல்ல. ஆகவே, இஸ்லாம் மதம் தேசாபிமானத்தை ஆதரிக்கிறதெனக் கூறிவரும் சகோதரர்கள் இஸ்லாம் ஆதரிக்கிற தேசாபிமானம் எத்தன்மையது? இப்பொழுது நமது நாட்டில் சொல்லப்பட்டுவருகிற தேசாபிமானம் எத்தன்மைத்து என்பதைச் சிந்தித்துப் பார்ப்பார்களாக! நடுவு நிலைமையாக இருந்து களங்கமற்ற மனத்தவராக இக்காலத்தின் போக்கை ஆராய்ச்சி பண்ணுபவர் இக்காலத்தில் தேசாபிமானத்திற்குக் கொள்ளப்படும் பொருள் இஸ்லாம் மதத்தில் அனுமதிக்கப்பட்டதல்லவென்பதை உணர்ந்து கொள்வர். முஸ்லிம் சகோதரர்கள் தேசாபிமானம் என்ற பசப்பு வார்த்தைகளைக் கேட்டு மருண்டு, ஜனபிமானத்தையும் ஜன ஊழியத்தையும் மறந்துவிடலாகாதென்பதை மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

மிஃராஜின் சிறப்பு

எமது நபிகள் சர்தார், இரஸூல் அதிபர் காத்தமன் நபிய்யின் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தபா ரஸூல் (ஸல்) அவர்களுக்கு பூத ஜடலத்துடன் மிஃராஜ் என்னும் வானுலக யாத்திரை நிகழ்வுற்றது உண்மையே. இவ்வுண்மை நிகழ்ச்சியை நபிகள் பெருமான் (ஸல்) அவர்களின் அன்பார்ந்த ஸஹாபாக்களென்னும் உடன் வாசிகளும் மற்றும் உம்மத்தே முஹம்மதிய்யாவில் தலை சிறந்து விளங்கும் பேரறிஞர்களும் ஸூபிய்யாக்களென்னும் ஞான திலகங்களும் உண்மையென ஒப்புக் கொண்டுள்ளனர். மேலும் எம்பெருமானவர்களின் மஹத்துவச் சிறப்புக்குரிய மஹாப் பிரமாண்டமான அற்புதங்களில் இஃதோர் சிறந்த அற்புதமென்று மிக்க ஆனந்தத்துடன் விபரித்து இப்படிப்பட்ட ஒப்பற்ற திருஷ்டாந்தங்களை நன்கொடை நல்கி, பெருமானவர்களையும் அவர்களின் உம்மத்துகளையும் கௌரவித்த எல்லாம் வல்ல இறைவனே மகா தூயவனென்று துதி கூறி வருகின்றார்கள்? அல்ஹம்து லில்லாஹ்.

திரு மிஃராஜின் தத்துவம்

அல்லாஹு தஆலா மிகப் பெருமையாக தனது மகத்துவத்தை விபரித்துக்கூறி, தனது திருஷ்டாந்தங்களை காண்பிப்பதற்காக எம்பெருமானவர்களைமிஃராஜுக்கு அழைத்ததாக திருமறையில் கூறியுள்ளான்.

இத்துணைப் பெருமையுடன் கூறப்பெற்ற திருவசனத்தின் சக்தியை ஆராயுமிடத்து, மனிதர்களில் எவருக்கும் தெரிவிக்காத பரம இரகசியங்களை தனது திருத்தூதருக்குத் தெரிவித்து தனது நன்கொடைகளைப் பூர்த்தி செய்வதற்கு அழைத்ததாக இனிது புலனுகிறது. எனவே, எம்பெருமானவர்களை இப்பூத யாக்கையுடன் வானுலகுக்கு அழைத்துச் சென்றதில் அதியற்புதமான பரம இரகசியங்கள் அனேகம் அடங்கியுள்ளன.

சாதாரண உலக இயற்கைக்கு மாற்றமாக ஒரு சிறிதும் நடைபெறுதென நம்பிக் கெட்டுப்போன பலாஸிபர், தஹ்ரியர், நாஸ்திகர், நேச்சரியர்களின் அடிப்படையான தப்பெண்ணத்தையொழித்து இறைவன் சகல தத்துவமுடையவன்; அவன் தத்துவத்திற்குள் எல்லாம் அடங்கியுள்ளன; நபிபெருமானவர்களை ஸ்தூல யாக்கையுடன் வானுலகுக்கு அழைத்தது போல் அவன் நாடின விஷயங்களை 'உண்டாகுக' என்னும் ஓர் வார்த்தையால் நிறைவேற்றும் ஆற்றலுள்ளவன் ; அதை அற்ப விஸ்வாஸத்தினுல் நிராகரிப்பது அஞ்ஞானமடமையென நிரூபிப்பதும் இதில் அடங்கியுள்ளன.

நபிகள்பெருமானுர் (ஸல்.) அவர்கள், ஸ்தூலசரீரத்துடன் வானுலகிற்கு அழைக்கப்பட்டு அல்லாஹ்வின் அனேக பரம இரகசியங்களை அறிவிக்கப்பெற்றவர்களும், இறைவனுடன் வசனிக்கும் தன்மைவாய்ந்தவர்களும், இறைவனுக்கு அதிகப்பிரியமும் அவனிடம் முடிவான அந்தஸ்தையுடையவர்களுமாதலால் அவர்களையும் அவர்களின் திருஷ்டாந்த மகிமைகளையும் மறுப்பது இறைவனையே மறுப்பதாகுமாகலான் அன்னவர் இறைவனின் கோபத்திற்காளாகி நரக சிக்ஷை விதிக்கப்பெறுவார்களென்பதை அறிவுறுத்தலும் இதிற் பொதிந்துள்ளன.

தன் சுய சக்திப்பிரகாரம் விண்ணுலகிற்குச் செல்ல முடியாத ஒருவர், வெகு விமரிசையாக வானுலகத்திற்கு அழைக்கப்பெற்று இறைவனின் பரம இரகசியங்களைத் தெரிசித்து வருவதானுல் அவர் இறைவன் சமூகத்தில் மிக உயர்ந்த அந்தஸ்திலுள்ளவர் என்றும் அவரால் கூறப்பெறும் நரகம் சுவர்க்கம் ஹௌல் முதலிய மற்றும் மறுமை விஷயங்கள் யாவும் உண்மையென்றும் சாதாரண மனிதர்களின் புலனுக்கெட்டாத பரம இரகசியங்களடங்கிய சிருஷ்டிப் பொருட்கள் விண்ணுலகில் சிருஷ்டிக்கப்பெற்றிருக்கிறதென்றும் நம்புவது கடமையாகும். ஆதலின் அப்படிப்பட்ட விஷயங்களை நிராகரித்துப் பரிகாசம் புரியும் ஈனமதியாளர் இறைவனின் விரோதிகளாகும் என்பதை எண்பித்தலும் இதனுள் அடங்கியிருக்கின்றன.

இறைவன் திருமறையில் அருளுவதாவது: இந்த (மூன்று) விதத்தை யொழிய (அல்லா) எந்த மனிதனுடனும் வார்த்தையாடமாட்டான். (1) அவனுக்கு மறைவாக வஹீயின் மூலம் ஏதேனும் அறிவித்தல். (2) திரை மறைவில் ஓர் விஷயத்தைக்கேட்பித்தல். (3) தனது அமரரையனுப்பி அவர், அவனின் உத்தரவின் பேரில் அம்மனிதனுக்குத் தூதைச்சேர்த்து வைத்தல் (ஆக மூன்றுவகையாம்)

இவ்வசனத்தில் குறிப்பிட்ட பிரகாரம் 1-வது விதத்தைக் கொண்டு நபிகள் நாதர் (ஸல்.) அவர்களுக்கு ஹதீதுகள் அருளப்பட்டன. 2-வது விதத்தைக் கொண்டு மிஃராஜின் இரவில் ஆதிநாயனைத் தெரிசித்து பெறற்கரிய அநேக இரகசியங்களைப் பெற்ருர்கள். 3-வது விதத்தைக்கொண்டு குர்ஆன் ஷரீபென்னும் நிகரற்ற அற்புத வேதம் அருளப்பட்டது. இதில் இரண்டாவது விஷயம் மிஃராஜின் சம்பவத்தைப் பொதிந்துள்ளதால் அதன் பெருமையைக் குறித்துச் சிறிது விளக்குவாம்.

ஹஸ்ரத் மூஸா நபியவர்களுடன் அல்லாஹ்தஆலா தூர் என்ற மலையில் வசனித்தான். ஹஸ்ரத் ஈஸா நபியவர்களை வானுலகத்துக்கு உயர்த்திக்கொண்டான். இதர பல நபிமார்களுக்குப் பற்பல முஅஜிஸாத்துகளென்னும் புதுமைகளைக்கொடுத்து மக்களில் அவர்களைக் கௌரவித்தான். எனினும் சம்பூரண தூதரான எம்பெருமானவர்களை நபி என்னும் பட்டத்திற்கு முடிவுடையவர்களாகவும், எல்லா தூதர்களுக்கும் அதிபதியாகவும் அமைத்துள்ளதால் அந்த எல்லா நபிமார்களுக்கும் கொடுத்துள்ள அற்புதங்களைவிட உயர்வான முறையில் கொடுத்தருளி கௌரவிப்பான் வேண்டி ஏழாவது வானத்திற்குமேல் பூத ஜடலத்துடன் சர்வ மேதை மரியாதைகளுடன் அழைத்து சம்பாஷித்தது அவர்களின் உயர்வான பெருமையை

நன்குணர்த்துகிறது. இவ்வழைப்பில் பெருமானவர்களின் மேன்மை மிக்க ஜடலமும் சம்பந்தப்பட்டிருத்தல் அவசியமாகும். இன்றேல் சர்வ திரு தூதர்களிலும் சிறந்தவர்களெனக் கூறல் பொருத்தமாகாது.

நபிமார்களின் சிஷ்யர்களான வலிமார்களிற் பலர் கஷ்பு என்னும் ஞான திருஷ்டியினுலும் ஆன்ம தத்துவத்தின் பிரயாணத்தினுலும் அநேக இரகசியங்களைத் தெரிந்துகொண்டிருக்கும்போது, அவர்களின் நாயகமான நபிகள்பெருமானவர்களை சரீரத்துடன்கூடிய இத்துணைப் பெருமையுடன் அழைக்காவிடின் இறைவனின் சொல் வன்மைக்கும் சர்வதத்துவத்திற்கும் பொருத்தமுமாகா, அர்த்தபுஷ்டியுமாகா. ஆகவே, இறைவனின் வார்த்தைக்கு அவனின் தத்துவத்திற்குத் தக்கவாறு அர்த்தம்செய்தால் இப்பூதவுடலத்துடன் அழைத்தானென்றே ஏற்படுகிறது. இஃதே பொருத்தமாகவும் அழகாகவும் இஸ்லாமியச் சட்டத்திற்கு நேர்மையாகவும் காணப்படுகிறது. ஆகவே, ஹஸ்ரத் மூஸா (அலை.) ஹஸ்ரத் ஈஸா (அலை.) ஆகிய சர்வ நபிமார்களின் பெரும் பதவியை விடவும் எமது நபிகள் நாதர் (ஸல்.) அவர்கள் சிறந்த பெரும் பதவியை உடையவர்களென்பது, வானுலகுக்கு சரீரத்துடன் அழைக்கப்பெற்ற இம் மிஃராஜ் நிகழ்ச்சியினுலும் ருஜுவாகிறது. எனவே, சகல சௌபாக்கிய சம்பூர்ண தயாநிதியான எம் வள்ளலின் பெருமை குன்றின் மேலிட்ட மங்கா மணி விளக்கேபோல் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது.

மிஃராஜின் சுருக்க வரலாறு

திருமக்காவில் நபிகள் நாதர் (ஸல்.) அவர்கள் சமூகம் ஜிப்ராயீல் (அலை.) 'புராக்' என்னும் ஒரு நூதன வாகனத்துடன் இரவில் தோன்றினர். அவ்வாகனத்தின்மீது நபி பெருமானவர்கள் ஏறி 'பைத்துல் முகத்தஸ்' வந்து அவ்வாகனத்தை ஓரிடத்தில் கட்டிவிட்டு ஆண்டு குழுமியிருந்த நபிமார்களுக்கு இமாமாக நின்று தொழுகையை நிறைவேற்றியபின் அங்கிருந்து மேலுலகு அழைத்துச் செல்லப்பட்டார்கள். வானங்கள்தோறும் வதியும் வானவர்களும் நபிமார்களும் இறுதி தூதர் (ஸல்.) அவர்களின் வருகையைத் தெரிந்து ஆனந்தமெய்தி நல்லாசி கூறி அதற்கு மேலுள்ள வானங்கட்கு உபசரித்தனுப்பினர்கள். இவ்வாறு ஏழு வானங்களையும் கடந்த பின், 'ஸித்ரத்துல் முன்தஹா' என்னுமோரிடத்தில் ஜிப்ராயீல் (அலை.) நின்றுகொண்டு "இதற்கப்பால் செல்லத்தக்க அந்தஸ்து எனக்கு இல்லை" யென்று கூறிவிட்டார்கள். மேலும் அவ்விடத்தில் ஜிப்ராயீல் (அலை.) அவர்களின் அஸல் சொரூபத்தையும் நபியவர்கள் தெரிசித்தார்கள். பின்னர் நபி பெருமானவர்கள் அவ்விடமிருந்து அதற்கு மேல் அழைக்கப்பெற்று, நாவாலும் எழுதுகோலாலும் விபரிக்க முடியாத அத்துணைப் பெரிய பரம இரகசியங்களையெல்லாம் அறிவிக்கப்பெற்றுர்கள். இவ்வாறுன அநேக அதியற்புத விஷயங்களைக் கண்டு களிகூர்ந்து இறைவனுடன் வார்த்தையாட அவனை தெரிசித்து அதன் ஞாபகார்த்தமாக ஐந்து நேரத்துத் தொழுகையை வெகுமதியாகப் பெற்றுவந்தார்கள். (இதிலிருந்து தொழுகை என்னும் வணக்கம் எத்துணைப் பெரும் பதவியையுடையதென்பது இனிது புலனுகும்.) எனவே, நிகரற்ற இப்பெரும் பதவியை இப்பூத யாக்கையுடன் பெற்று வந்த நபிகள் பெருமான் (ஸல்.) அவர்களின் உன்னதப் பெருமையை யாரால் விரித்துரைத்தல் சாலும். என்னே எம் வள்ளலின் பெருமை!

முஹத்திஸ் இப்னுகதீர் (ரஹ்.) இந்த மிஃராஜ் சம்பவத்தை வலியுறுத்தும் சரித்திரச் செய்தி யொன்றைக் குறிப்பிடுகிறுர்கள். அதை இவண் விபரிப்பது உசிதமென கருதுகின்றேம்.

மிஃருஜ் சம்பவம் நிகழ்ந்து ஹஸ்ரத் அபூ ஸுப்யான் (ரலி) அவர்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவுவதற்கு முன் அவர் ரூம் தேசச் சக்கரவர்த்தியான ஹிர்கல் மன்னனிடம் சென்றிருந்த காலை, நபியவர்களின் விஷயங்களைப்பற்றி ஹிர்கல் இடம் அவர்கூறியதில் மிஃராஜ் சம்பவமும் ஒன்றுகும். இச்சம்பவத்தை அரசனிடம் அபூ ஸுப்யான் (ரலி) விபரித்தது, அவ்வரசர் நபிபெருமானவர்களை, பூதஜடல மிஃராஜ் சம்பவத்தில் பொய்யரெனக் கூறி விடுவார் என்பதற்காம். அவ்வமயம் அச்சபையில் விஜயம் செய்திருந்த பைத்துல் முகத்தஸ் பாதிரியா ரொருவர் எழுந்து அவ்விரவை நான் நன்கறிவேனென்று கூறினர். அதற்கு "ஹிர்கல்" அரசர் பாதிரியாரை விளித்து நீர் எவ்வாறு அறிவீரெனக் கேட்டபோது, பாதிரியார் நவின்றதாவது: "யான் பைத்துல் முகத்தஸ் தேவாலயத்தின் கதவை அடைக்காமல்

ஒருபோதும் நித்திரைக்குப் போவதில்லை; குறிப்பிட்ட அவ்விரவில் நான் எல்லா வாசற் கதவுகளையும் அடைத்துவிட்டு எஞ்சியிருந்த ஒரு வாசற் கதவை அடைக்க முயன்றேன்; அது அடைக்க முடியவில்லை; எல்லா தேவாலயப் பணியாளர்களையும் சேர்த்து அடைப்பதற்கு முயற்சித்தும் இயலவில்லை; சில தொழிலாளர்களை அழைத்து அந்த வாசலை அடைக்கும்படி விரும்பினேன்; தொழிலாளர்கள் அதை நன்றாய் ஊன்றிப் பார்த்து இதை காலையில்தான் பார்க்க முடியும்; இப்போது எவ்விதத்திலும் அடைக்க முடியாத நிலைமையிலிருக்கிறதெனச் சொல்லிவிட் டகன்றனர். அப்பால் காலையில் நான் அந்த வாசலைப் போய்ப் பார்த்தபோது குறையொன்று மின்றி சரியாக இருக்கக் கண்டேன். நபிமார்களின் சவாரிகளைக் கட்டக்கூடிய பள்ளியின் சமீபத்திலுள்ள கல்வில் துளை ஒன்றைப் பார்த்தேன் அதில் நாற்கால் மிருகம் கட்டப்பட்டிருந்த குறி தென்பட்டது. இந்த ஆச்சரியச் சம்பவத்தைப் பார்த்ததும் நான் எனது வகுப்பார்களிடம் "நிச்சயமாக ஏதோ ஒரு நபி ஈண்டு விஜயம் செய்து தொழுதிருக்கிறார்" என்று கூறினேன்" எனச் சொன்னார். எனவே, நபிகள் பெருமானவர்களைப் பொய்யராக்கத் துணிந்ததற்கு மெய்யரென ருஜுவாய்விட்டது. என்னே மாக்ஷி மிக்க நபியவர்களின் மிஃராஜின் மகிமை!

காபிர்களில் நபிகள் பெருமானவர்களைத் தொந்தரவு செய்து பரிகசித்துக் கொண்டிருந்தவர்களுக்கு "இவர்கள் சர்வதத்துவமுடைய அல்லாஹ்வின் திருத்தூதர்; இவர்களை அழிக்கவோ, அடக்கவோ எவர்களாலும் இயலாது; இவர்களை பூதயாக்கையுடன் வானுலகுக்கு எல்லாம் வல்ல அல்லாஹ் மிக்க விமரிசையுடன் அழைத்ததிலிருந்தும், உங்கள் ஐயவினாவிற்குப் பதிலிறுப்பதற்காக பைத்துல் முகத்தஸ் தேவாலயத்தை உயர்த்தி காட்டப்பட்டதிலிருந்தும் இவர்களின் மகத்துவத்தை உணர்ந்து கொள்ளல் வேண்டும்" என்னும் அச்சமூட்டி எச்சரிக்கும் குறிப்புரைகளும் இதிற் காணக் கிடக்கின்றன.

திருமறையில் மஸ்ஜிதுல் ஹறாமென்றும், மஸ்ஜிதுல் அக்ஸா வென்றும் கூறப்பட்டிருப்பதும் முக்கியமாய் கவனிக்கத்தக்கதாகும். ஹஸ்ரத் இப்ராஹீம் நபியவர்களின் சந்ததிகளில் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை.) அவர்களுக்கு அரபப்பகுதியும் ஹஸ்ரத் இஸ்ஹாக் (அலை.) அவர்களுக்கு ஷாம் தேசப்பகுதியும் கொடுக்கப்பட்டிருந்தது. ஹஸ்ரத் இஸ்ஹாக் நபியவர்களின் புத்திரர்களில் நபிமார்கள் தோன்றி மஸ்ஜித அக்ஸா (மைத்துல் முகத்தஸ்)வுக்கும் ஹஸ்ரத் இஸ்மாயீல் நபியவர்களின் புத்திரர்களான அரபிகள் மஸ்ஜித ஹறா (அரப், மக்கா) முக்குமட்டிலும் காரிய கர்த்தர்களாக இருந்தும் வந்தார்கள். நபிகள் நாதர் (ஸல்.) அவர்களை இறைவன் சர்வ நபிமார்களின் தன்மைகளிலும் பரிபூரணங்களிலும் ஒருங்கே அமையப்பெற்ற அகில உலக நபியாக ஆக்கியிருந்ததால் அப்பெருமான் கஃபாவின் காரியகர்த்தராயிருந்தது மட்டுமின்றி பைத்துல் முகத்தஸ் என்னும் பழைய கிப்லாவுக்கும் காரியகர்த்தராக இருக்க வேண்டியது அவசியமாக இருந்தது. ஆதலின், பைத்துல் முகத்தஸில் எல்லா நபிமார்களுக்கும் இமாமாக நின்று தொழுகை புரிந்த பேர் கிட்டிற்று. ஆகவே, ஹஸ்ரத் இப்ராஹீம் நபியவர்களின் சந்ததியார்களான இரு பிரிவாரின் ஆத்மார்த்த நன்மைகளும் ஹகீகத்தெ முஹம்மதியாவில் ஒன்று சேர்க்கப்பட்டு பெருமைப்படுத்தப்பட்டது என்னும் உணர்த்தலும் இந்நிகழ்ச்சியில் பொதிந்துளது. ஈண்டு ஓர் குறிப்பு கவனித்தற் குரியது:

எமது நபிகள் சிரேஷ்டர் (ஸல்,) அவர்கள் சர்வ நபிமார்களிலும் சிறந்தவர்களென்று அவர்களின் உயர்பதவியை காட்டுவதனால் மற்ற நபிமார்களை இழிவுப்படுத்தினதாகக் கருதிவிடற்க. எல்லா நபிமார்களும் இறைவனால் தெரிந்தெடுக்கப்பட்டு மற்றவர்களை பரிசுத்தப்படுத்துவதற்காக அனுப்பப்பட்டவர்கள்; பாவங்களை விட்டு தூய்மையாக்கப்பட்டவர்கள். அப்படிப்பட்டவர்களை இழிவுப்படுத்தவோ குறை பகரவோ, எவருக்கும் அதிகாரமிலது. இங்ஙனமாக எவரேனும் அப்பரிசுத்தவான்களை குறை கூறுவாராயின் அன்னவர் சர்வஞானமுள்ள இறைவனால் பொறுக்கி எடுக்கப்பட்டவர்களை குறை கூறின தோஷத்திற்குட்படுவார்கள். ஆதலின் அன்னார் மதப்பிரஷ்டரெனக் கருதப்படுவார்களென்பதிலையமில்லை. இறைவன் திருக்குர்ஆனில் "நபிமார்களில் சிலர் சிலரைவிடச் சிறந்தவர்களென்று கூறியிருப்பதுடன், எம்பெருமானவர்கள் ஹதீது ஷரீபில், நான் எல்லா நபிமார்களிலும் பதவியில் சிறந்தவனென்றும் அருளியிருப்பதால் இந்த வள்ளலி ரஸூல் (ஸல்.) அவர்களின் வரிசைஎல்லோரையும்விடச் சிறந்ததென்பதை எண்பிப்பதுதான்

எமது நோக்கமேயன்றி வேறன்று. எமது இந்நோக்கம் இப்பூத ஜடல மிஃராஜினுலும் வெள்ளிமலைபோல விளங்குமென்பதி லைய மில்லை. நண்பர்கள் இக்குறிப்புரையைச் சிந் தையிலிருத்திக் கொள்வார்களாக.

காதியானிகளும் மிஃராஜும்.

இப்படிப்பட்ட மகா பெரிய திருஷ்டாந்த மான திரு மிஃராஜை விரல் விட்டெண்ணக் கூடிய ஒருசிலர், தங்களது விளக்கக் குறைவால் இது கனவென்றும், கஷ்பென்றும் கிளர்ச்சி செய்து நபிகள் பெருமானவர்களின் பென்னம் பெரிய இம்மஹத்துவத்தைப் புறக்கணிக்கத் துணிகின்றனர்கள். தங்கள் மூட நம்பிக்கையால் உண்மையை மறைத்து இவ்வாறு குதர்க்கஞ் செய்வோர் முல்ஹித் (மதமிழந்தவர்) போன்ற பெரும் பாதகர்களென்று எமது உம்மத்தெ முஹம்மதியாவில் புகழ்செறிந்த மேதாவிகள், தங்கள் உயர்தர கிரந்தங்களில் தக்க நியாயங்க ளுடன் சாற்றியுள்ளார்கள். உதாரணமாக தப் ஸீர் பத்ஹுல் பயான், தப்ஸீர் ரூஸீ, தப்ஸீர் இப்னு கதீர், பிக்ஹ அக்பர், ஷரஹ் அகாயித் நஸபீ, போன்ற கிரந்தங்களாம்.

இதர மதஸ்தர்கள், தங்கள் குருநாதர்களுக் குத் தகாத கௌரவங்களை கற்பனை செய்து அவர்களின் மகிமையைச் சிறப்பித்துக் காட்டத் துணிகின்றபோது, இம்மக்கள் உள்ள கௌர வத்தையும் ஒழிக்க முயலுவது முஸ்லிம்களுக் கேற்பட்ட துரதிருஷ்ட வசமென்பதிற் சந் தேகமில்லை. இச்செயல் முஸ்லிம்களைப்போல் நடித்து அடுத்துக்கெடுக்கும் மித்திரபேதத்தை யொழிய வேறொன்றுமில்லையென்பது திண் ணம்.

காதியானி மதத்தை ஸ்தாபித்த மிர்ஸா குலாம் அஹ்மது என்பாரும், அவரைச் சார்ந்த ஒரு சிலரும் மிஃராஜ் விஷயத்தில் மிக்க விந்தை யான கோட்பாடுடையவர்களாய்க் காணப்படு கின்றனர். இன்னவர்கள், மாசற்ற திருமறை யையும், நபிகள் பெருமானவர்களின் திருவச னங்களையும், நபிகள் நாயகமவர்களின் பரம விஸ்வாஸிகளான தூய உளம் படைத்த ஸஹா பாக்கள் திருஷ்டாந்த பூர்வமாகக் கண்ட காக்ஷி களைக் குறித்த கொள்கைகளையும் தக்கநியாயா தாரத்துடன் நோட்டமிடாது கொண்டதே கொள்கை யென்னும் கூற்றுப் பிரகாரம் மறுத்து வருவதையும், அவர்கள் தங்களின் இந்நம்பிக்கைக்கு காட்டும் ஆதார ஆதாயங்கள் எத்துணைப் பொருத்தமானதென்பதையும், அவர்களின் கூற்று முன்னுக்குப்பின் முரண்பட் டிருப்பதையும் இதை வாசிக்கும் உண்மை மிக்க நண்பர்கள் நிஷ்பக்ஷபாத நியாயத்துடன் நோட்டமிடுவதற்காக அவைகள் கீழே வரையப் படுகின்றனவாதலால் ஊன்றி கவனிக்க விரும்பு கிறோம்.

(1) மிர்ஸாஜீ கூறுகிறார்: ஒரு மனிதன் இந்த மண் சரீரத்தோடு குளிர்ந்த ஆகாயம் (அல்லது வான மண்டலம்) வரை சேர்ந்துவிடு கிறதை பழைய புதிய பல்ஸபா (ஸயன்ஸ் இயற் கைச் சட்டம்) ஏகோபித்துக் கூடாதென ஸ்தா பிக்கிறது. மேலும் சில மலைகளின் சிகரங்களி லுள்ள காற்று சுகத்துக்குக் கெடுதலென்றும், அதில் ஜீவித்திருக்க முடியாது என்றும் இயற் கைச் சாஸ்திர புதிய ஆராய்ச்சியால் தீர்மானிக் கப்பட்டுப் போயிருக்கிறது. ஆதலின் இந்த சரீ ரம் சந்திரகோளம் அல்லது சூரியகோளம் வரை சேருகிறதென்பது எப்படிப்பட்ட வீணெண்ணமாகும். (இஸாலா 912 ப.)

மிர்ஸாஜீயின் இக்கூற்றினால், மனிதன் ஆகா யத்தின்மேல் போக சாத்தியப்படாதென்றும் அவ்விடத்திலுள்ள குளிர் முதலியவைகளால் பிழைத்திருக்க முடியாதென்றும் தெரியவரு கிறது. இக்கூற்று இறைவனின் மாபெரும் தத்துவத்தையும் தற்கால விஞ்ஞான சாஸ்திரி களின் ஆராய்ச்சியையும் அறியாத்தன்மை யென்றுகாட்டுவதாக இருக்கிறது. இனி அடுத்த விஷயத்தைக் கவனிப்போம்,

(2) இந்த மண்சரீரத்தோடு வானுலகத்துக் குச் செல்லமுடியாதென்றால், பின்னர் நபிகள் நாதர் (ஸல்.) அவர்கள் இந்த சரீரத்துடன் வானுலகத்துக்கு எப்படிப் போகமுடியும் என்ற கேள்விக்கு மிர்ஸாஜீ பதில் கூறுகிறார்.

மிஃராஜ் பிரயாணம் இந்த அசுத்த சரீரத் துடன் நடைபெறவில்லை. மேலும் அது மிக உயர்வான பதவியைச் சார்ந்த கஷ்பு (ஞான திருஷ்டி) ஆகும். அதை உண்மையில் விழிப் பில் நிகழ்ந்ததென்றே சொல்லவேண்டும். இவ் வாறான கஷ்புடைய நிலைமையில் மனிதன் ஒரு ஒளியின் சரீரத்தைத் தாங்கி, தனது "நப்ஸெ நாத்திகா" (ஆன்மதத்துவத்தின்) வின் தகுதிப் பிரகாரம் வானுலகங்களில் பிரயாணஞ் செய்ய முடியும்....உண்மையில் இந்தப்பிரயாணம் கஷ் பாக இருந்தது. அது விழிப்பின் நெருங்கிய பத விக்கு மிக ஒப்பாக இருக்கிறது. மேலும் ஒரு விதத்தில் விழிப்பில் நடந்ததாகவே யிருக்கி

றது.நான் இதன் பெயரை ஒருபொழுதும் கன வென்று வைக்கமாட்டேன். (இஸாலா 912. ப.)

இதில் மிர்ஸாஜீ "மிஃராஜ் கஷ்பென்றும் ஆனல் விழிப்பில் நடந்ததென்று சொல்லவும் முடியுமென்றும், ஒளியின் தேகத்தினல் வானுலகங்களில் சுற்றுப்பிரயாணம் செய்தல்கூடுமென்றும்" புகல்வதிலிருந்து அவர் மிஃராஜின் உண்மையில் பட்டும்படாமலும் கூறுவதாகத் தெரிகிறது. சில சந்தர்ப்பங்களில் மிர்ஸாயும் அவரது சிஷ்யர்களும் நாங்கள் மிஃராஜை நிராகரிப்பதில்லை; அதை ஒப்புக்கொள்கிறோம் என்பதும் இந்த அர்த்தத்தில் தானென்பதை நண்பர்கள் இவ்விடத்தில் நன்குணர்தல்வேண்டும். மிஃராஜ் என்ற பெயரைக் காதியானிகள் கூறுவதைக்கேட்ட மாத்திரத்தில் முஸ்லிம்கள் ஏமார்ந்து விடலாகாது. எனினும் முந்தினவசனத்தினின்றும் இவ்வசனம் இஸ்லாமியக் கொள்கைக்கு சற்று சாதகமாகத் தெரிகிறதென்பது மட்டும் குறிப்பிடற்பாலது.

(3) பூத ஜடலத்துடன் வானத்தின்மீது ஏறிப்போகிறதைக் குறித்த ஓர் ஆக்ஷேபத்துக்கு மிர்ஸாஜீ அளித்துள்ள பதிலாவது:

முதலாவது மனிதன் பூத ஜடலத்துடன் வானத்தின்மீது ஏறிப்போவது அல்லாஹுதஆலாவின் வல்லமையைவிட்டு கொஞ்சமும் தூரமானதல்ல வென்னும் இந்தவிடையே எமது சார்பாகப் போதுமானது (சஷ்மயெ மஅரிபத் வா. 2. ப. 219) இக்திலாபாத்தெ மிர்ஸா 16. ப.)

இவ்வசனத்தில் அல்லாஹ்வுக்கு எல்லா வல்லமையும் உண்டு, அவன் விரும்பினுல் நடத்திக் காட்டலாம் என்றும், அற்புத மகிமையுடன் கூடிய வானுலகப் பிரயாணம் இப்பூத யாக்கையுடன் நிகழ்பெறுவது சாத்தியம் என்றும் கூறுகிறார். மிர்ஸாஜீயின் இவ்வசனத்தில் நாயகமவர்களின் ஸ்தூல சரீரத்துடன் கூடிய மிஃராஜுக்கு தக்க அநுகூலம் ஏற்படுகிறது. இனி படிப்படியாக என்ன கூறுகின்றாரென்று பார்ப்போம்:—

(4) மேலும் நபிகள்பிரான் (ஸல்.) அவர்கள் தானே தங்களது கண்ணால் கண்டவரலாற்றை விவரிக்கிறார்கள். "எனக்கு நரகத்தைக் காட்டப்பட்டபொழுது நான் அதில் பெரும்பாலும் ஸ்திரீகளைப் பார்த்தேன்." (இஸாலா 146. இக்திலாபாத்தெமிர்ஸா 16. ப)

இவ்வசனத்தில் "நபிகள் பெருமான் (ஸல்.) அவர்கள் மிஃராஜின் நிகழ்ச்சியில் தங்கள் கண்கண்ட வரலாற்றை விவரிக்கிறார்களென்பதிலிருந்து மறைமுகமாக ஸ்தூலயாக்கை மிஃராஜை மிர்ஸாஜீ அங்கீகரிக்கிறாரென்பது இனிது புலனாகிறது. இன்னும் பார்ப்போம்.

(5) மிர்ஸாஜீ விள்ளுகிறார்: நபிகள் நாயகமவர்களின் சரீரத்தை 'ரபஉ, உயர்த்தப்பட்ட விஷயத்தில் அதாவது, அவர்களை பூத ஜடலத்துடன் மிஃராஜின் இரவில் வானுலகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்கள் என்னும் விஷயத்தில் கிட்டத்தட்ட ஸஹாபாக்களனைவரின் விஸ்வாஸமும் ஒன்றித்ததாகவே இருந்தது.... ....அங்ஙன மிருந்தும் ஹஸ்ரத்ஆயிஷா (ரலி.) அவ்விஷயத்தை ஏற்றுக்கொள்ளாமல் அதை ஒரு அழகான கனவென்று சொல்லுகிறார்கள். (ஆயினும்) எவரேனும் ஹஸ்ரத் ஆயிஷா ஸித்தீகாவின் பெயரை (நவூதுபில்லாஹ்) மார்க்கமிழந்தவர்களென்றும் வழிதவறினவர்களென்றும் கூறவில்லை. மேலும் இஜ்மாவுக்கு முரணாக (அவர்கள்) பேசியிருந்தும் அவர்களைத்தொந்தரவுசெய்யமுயலவுமில்லை. (இஸாலா 1006. ப)

மிர்ஸாஜீபின் இவ்வசனத்தினால் கீழ்கண்ட விஷயங்கள் ஸ்திரமாகின்றன. (1) மிஃராஜ் இரவில் நபிகள் நாயகம் (ஸல்.) இப்பூத ஜடலத்துடன் வானுலகுக்கு உயர்த்தப்பட்டார்களென்னும் விஷயத்தில் சத்தியசீல உத்தமர்களென்னும் ஸஹாபாக்களனைவரின் விஸ்வாஸமும் ஒன்றித்ததாகவே இருந்தது. (2) ஹஸ்ரத் ஆயிஷா (ரலி.) அவர்கள்மட்டும் அதை ஏற்றுக்கொள்ளாமல் கனவென்று கூறுகிறார்கள். (3) இதனல் அவர்களை எவரேனும் வழிகெட்டவர்களென்று கூறத்துணியவில்லை. (4) ஸஹாபாக்களின் இஜ்மாஉ (ஏகோபித்த ஒற்றுமை) இதில் உண்டாயிருந்தது. ஆயினும் ஆயிஷா (ரலி.) அதற்கு விரோதமாகத்தான் பேசினார்கள் என்பதாம்.

எம் பெருமானவர்கள் ஸ்தூல தேகத்துடன் வானுலகப் பிரயாணம் செய்ததைக் குறித்து மிர்ஸாஜீ பற்பலவாறாக அப்படியும் இப்படியும் மழுப்பி மழுப்பிக் கூறி கடைசியாகத் தமது ஆராய்ச்சியின் முடிவுரையையும் தெளிவாகக் கூறிவிட்டதற்காக நாம் எல்லாம்வல்ல இறைவனைப் புகழ்கின்றோம். ஸ்தூல சரீர மிஃராஜை மழுப்ப வந்தவரின் வாயினாலேயே அதன் உண்மை புலனாய்விட்டது. என்னே மாக்ஷிமிக்க மிஃராஜின் பெருமை.

எம்பெருமானவர்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ள சரீர சம்பந்தமான மிஃராஜைப்பற்றி முஸ்லிம்களது கொள்கையின் பலமும், காதியானி மதக் கொள்கையின் பலஹீனமும் மிர்ஸாஜீயின் வசனத்தின் மூலமாகவே யாவருக்கும் தெரிந்துவிடுமென்பதி லையமில்லை.

நபிகள் பெருமானவர்கள் பூதயாக்கையுடன் வானுலகுக்கு உயர்த்தப்பட்டார்கள் என்பதில், ஸஹாபாக்களனைவரும் ஏகோபித்த கொள்கையுடையவர்களாயிருந்தார்களென்று மிர்ஸாஜீ ஒப்புக்கொள்கிறார். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் காலத்தில் ஸஹாபாக்கள் எத்தனை பேர்கள் இருந்தார்களென்பதை கவனிப்போம். ஸஹாபாக்களின் தொகை என்னவென்பதை நாம் மிர்ஸாஜீயின் வார்த்தையிலிருந்தே தருகிறோம். அவர் கூறுகிறார்: நபிகள் நாதர் (ஸல்.) அவர்கள் இவ்வுலகைவிட்டுச் செல்லும் பரியந்தம் உண்மை மனதுடன் ஈமான் (விஸ்வாஸம்) கொண்டவர்களின் தொகை ஒன்றரை இலக்ஷத்தைவிட அதிகமில்லை. (லமீமா பராஹீன் 5 வா. 183 ப.)

இந்த ஒரு இலக்ஷத்திற்கு மேற்பட்ட-பக்தி மிக்க ஒன்றரை இலக்ஷம் ஸஹாபாக்களின் கொள்கையும் சரீர சம்பந்தமான மிஃராஜை உறுதிப்படுத்துவதானால் இது எத்தகைய மஹா உயர்ந்த அந்தஸ்துக்குரிய கொள்கையாகுமென்பதை இதை வாசிக்கும் நண்பர்களே யூகித்துக்கொள்ளலாம். எனவே, ஒன்றரை இலக்ஷம் உத்தம சீலர்களான ஸஹாபாக்கள் ஏகோபித்தக் கொள்கையான பூத ஜடல மிஃராஜை எமது முஸ்லிம்கள் ஒப்புக்கொண்டு விஸ்வாஸித்து வருகிறார்களென்பதை இதை வாசிப்பவர்கள் நன்குணர வேண்டும். ஆதலின் மிர்ஸாஜீயின் கூற்றுப் பிரகாரம் இக்கொள்கை இஸ்லாத்தில் ஓர் ஜீவநாடி யென்பதிற் கிஞ்சித்தும் சந்தேகமில்லை.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி.) இத்திருமிஃராஜை நிராகரித்து கஷ்பென்றும் கனவென்றும் கூறுகிறார்களென்பதை நம்ப முடியவில்லை. ஒன்றரை இலக்ஷம் ஸஹாபாக்களின் ஒன்றித்த கொள்கைகளை ஹஸ்ரத் ஸித்தீக்கா (ரலி.) அவர்கள் நிராகரிப்பார்களா வென்பது மிக மிக குறிப்பிடற் பாலது. ஹஸ்ரத் ஆயிஷா நாயகியவர்கள், மறுமையில் சரீரத்துடன் எழுப்புவதையும் ஹஸ்ரத் ஈஸா நபியவர்களை நாயகம் அவர்கள் பக்கத்தில் அடக்கம் செய்வதையும் மற்றும் பல முக்கிய விஷயங்களையும் திருஷ்டாந்த பூர்வமாக நம்பி திடமாக விவரிக்கும்போது இத்திருமிஃராஜை அதிலும் குர்ஆனையும் ஹதீதையும் நன்கு சதாவும் பாராயணஞ் செய்தவர்களுள்பட இலக்ஷத்திற்கு மேற்பட்ட ஸஹாபாக்களின் ஒன்றித்த விஸ்வாஸத்தை மறுத்தார்களென்பதை பகுத்தறிவு ஒரு சிறிதும் ஏற்றுக்கொள்வதற்கில்லை யென்பது திண்ணம்.

மேலும் இப்பூதஜடல மிஃராஜை ஒப்புக்கொண்டதி னிமித்தமே தங்கள் தந்தையான ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி.) அவர்களுக்கு 'ஸித்தீக்' என்ற மகிமைப் பெயர் கிட்டிற்றென்று ஹஸ்ரத் ஆயிஷா நாயகியவர்களே செப்பும்போது அவர்கள் சரீர மிஃராஜை ஏற்றுக்கொள்ளவில்லை யென்பது சரியான படிறும் கட்டுக் கதையுமாகத்தான் காணப்படுகிறது. அன்றியும் எமது உம்மத்தே உஹம்மதிய்யாவிலுள்ள மேதாவிகளான முஹத்திதீன்கள், ஆயிஷா நாயகியவர்கள் போரால் கூறப்படும் இந்த ஹதீது உண்மையுடையதா வென்று தூண்டித் துருவிப்பார்த்தபின் இது நம்பத்தகாத கட்டுப்பாடான வார்த்தை என்ற முடிவுக்கு வந்துள்ளார்கள். உதாரணமாக இமாம் மாலிக், காலீ இயால், அல்லாமா ஸர்க்கானீ, இப்னு தஹ்யா, அல்லாமா குஸ்தலானீ போன்றோர்களாம். எனவே இஸ்லாமியச் சட்டப் பிரகாரம் ஹஸ்ரத் ஆயிஷா நாயகியவர்கள் பேரால் கூறப்படும் வசனம் உண்மையல்ல; கட்டுப்பாடாகும் என்பது உறுதிப்படுகிறது.

ஆதலின் எவர் இத்திரு மிஃராஜை கனவென்றும் கஷ்பென்றும் கூறுகின்றனரோ அன்னார் ஒன்றரை இலக்ஷம் ஸஹாபாக்களின் கொள்கைக்கு முரண்பட்டோராவர். ஆதலின் அவர் இஸ்லாத்தில் தமது நிலை எத்தன்மையது என்பதை யூகிக்கக்கடவர்.

நேச்சரிய காதியானிகளில் ஒரு சிலர் தற்காலத்திய கலைஞானிகளில் ஒரு சிலரின் பெயரை குறிப்பிட்டு அவர் கனவென்றார்; இவர் கஷ்பென்றார். என்று கூற முன்வருகின்றார்கள். இஃதெல்லாம் ஆதார ஆதேயங்கட்குப் பொருத்தமற்ற வெறுங்கூற்றாகும். இவர்களெல்லாம் ஏனைய கலைஞானிகளைப் போன்ற சாதாரண மக்கள்தான்; இவர்களுக்கும் எமது ஸஹாபாக்களுக்கும் வானத்துக்கும் பூமிக்குமுள்ள வித்தியாசம் உண்டு; எமது ஸஹாபாக்களின் பெருமையை அறிந்தவர்கள் க்ஷணப்பொழுதும் அங்ஙனம் கூறத் துணியார்களென்பது திண்ணம். ஆதலின் அந்த ஆசீர்வதிக்கப்பெற்ற

ஸஹாபாக்களின் வாக்கியங்கட்குமுன் இவர்களின் முரண் வாக்கியம் ஒருசிறிதும் பயன் தராதென்பதை ஈண்டு செவ்வனே அறிவித்துவிட விரும்புகிறோம்.

ஆகவே, காதியானி லாகூரீ பார்ட்டியார்களும் இவர்களைத் தழுவிய தென்னாட்டு காதியானிகளும் தங்களின் நூற்களில் வரைந்துள்ள தவறுகளைத் திருத்திக்கொள்வதுடன் குதர்க்க வாதங்களையும் குயுக்திப் பிரசாரங்களையும் விட்டொழிப்பார்களாக. மேலும் எமது நபிபெருமானவர்களின் மிகச் சிறந்த அந்தஸ்தை மனதிலிருத்திக் கொள்வார்களாக.

முடிவாகக் கூறுமிடத்து, எமது நபிய்ய கரீம் (ஸல்.) அவர்களுக்கு ஒரு நபிமாருக்கும் கொடாத அப்படிப்பட்ட மகா சிறப்புவாய்ந்த மகிமையைக் கொடுத்து அவர்கள் எல்லா நபிமார்களிலும் உன்னதப் பதவி வாய்ந்தவர்களெனக் கௌரவித்த எல்லாம்வல்ல அல்லாஹ்வைப் புகழ்ந்து போற்றுவோமாக. அல்ஹமது லில்லாஹ்.

இஸ்லாத்தின் அற்புதச் சக்தி

இற்றைநாளில் விஞ்ஞான சாஸ்திரம் உச்சஸ்தானத்தை அடைந்து விட்டதென சிலர் கருதிவருவதால் அவர்கள் தங்களது யுக்தியையும் புத்தியையுமே பெரிதும் நம்பி இருந்து வருகின்றனர். இந்த இருபதாம் நூற்றாண்டில் யுத்தி சாஸ்திரங்கள் உச்சஸ்தானத்தை அடைந்து, மக்கள் அறிவையே பெரிதும் போற்றி முற்றிலும் நம்பி வருகிற இச்சந்தர்ப்பத்திலும்கூட உயிருள்ள மதமாகிய இஸ்லாம் தன்னுடைய உயிருள்ள அற்புதச் சக்தியால் யுக்திவாதிகளைத் திகைக்கும்படிச் செய்து கொண்டிருக்கிறது. இதனைப் பற்றிய சில சம்பவங்களை இதனடியில் தருகிறோம்.

இஸ்லாத்தில் நிகழ்ந்துள்ள ஒவ்வொரு சம்பவமும் சரித்திரப் பூர்வமான ஆதாரமும், நற்சாக்ஷியுமுள்ளதாக இருக்கிறது. உலகின் சரித்திரங்களுக்கு அஸ்திபாரமிட்டு அதனை வளர்த்துப் போஷித்தவர்களென முஸ்லிம்கள் கீர்த்தி பெற்றிருக்கின்றனர். இஸ்லாத்தில் சொல்லப்பட்டுள்ள விஷயங்களுக்குச் சரித்திரப் பூர்வமான ஆதாரம் இருக்கிறதென்ற விஷயம் நமது காலத்தைய பூர்வீக ஞாபகச்சின்ன ஆராய்ச்சிகளிலிருந்தும் ருஜுவாகிறது.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் எகிப்திலிருந்த கிப்தீ அரசரான 'மக்கூக்கிஸ்' என்பவருக்கு ஒரு நிருபம் அனுப்பி, அவரை இஸ்லாத்தில் சேருமாறு அழைத்திருந்தார்கள். இக்கடிதமெழுதிய விபரங்கள் இஸ்லாமிய நூல்களில் கூறப்பட்டிருக்கின்றன. சில நூல்களில் இக்கடிதத்திலுள்ள விஷயம் இன்னதென்றும் வரையப்பட்டிருக்கிறது. எனவே, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் ஏறக்குறைய 1350 வருஷங்களுக்கு முன் எழுதிய அக்கடிதம் இக்காலத்தில் எகிப்திலுள்ள கிருஸ்துவ மடமொன்றிலிருப்பதாக பூர்வீக ஞாபகச்சின்ன ஆராய்ச்சி நிபுணர்களால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அந்த அசல் கடிதத்திலுள்ள வாசகம் ஒரு அக்ஷரம்கூடப் பிசகாமல் இஸ்லாமிய நூல்களில் எழுதப்பட்டிருப்பது வெளியாகிறது. எனவே, இஸ்லாமிய கிரந்தங்களது உண்மைக்கும், அவைகளில் கூறப்பட்டிருப்பவைகள் தவறல்லவென்பதற்கும் இதனைப் பார்க்கினும் பிரத்தியக்ஷ சாக்ஷியம் வேறொன்றும் வேண்டியதின்று. ஆனால், இந்நவ நாகரீக காலத்தில் யுக்திவாதிகள் தங்களது அற்ப அறிவினுக்கெட்டாத விஷயங்களை "அல்ல" என்று மறுத்துவிடுகின்றனர். ஆயினும், இன்று அதே விஞ்ஞான சாஸ்திரங்கள் இஸ்லாமிய நூற்களில் கண்ட விஷயங்கள் நிகழத்தக்கவைகளே என்பதை ஆதரிக்கின்றன. அல்லாமலும், தற்போது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டு வருகிற நவீனங்கள் இவைகளை இன்னும் அதிகமாக ஆதரிக்கின்றன. அவைகளைப்பற்றி ஈண்டு சிறிது விவரிப்பாம் :

ஹஜ்ரத் உமர் பாறூக் (றலி.) அவர்கள் மதீனாவிலுள்ள மஸ்ஜிது நபவிய்யின் மின்பரின் மீதிருந்து கொண்டு இஸ்லாமியச் சேனைகளின் தளகர்த்தரான 'ஸாரியா'வுக்கு "ஸாரியாவே! மலையின் பக்கல் செல்லும்" என்பதாகக் கட்டளையிட்டார்கள். போர்க்களத்தில்

சேனைகளை நடத்திக்கொண்டிருந்த தளகர்த்தர், ஹஜ்றத் உமர்பாறூக் (றலி.) அவர்கள் மதீனாவி லிருந்துகொண்டு கூறிய இக்கட்டளையைச் செவி யேற்று, அதன்படி தமது சேனைகளை நடாத் திப் போரில் வாகை மாலை சூடினார். இவ்விஷ யம் சரித்திரப் பூர்வமான உண்மையாகும். இத னைச் சரித்திர சான்றுகளைக்கொண்டு மறுக்கவே முடியாது. ஆயினும், மதீனாவிலிருந்து ஹஜ்றத் உமர் பாறூக் (றலி.) அவர்கள் கூறிய இக் கட்டளையைப் பல நூறு மைல்களுக்கப்பால் 'நிஹாவந்து' என்ற இடத்தில் போர் செய்து கொண்டிருந்த தளகர்த்தர் எங்ஙனம் செவியேற் றார்? அப்படிச் செவியேற்க முடியாதல்லவா? இது புத்திக்குப் பிடிக்காத விஷயமாகவன்றோ இருக்கிறது என்று சில யுக்தி வாதிகள் ஒரு சமயம் கூறினர். ஆனால், இப்பொழுதோ வெனில், கம்பியில்லாத் தந்தியும் ரேடியோவும் இதனைப் பிரத்தியக்ஷமாக மெய்ப்பிக்கின்றன. லண்டனிலுள்ளவர் செய்யும் பிரசங்கத்தை அல்லது பாடல்களைச் சென்னையிலுள்ள நாம் செவியேற்பது சர்வ சாதாரணமாக ஏற்பட்டு விட்டது. பிரகிருதி சாஸ்திரங்களிலுள்ள சில நுட்ப விஷயங்களை ஆராய்ந்து கண்டுபிடிக்கப் பட்ட இக்காரியங்கள் இவ்வளவு அபாரமான விஷயங்களைப் பிரத்தியக்ஷத்தில் ருஜூப்பிக்கும் போது ஆத்மார்த்த உன்னதங்களை யடைந்த ஹஜ்றத் உமர் பாறூக் (றலி.) அவர்கள் ரேடி யோக் கருவிகளின் உதவியில்லாமல் மதீனாவி லிருந்துகொண்டு இராக், பலஸ்தீனம், ஈரான், ஷாம் ஆகிய தேசங்களின் போர்க்களங்களில் சண்டை செய்துகொண்டிருக்கும் தமது சைனி யங்களுக்கு கட்டளை பிறப்பித்து, அவைகளை நடாத்த முடியாதா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்? மனித அறிவானது இனியில்லாவண் ணம் சகலத்தையும் உணர்ந்துவிட்டதா? தனக் குப் புலப்படாத விஷயங்களை "இல்லை" என்று மறுதளிக்கத்தக்க அந்தஸ்திற்கு வந்துவிட் டதா? என்பதைச் சிந்தித்துப் பார்ப்பீர்களா யின் மேற்கண்ட சரித்திரப் பூர்வமான சம்பவ மும் ரேடியோ கருவியும் உங்களுக்குத் தக்க பதிலை அளிக்கவல்லனவா யிருக்கின்றன. எனவே, இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள வைகளெல்லாம் எல்லாம் வல்ல இறைவனின் எல்லையற்ற பொக்கிஷங்களின் முன்னிலையில் சமுத்திரத்திற்கு முன்னிருக்கும் ஒரு துளி ஜலத்தின் அந்தஸ்தில்கூட இல்லை என்பதே அறிவாளிகளின் அபிப்பிராயமாகும். இதனைக் குறித்துத் தான் "கற்றது கையளவு, கல்லா துலகளவு" என்ற பழமொழி பிறந்தது போலும்.

இஸ்லாம் இறுதியானதும் சுலபமானதுமான மதமாகும். தெய்வீக உண்மைகளனைத்தையும் பொதிந்துள்ளதுமாகும். திருகுர் ஆன் இறை வனது வாக்காகும். ஆத்மார்த்த அருவிக ளனைத்தும் வரண்டுபோயிருந்த காலத்தில் பாரான்மலைச் சிகரத்திலிருந்து இவ்வருவி உதயமாயிற்று. எனவே, இதுதான் இது போழ்து தெய்வீக உண்மையை விளக்கும்படி யான ஏக அருவியாயிருந்து 1350 வருஷ கால மாக ஓடிக்கொண்டிருக்கிறது. இன்ஷா அல் லாஹ் இனி எப்பொழுதும் ஓடிக்கொண்டே இருக்கும். மேலும், இத்திருகுர்ஆன் காண் பித்த தெய்வீக சக்திகள் இஸ்லாத்தின் அற் புதச் சக்திகளாக இற்றை நாளில் சிற்சில போழ்து வெளியாகிக்கொண்டிருக்கின்றன. ஆகவே, மனிதர் தங்களுக்குள்ள அறியாமை யெனு மிருளில் தோன்றும் இவ்வெளிச்சத்தின் மூலமாகத் தங்களுக்குரிய பாதையைக் கண்டு கொள்ளலாம்.

மனிதர்கள் இறைவனை அடைவதற்கான வழியை யுண்டாக்கிக்கொள்ளும் முறையைக் கற்பிப்பதற்காக வந்த நபிமார்கள் ஏனைய மனி தர்களைப்போலன்று; அவர்களது ஜீவியம் மிக வும் நூதனமானது; ஆதலின், அவர்கள்பால் விசுவாசமாயிருந்து அவர்கள் காண்பிக்கும் வழி யைப் பின்பற்றுங்கள் என்று சொல்லப்படு கிறது. இதற்குப் பிரத்தியக்ஷமான ருஜூ யாதெனில், அவர்களது பூத உடலம் பூமியி னுள் அழிந்துவிடாமல் பத்திரமாக இருந்து வருவதும் ஒன்றாகும். இப்படி அழியாதிருப் பது மக்கள் செய்யும் பக்குவத்தினாலோ அல் லது மருந்தீட்டின் பலனாலோ அல்லது வேறெந்த யுக்தியினாலோ அன்று. எல்லாம் வல்ல இறைவன் சக்தியினாலேயே அவைகள் அன்று எங்ஙனம் அடக்கப்பட்டனவோ அதனைவிட்டு எவ்வித மாறுதலுமடையாமல் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் இருந்து வருகின்றன. வேறு சாமான்ய மனிதர்களது உடலம் நூற்றுக்கணக்கான வருடங்களுக்குப் பின்னரும் இவ்வண்ணம் பத்திரமாக இருக்க முடியாது.

'நபிமார்களது உடலத்தைத் தின்பது பூமிக்கு ஹறுமாக்கப்பட்டிருக்கிறது' என்பதா

கச்சொல்லப்படுகிறது. அவ்வுடலங்கள் பூமியினிடம் இறைவனால் ஒப்புவிக்கப்பட்டதொரு அமானிதமாகும். ஆகவே, அவ்வுடலங்கள் எந்நிலைமையில் பூமியினிடம் ஒப்புவிக்கப்பட்டனவோ அவ்விதமாக கியாமத்து நாளில் எழுப்பப் பெறும். நபிமார்களது உடலத்திலுள்ள ஒரு உரோமத்தையும் கூட பூமி பழுதாக்கமாட்டாது. மக்கள் நேர்வழி பெறுவதற்கு இஃதோர் சிறந்த அத்தாட்சியாகும். ஆயினும், மனிதன் தனது கல்வி, அறிவு, அனுபவம் ஆகியவைகளின் மூலமாக ஒவ்வொன்றையும் உறைத்துப்பார்க்க விரும்புகின்றான். ஆனால், மனிதனது இந்தத் துணிச்சல் இறைவனுக்கு எப்பொழுதும் சம்மதமாக இருந்ததில்லை. ஆனால், அகிலத்தாருக்கு அருங்கருணையா யவதரித்த அண்ணல் றஸூல் (ஸல்.) அவர்களது பொருட்டால் இந்த உம்மத்திலுள்ள வலிமார்களுக்கும், நபிமார்களுக் களிக்கப்பட்ட சிறப்புகளளிக்கப்பட்டிருக்கிறது. முற்காலத்து நபிமார்களது வாரிசுகாரர்களாக இந்த உம்மத்தின் உலமாக்களாகிய வலிமார்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள். மேலும், இந்த வலிமார்களது மூலமாக அந்த நபிமார்களது அந்தஸ்துகள் காண்பிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, நபிமார்களது உடலங்கள் பூமிக்குள் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன என்பது வலிமார்களது மூலமாக இவ்வுலகில் எப்பொழுதும் வெளியாக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது. இதனைக்குறித்துச் சில உதாரணங்களை ஈண்டு கீழே தருவோம்.

1. ஹஸ்றத் மௌலானா ஷெய்கு அப்துல் ஹக் (றஹ்.) அவர்கள் டில்லிமா நகரில் சுமார் 250 வருஷங்களுக்கு முன்னமிருந்த பேரறிஞரும் தெய்வபக்தி நிறைந்தவருமாவர். அவர் தம்முடைய நூலிலொன்றில் எழுதி இருப்பதாவது:—

ஹஸ்றத் ஷெய்கு அலிய்யுப்னு ஹிஸாமித்தீன் (றஹ்.) அவர்கள் இவ்வுலகவாழ்க்கையினை நீத்த பன்னிரண்டு பதின்மூன்றாண்டுகளுக்குப் பின்னர் அவரது சகோதரரின் புதல்வரும், சிஷ்யருமான ஸெய்யிதி அஹ்மது (றஹ்.) அவர்கள் இவ்வுலகவாழ்க்கையை விட்டகன்றனர். அவர் தமது பூத உடலத்தை தமது ஞானாசிரியரும் சிறிய தந்தையுமான ஹஸ்றத்ஷெய்கு அலியுப்னு ஹிஸாமுத்தீன் (றஹ்.) அவர்களது சமாதியில் அடக்கம்செய்ய வேண்டும் என்று வேண்டிக்கொண்டார். இவ்வேண்டுகோளின்படி ஹஸ்றத் ஷெய்கு அலிய்யுப்னு ஹிஸாமித்தீன் (றஹ்.) அவர்களது சமாதியைத் திறந்தபோது அப்பெரியாரது உடலமும், அவ்வுடலத்திற் கணிவித்த கபன் உடையும் அச்சுக் குலையாமல் அப்படியே இருக்கக் கண்டு ஜனங்கள் திகைத்துப் போயினர். ஏனெனில், மக்கமா நகரில் மண்ணுக்கு அதிக சக்தி இருந்து வருவதால் பிரேதங்களை அடக்கிய இரண்டு மூன்று மாதங்களுக் குள்ளாகவே அவைகள் மண்ணோடைக்கியமாகி விடுவது வழக்கம். ஆதலின், பன்னிரண்டு பதின்மூன்று வருடங்களுக்குப் பின்னரும் அவ்வுடலம் அழியா திருப்பதானது அப்பெரியாரின் அற்புத சக்திகளில் ஒன்றேயாகும்.

2. மேலே சொல்லப்பட்ட சமாசாரம் மூன்று நூற்றாண்டுக்கு முன்னருள்ள விஷயமாகும். இற்றைக்கு நான்கு வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்த மற்றொரு சம்பவத்தையும் ஈண்டு கவனியுங்கள். இது நமது வள்ளல் நாயகம் (ஸல்) அவர்களினுடையவும், கல்வியெனுமூரின் தலைவாயலாயுள்ள ஹஸ்றத் அலீ (றலி) அவர்களினுடையவும் துணைவர்களைப் பற்றியது. இவ்விரு ஸஹாபிகளும் டைக்ரீஸ் நதிக்கரை யண்டையில் அடக்கம் செய்யப்பட்டிருந்தனர். டைக்ரீஸ் நதியில் பிரவாகம் தோன்றி, இவ்விரு பெரியார்களது சமாதிகளுக்கும் தீங்கேற்பட்டுவிடும் என்ற பயம் தோன்றியதால் ஆங்குள்ள அரசாங்கம், அரசு மரியாதையுடன் அவ்விரு சமாதியையும் அப்புறம் அகற்றும் வேலையிலீடுபட்டது. அதுபோழ்து இவ்விரு பெரியார்களது உடலங்களைத் தரிசிப்பதற்காகப் பொதுஜனங்கள் கணக்கில்லாமல் கூடிவிட்டனர். ஐரோப்பியருங்கூட தரிசனைக்கு வந்திருந்தனர். சமாதிகளைத் திறந்த போழ்து அவ்விரு பெரியார்களது பூத உடலங்கள் அன்றுதான் அடக்கம் செய்யப்பட்டனவே போல் புத்தம் புதியனவாகவே இருந்தன. இற்றைக்கு பதின்மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் இப்பெரியார்களது இவ்வுடலங்கள் பூமியினிடம் ஒப்புவிக்கப்பட்டன என்பது இங்கு குறிப்பிடத்தக்க விஷயமாகும்.

3. இம்மாதிரியான சம்பவங்கள் வெளிநாடுகளில் மாத்திரம்தான் நிகழ்ந்தனவென்பதில்லை. இவ்விந்திய நாட்டிலுங்கூடக் காணப்படுகின்றன. 1857-ம் வருஷத்தில் நிகழ்ந்த சிப்பாய்க் கலகத்தின் போழ்து ஒரு கப்று தோண்

டப்பட்டது. அதனுள் அடக்கப்பட்டிருந்த வரது உடலம் அழியாதிருந்தது. முகத்தில் வெட்டுக்காயமு மிருந்தது. ஆதலின், அப்பெரியார் சன்மார்க்கத்திற்காகப் புரிந்த யுத்தத்தில் தமது ஜீவியத்தைத் தியாகம் செய்தவரெனத் தெரிந்தது. அவர்மீது போடப்பட்டிருந்த கபன் ஆடை மக்கிப்போய் விட்டதாயினும், அவரது உடலம் அழியாமல், மிருதுவாக இருந்தது. முகத்தில் ஜோதிமயமான தேஜஸு மிருந்து கொண்டிருந்தது.

4. இப்பொழுது ஷாம் தேசத்தில் இவ்வருஷத்தில் மற்றொரு சம்பவமும் நிகழ்ந்துள்ளது. மண்ணெண்ணெய்யை துறைமுகத்திற்குக் கொண்டு வருவதற்காக இராக் தேசத்திலிருந்து ஷாம் தேசத் துறைமுகம்வரை பூமிக்குள் குழாய்வைக்க ஒரு திட்டம் போடப்பட்டு, அது சம்மந்தமான வேலையும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பூமியைத் தோண்டிக் கொண்டிருந்தபோது ஒருவரது உடலம் வெளிப்பட்டது. அவருக் கணிவிக்கப்பட்டிருந்த கபனுடை இத்துப் போனதால் அதனைத் தொட்டவுடன் அது மணலைப்போ லுதிரவாரம்பித்தது. அடக்கப் பட்டிருந்தவரது மார்பின் மீது ஸூரத் யாஸின் வைக்கப்பட்டு அதன் ஓரத்தில் "பாபியான அடியான் உமர்" என்பதாக எழுதப்பட்டிருந்தது. கண்கள் மூடியிருந்தன. உதடுகளில் புன்முறுவல் பூத்திருந்தது. தாடி கருத்திருந்தது. வயது நாற்பதிருக்கலாம். இந்த நூதனமான சம்பவத்தைக் கேட்டு ஆங்கில இஞ்ஜினீரும் வந்து பார்வையிட்டு ஆச்சரிய மடைந்ததுடன், அதனைப் புகைப்படமு மெடுத்து ஐரோப்பிய பத்திரிகைகளுக்கு மனுப்பினர்.

"உயிருள்ள நபியவர்களுக்காகத் தங்களை அற்பணம் செய்பவர் நித்திய ஜீவியத்தையடைகின்றனர்" என்பதற்கு இவை உயிருள்ள அற்புதங்களாக இருக்கின்றன.

நாம் முன்னேறுவ தெங்ஙனம்?

(சித்தயங்கோட்டை மௌலவி S. N. ஹுஸைன் முஹம்மது ஸாஹிப் (பாக்கவி) வரைவது)

(சென்ற மாத 246-ம் பக்கத் தொடர்ச்சி)

அருங்குணப் பெரியீர்!

சென்ற 'ஹிபாஜத்' இதழில் "நாம் முன்னேறுவ தெங்ஙனம்?" என்ற தலையங்கம் பூண்ட கலை, தொழில் ஆக இரண்டைப் பற்றியுமுள்ள வியாசம் வெளியானது தங்களுக்கு ஞாபகமிருக்கலாம். இவ்விதழிலும் அதைத் தொடர்ந்தே, முன்னேற்றத்திற்குரிய முக்கிய அம்சங்களில் முதன்மை பெற்றிலங்கும் 'ஒற்றுமை' என்ற உயரிய லக்ஷியத்தைப் பற்றி இவண் சிறிதாராய்வோம்.

ஒற்றுமை

இப்பூவோதயந்தொட்டு இற்றை நாள்வரை மக்கள், மாக்கள் யாவருக்கும் அத்தியாவசியமெனக் கருதப்பட்டுவரும் லக்ஷியங்களில் இவ்வொற்றுமையும் ஒன்றுகுமென்பது நிதரிசனம். பொதுவாக அகில உலக மக்களும், குறிப்பாக நம் முஸ்லிம் சமூகமும் இவ்வுயரிய லக்ஷிய சாதனமாம் ஒற்றுமையில் எந்த அளவு சென்றிருக்கின்றரென்பதை ஈங்கு ஆராய்வோம்.

ஒற்றுமை யென்பது இகபர சாதனங்களாகிய கலை, தொழில், மதம், தெய்வ பக்திபோன்றவைகளில் பிளவேற்படாது நாம் ஒருமனத்தினராய், ஒருருவாய் திரிகரண சுத்தியோடு ஐக்கியம் பரஸ்பரமாய் வாழ்வதேயாகும். இந்த லக்ஷியத்தில் அரசன், பிரஜை, உயர்ந்தோர், தாழ்ந்தோர், அறிஞர், அறியாதார், கீழ்நாட்டினர், மேல் நாட்டினர், சென்ற, நிகழும், எதிர் காலமென்ற மூவகைக் காலத்தினரும், அபிவிருத்தியடைய நினைக்காதவரும் விரும்பாதாருமில்லை. இவர்களில் ஒவ்வொருவரும் எத்தனை காரியங்களைச் சாதித்தனர்? இனிமேல் எவை எவைகளைச் சாதிக்கப்போகின்றனரென்ற பிரச்

சிஹனயின் பக்கல் சிந்தித்தல் பொருந்துமென் பதை ஈண்டும் கூறுகின்றேன்.

அரசியல் ஞானிகாள்!

அரசாங்கத்தினரெனப்படுவோர் எதேச்சாதிகாரப் பித்துக்கொண்டு, தன்னலமே வேண்டற்பாலது மண்ணலம் வேண்டற்பாற்றன்று, என்ற கொள்கையையே உள்ளக் கிடக்காக்கிக்கொண்டு, எதேச்சாதிகாரம் நிலைபெறுவான் வேண்டி எண்ணருஞ் சூழ்ச்சிகளையும், பிரித்தாளுங் குணங்களையும, அடக்கியாளும் ராணுவச் சட்டங்களையும் தங்களணிகலனகக்கொண்டு திகழ்கின்றனர். பிரஜைகள் தங்கள் குறைகளைக் காட்டி எத்துணைக் கதரினும் செவிமடுப்பதில்லை. இது செங்கோலா? இன்றேல் கொடுங்கோலா? அந்தோ பரிதாபம்!

தற்கால ஒவ்வொரு அரசாங்கத்தினரும் தங்களுள் அவநம்பிக்கை பூண்டு இராணுவச் செலவையே தங்கள் கடமையென மதித்து எண்ணருந் திரவியங்களை கடற்படை, விமானப் படை, காலாட்படை, போன்றவைகளிலேயே நேர்முகமாகவும், மறைமுகமாகவும் வாரி இறைத்து வருகின்றனர். ஜெர்மனிய கவர்ன் மெண்டார்மட்டும் சென்ற வாண்டில் 90, கோடிப் பவுன் ராணுவத்திற்கென செலவு செய்துளதாய்ப் பத்திரிகைகளில் காணக் கிடக்கிறது. ரஷ்யாவோவெனில், தற்காலிகமாய் 13,00,000, யுத்தவீரர்களைச் சேமித்துத் தயாராக வைத்திருக்கிறது. இஃதல்லாமல் இராணுவத்திற்கு 19, வயதுடையவர்கள் யாவரும் யுத்தத்தில் சேரவேண்டுமென புதியதோர் சட்டமு மியற்றியுள்ளதாகவும், இதன் மூலம், வருஷந்தோறும் $2\frac{1}{4}$-இலக்ஷம் வீரர்கள் அதிகப் படையாய்ப் பெருகுவதற்கு ஹேதுவாகுமென்றும் பத்திரிகைகள் மூலம் தெரிகிறோம். ஜப்பானும் தன் ராணுவப் பெருக்கில் கை கட்டிக்கொண்டிருக்கவில்லை. இதுவும் கடற்படைக்கென 9 கோடிப் பவுன் ஒதுக்கி வைத்திருக்கிறதாம்! இவைகளை யூகித்துப் பார்த்தால், யுத்தமேகங்கள் குமுறுகின்றன வென்பது நிச்சயம். இவ்வித முன்னேற்பாடுகள் ஒற்றுமைக்காகவா? அன்றி, ஒற்றுமையென்ற அரும்பெரும் ஔஷதத்தை பள்ளந் தோண்டி புதைப்பதற்கா? என்ற விஷயத்தை முடிவுசெய்வதை வாசகர்களாய உங்கள் சமூகமே விட்டுவிடுகின்றேன்.

“தடியுள்ளவனுக்கே எருமை” என்ற உருது பழமொழியின்படியும், “தட்டிப்பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன்” என்ற தமிழ்ப் பழமொழியின் பிரகாரமும் இத்தாலிய சர்வாதிகாரியான ஸினர் முஸோலினி, அபிஸீனிய நாட்டின்மீது அநியாயமாக அதருமயுத்தம் புரிந்து, அவ் யுத்தத்தில் வெற்றிபெற்று அப்புராதன நாட்டின் முக்கிய பாகங்களைக் கைப்பற்றினர். அஃதோடு நில்லாது ‘நாகரீகமே வெற்றியளிக்கும், நவீன யுத்தக் கருவிகளே உலகத்தினருக்கு எங்கள் வெற்றியை நிரூபித்துவிட்டன, இனி என்றும் வெற்றியுறுவோ மென்பது நிச்சயம்’ என்று வெகு கெம்பீரமாக பிரசங்கம் நிகழ்த்தினராம்! என்னே இவரின் அறியாமை!! மனுநீதி வழுவாது நடப்பதே சத்தியம். வெறுக்கத்தக்க காரியங்களைச் செய்வதே அசத்தியம். சத்தியம் நிலைக்கும்; அசத்தியம் அழியும் என்பதை அவர் உணரவில்லைபோலும்! விஷவாயுப் பிரயோகஞ்செய்து எளியமக்களின் தேசத்தைப்பறிப்பதுதான் நாகரீகமா? இன்றேல் அவர்களின் சுயவாட்சியைக் காப்பது தான் நாகரீகமா?

நவீன கருவிகளே வெற்றியளிக்கின்றன வென வைத்துக்கொள்வோம். தற்கால ஒவ்வொரு அரசாங்கமும் நவீனக் கருவிகளைப் பெருக்கிக்கொண்டே வருகின்றன வென்பது உலகறிந்த உண்மையாகும். இவ்வித நிலைமையில் ஒரு அரசாங்கம் மற்றொன்றோடு எதிர்த்தால் எவை வெற்றியடையலாம்? எவை அபஜெயமுறலாம்? இவ்வித யுத்தங்களால் தேச மக்கள் வாழ்வரா? அல்லது அழிவரா? என்பனபோன்ற வினக்கள் இவர்களுக்கு வருமென்பது திண்ணம். இவ்வித வினக்கட்கு என்ன விடைபகருவரோ யாமறியோம். பிரிட்டிஷ் முதல் மந்திரி மிஸ்டர் பால்ட்வின், “சென்ற மஹாயுத்தத்தில் மடிந்தவர்கள் திரும்பிவந்தால் யுத்தம் நடைபெறவிடமாட்டார்கள்” என தனது பிரசங்கமொன்றில் கூறியுள்ளார்.

பேரறிஞர்காள்!

ஒற்றுமை வளர்ச்சியை ஒவ்வொரு தேசத்திலும் நிலவச்செய்து மன்பதைகளை ஒன்றுபடுத்தல் அவ்வத்தேச அரசாங்கத்தினரையே சார்ந்தது. அவர்களே அதற்கேற்ற ஆசிரியர்களென்பதை அவர்களே நன்கு உணர்ந்திருப்பர். இவ்வர்க்கத்தினரே மக்களைத் தூண்டி ஒற்

றுமை பரஸ்பர நம்பிக்கை முதலியவைகளைக் கற்பிக்கவேண்டும்; அதற்கு வேண்டிய பாதுகாப்பளிக்கவேண்டும்; இவர்கள் ஒற்றுமையற்று வாழ்வது பிரஜைகளின் துரதிர்ஷ்டமாகுமென்பதே என் துணிபு.

இவ்வரசாங்கங்கள் தங்களுள் சர்வதேச (தேச நேச) சங்கமென்றொன்று ஸ்தாபித்திருக்கின்றனர். இச்சங்கம் எந்த நோக்கத்தோடு நிறுவப்பட்டதோ அதை யாவராலும் மறுக்க முடியாது. இச்சங்கநோக்கம் நிஷ்களங்கத்தோடு கூடியதாகுமென்பதிலையமில்லை. எனினும், இச் சங்கம் இதுவரையிலும் ஒன்றையும் சாதித்ததாய்த் தெரியவில்லை. இதற்கு மாறாய் அகில உலகமும் இச்சங்கத்தைத் தூஷிக்கிறது. அபிஸீனியரின் புராதனத்தாய் நாட்டை அபகரிப்பதற்கு அம்மக்களை விஷவாயுக்களாலும் நாசக்கருவிகளாலும் சித்திரவதை செய்து அந்நாட்டை யபகரித்த இத்தாலியரை இச்சங்கம் என்னசெய்தது? ஒன்றுமில்லை. இதுதான் இச்சங்கத்தின்சேவை! இதுபோழ்து மக்கள் யாவரும் இச்சங்கம் மரித்துவிட்டதாகவே கருதுகின்றனர். என்னே இச்சங்கத்தின் பரிதாபநிலை!

அரசியல் வாதிகளில் ஒரு சிலர் ஆயுதப்பரிஹரணத்திற்காக ஆலோசனையும் முயற்சியும் இடைவிடாது செய்துவருகின்றனர். இது உண்மையான அபிப்பிராயமென்பதை எந்த அரசியல் ஞானமுள்ளவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார். ஏனெனில், ஆயுதமெல்லாம் பூர்த்தியாகி யுத்தத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் ஆயுதப் பரிஹரணமென்பதற்கு என்னபொருள்? மேலும், ஆயுதங்களை விஸ்தரிப்பதற்காக யோசனைகளும் கூட்டங்களும் நடைபெறுவதாகவே இதற்குப் பொருள்கொள்ளப்படும். நினைப்பது பரிஹாணம், செய்வது விஸ்தரிப்பு. இதுவே இவ்வரசாங்கங்களின் நடப்பு. இவ்வித நிலைமையில் இவர்கள் இருக்கும்வரை ஆயுதவிஸ்தரிப்பு ஏற்படுமேயல்லாது பரிஹரணம் ஏற்படுமென்பது முடியாத காரியம்.

பண்பீர்!

நமதிந்திய நாட்டின்கண் வதிந்துவரும் மக்கள் பல்வேறு பிரிவினர்களாகவும், பற்பல வகுப்பினராயுமிருக்கின்றனரென்பது வெள்ளிடை. இவர்களில் தங்களுக்குள் ஒருமனப்பட்டு பரஸ்பரம் நம்பிக்கைபூண்டு ஐக்கியமாய் வாழாது சிதருண்டு மாச்சரியம், பொறாமை, கொலை, பஞ்சமாபாதகம் போன்ற ஒற்றுமைக்குமுரண்பட்ட காரியங்களைச் செய்து வருகின்றனர். உதாரணமாக ஒரு லீடர் ஒரு இயக்கத்தைப் பிரசாரஞ் செய்யின் அதற்குமாறாய், சத்தியம் எது? அசத்தியம் எது? எனஓராது மற்றுமொரு சிலர் எதிர்ப் பிரசாரம் புரிகின்றனர். ஜஸ்டிஸ் பார்டி ஒன்றைக் கூறினால் காங்கிரஸ் வாதிகள் அதை மறுத்துக் கண்டனஞ்செய்து தங்கள் கட்சிக்கு ஆதரவு தேடுகின்றனர். இங்ஙனமாக நம் நாட்டில் சமூக வேற்றுமை, சமூகப் பிளவு ஏற்படின் எங்ஙனம் நம்மில் ஒற்றுமை நிலவும்?

எக்கக்ஷி சத்தியக்கொள்கையுடையது? எது அசத்தியமானது? என்று விவாதித்தல் நமது நோக்கமின்மையால் இவ்விவாதத்தை விட்டுவிட்டு ஒற்றுமை நமது மானிட சமூகத்திற்கு வேண்டியதன் அவசியத்தை சற்று ஓர்வோம். நாம் நாடுவது ஒற்றுமை; எனினும் நாம் சொல்வது வேற்றுமை. இந்நிலையில் நாமிருப்போமாயின் வாழ்க்கைப் பேருவகையற்று பிறர் ஆதிக்கத்தில் கட்டுண்டு தலை குனிவதே யல்லாது வேறு நிலையன்று. அன்பர்காள்! ஒற்றுமையை மனமொழி மெய்களால் ஸ்தாபித்து சம்பூர்ண வாழ்க்கையையும், ஆண்டவனின் அநுக்ரஹத்தையும் அடையுங்கள்.

என்மார்க்கப் பிரியீர்!

நமக்கு உண்மையான ஒற்றுமையும், முன்னேற்றமும் வேண்டுமெனின், சத்தியமறை (குர்ஆன்) யைத் தெளிந்து கற்றல்வேண்டும். கற்றபடி ஒழுகுவதும் அவசியம். இத்துடன் தெய்வத்தூதர் (முஹம்மது ஸல்.) அவர்களின் அரும் போதனைகளையும் சிரமேற்றாங்கி உள், வெளி என்ற இரண்டுவகை அன்போடு எடுத்துக்கொள்வதே நம்மவர்கள்பால் கடமையென்பதை எச்சரிக்கின்றனம். மேற்கூறிய வழிகளல்லாது வேறு எவ்விதமுறையிலும் உங்கள் லக்ஷியத்தை யடையமுடியாதென்பது எனது துணிபும் நம்பிக்கையுமாகும்.

“விஸ்வாஸிகள் (மூமின்கள்) தங்களுக்குள் ஒரே யாக்கையைப் போலிருக்கின்றனர். ஒரு அங்கத்திற்கு நோய், வலி, கஷ்டங்களேற்படின் மற்றைய அங்கங்கள் சாந்தியடைய மாட்டா. அவ்வாறே மூமின்களும்”. (நாயக நன்மொழி)

எவனது நாவாலும், கரத்தாலும்பிற முஸ்லிம்கள் சாந்தியடைவார்களோ அ(வ்விதத் தன்மையுடைய)வனே உண்மை முஸ்லிமாவான். (நாயக நன்மொழி)

என்ற நாயக வாக்கியங்களைச் சிந்தித்துப் பாருங்கள். இவ்வாக்கியங்களில் எவ்விதம் ஒற்றுமை நிலவுவதற்கு அஸ்திவாரம் போடப்பட்டிருக்கிறதென்பதை நன்கு ஊன்றிக் கவனியுங்கள்.

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவருக்கும் தாழ்வே"
(குறள்)

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே"
(தாயுமானவர்)

என்ற நந்தமிழகப் பெரியார்களின் வாக்கியங்களையும் சிந்தித்துப் பாருங்கள்.

14, நூற்றாண்டுகட்கு முன்னர் மானிடர் எந்நிலையிலிருந்தார்கள் என்பதை ஊன்றிக் கவனிக்கின், ஒற்றுமையின்மை, அவிவேகம், அநாகரீகம், பஞ்சமா பாதகத் தொழில்கள், சிசுஹத்தி போன்ற தீயதொழில்களும் அந்தகாரங்களுமே அவர்களில் மலிந்து கிடந்தனவென்பதும், அவர்கள் தங்களிடையே க்ஷீணித்து ஒருவருக்கொருவர் துஷ்ட ஜந்துக்கள் போன்றே இருந்தனரென்பதும் சரித்திராராய்ச்சியாளருக்கு மறைந்ததன்று. இன்னும், அக்கால அரசாங்கங்களை எடுத்துணர்ந்தால், தேசம் பிடிக்கும் துற்குணமும், ஆட்சிமுறை யறியாமலும் அராஜரீகமே நடத்தி வந்திருக்கின்றனரென்பதும் அவ்வாராய்ச்சியாளருக்கு மறைந்ததன்று.

மகிபர்காள்!

நாம் வேண்டும் ஒற்றுமையும், முன்னேற்றமும், கலை, நாகரீகம், தொழில், சற்குணம் போன்ற செப்பரும் அருங் குணங்களாலேயே உண்டாகவேண்டியதிருக்கின்றது. இக்குணங்களில்லாது ஒற்றுமையும் முன்னேற்றமுங் கிடைப்பதரிது. நாம் முன்னேறும் வழிகளைப் பயிற்றுவிக்கும் குர்ஆன் ஹதீதுகளை விட்டுவிட்டு கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய் தேடியவர்களைப்போலிருந்தால், நம் பிற்போக்கிற்கு நாமே பொறுப்பாளியா? இன்றேல் கடவுள் பொறுப்பாளியா?

மாண்புசால் வாசர்காள்!

நமது உத்தமர், சாமுத்திரிகா லக்ஷணர், (முஹம்மது, ஸல்.) அவர்கள் மன்பதைகளை சத்தியத்தின் பக்கல் அழைக்கவும் இகபர வாழ்வில் சீர்திருத்தி மக்களை முன்னேறச் செய்யவுமே இப்பிரபஞ்சத்தில் ஜனித்தார்கள். இம் மகிபர், முன்னேற்ற வழிகளைப் போதித்ததோடு நில்லாது, அனுஷ்டித்தும் காட்டிவிட்டே நம்மை விட்டகன்றார்கள். இவர்கள் தமது லக்ஷியத்தில் வந்த இன்னல்களைச் சகித்துத் தங்களது லக்ஷியத்தைச் சாதித்தார்கள். ஆட்சி புரிந்தார்கள். அரசாங்கத்தை நீதி நெறி வழுவாது நடாத்திக் காட்டினார்கள். மக்களோடு சற்குணம், ஒற்றுமை, சமத்துவம் போன்றவைகளைக் காட்டி ஒவ்வொருவருக்கும் முன்மாதிரியாய்த் திகழ்ந்தார்கள். சீர்திருத்தத் துறையில் ஒரு அரசனோ, தேசாபிமானியோ, சமூகவாதியோ, நாகரீக வாதியோ இவர்கள், நபிகள் பிரான் (ஸல்.) அவர்கள் காட்டிச்செல்லாத வழிகளைக் காணவோ, அல்லது கண்டாலும் அதில் சென்று சரியான முறையில் முன்னேறுவார்களென்றோ சொல்வதற்கில்லை. இவ்வுத்தமரைப் பின்பற்றினால் தான் முன்னேற்ற முண்டாமா? அல்லது நம்போன்ற சாமான்யரைப் பின்பற்றினால் முன்னேற்ற முண்டாகுமா?

நங்காலத்திய சர்வதேச (தேசநேச) சங்கத்தையும், நம் பெருமகர், சம்பூர்ண நாதர், நபிகள் நாயகர் (ஸல்) அவர்கள் ஸ்தாபித்த சங்கத்தை (இஸ்லாத்தை)யும் சீர்தூக்கிப் பார்ப்போம். ஆழ்ந்து கவனிக்குமாறு வாசகர்களை அன்புடன் வேண்டுகின்றனம். இஸ்லாம், உலகத்தினர் ஜாதி, நிறம், காலம், தேசம் என்ற பேதங்களில்லாது யாவருக்கும் பொதுவான ஓர் சங்கம். எம்மனிதனுக்கும் இதில் சேர உரிமை யுண்டு. இச்சங்கத்திற்குப் பிரவேசக் கட்டணமோ, சந்தாவோ கிடையாது. இச்சங்கத்தின் திட்டங்களை ஏற்று நடப்பதே இச்சங்க அங்கத்தினர்களின் பொறுப்பு. பிறரைத் துன்புறுத் தலைத் தொலைத்தல், அநீதியை அகற்றல், பல தெய்வ கொள்கையை யொழித்தல், பிறருக்கு உபகாரம் செய்தல், மக்கள் யாவரும் ஒன்று என்ற பல நோக்கங்களை இச்சங்கம் பிரகடனஞ் செய்துளது. இவைகளே இச்சங்கத்தின் நோக்கங்களாகும்.

முன்னேற்ற வாதிகாள்!

நமது காலத்திலிருக்கும் சர்வதேச சங்க அங்கத்தினர், ஒருவரை யொருவர் நம்பாது, ஆயுத பலமும், பக்க பலமும், முன்னேற்பாடும், சூழ்ச்சிகளும், ஏழை அரசாங்கங்களைப்

பாதுகாக்காமலும், மன்பதைகளின் சௌகரியங்களைக் கவனிக்காமலும் இருப்பதையே தத்தம் முக்கியக் கடமையாகக் கொண்டிருக்கின்றனர். இத்தன்மையுடைய சர்வதேச சங்கம் உலகத்தைப் பாதுகாக்குமா? அல்லது உலக விருட்சகர் ஸ்தாபித்த சர்வதேச சங்கம் உலக மக்களைக் காப்பாற்றுமா? உண்மையாகவே ஒற்றுமையைப் போதிக்கும் சங்கம் இது (இஸ்லாம்) ஒன்றேயாகும். முன்னேற்ற வழிகளைக் காட்டுஞ் சங்கமும் இதுவேயாகும்.

நீங்கள் யாவரும் அல்லாஹ்வின் (வேதமாகிய) கயிற்றை கெட்டியாய்ப் பிடித்துக் கொள்ளுங்கள்; மேலும், நீங்கள் (குரோதங் கொண்டு) பிளவுபட வேண்டாம்; அல்லாஹ், நுங்களுக் களித்துள்ள கிருபாகடாக்ஷத்தை நினைத்துப் பாருங்கள்; நீங்கள் (உங்களுக்குள்) ஒருவருக் கொருவர் பற்றலர்களா யிருந்தபோழ்து (இஸ்லாத்தைக் கொண்டு நேர்வழி காட்டி) உங்களின் ஹிருதயங்களில் அன்பை உற்பத்தி செய்தான். ஆகவே, அவனின் அருளினால் நீங்கள் ஒருவருக் கொருவர்) சகோதரர்களாகி விட்டீர்கள். (குர்ஆன். 3-102)

(தொடரும்.)

பொருமையாளனின் பரிதாப முடிவு

(தென்காசி. மீ. இ. மு. அபுல்ஹஸன் ஷாதலி வரைவது)

முன்னொரு காலத்தில் ஒரு பட்டணத்தில் 'பிக்ரு' என்ற நாமமுடைய பெரியாரொருவர் வாழ்ந்து வந்தார். இவர் பிரதி தினமும் காலை மாலையில் அப்பட்டணத்திலிருந்த அரச மாளிகைக்குச் சென்று அரசருக்கு எதிரே நின்றுகொண்டு "நன்மை புரிந்தவர்கட்கு நன்மையையே செய்வாயாக; தின்மை புரிந்தவர்கட்கு அவர்களின் தீமையே போதுமானது" என்று சொல்லிக் கொண்டிருப்பது இவரின் வழக்கமாக விருந்தது.

இந்த நகரில் ஒரு வம்பன் வாழ்ந்து வந்தான். இவனது தொழில் பிறருக்கு தீங்கு செய்து கொண்டிருப்பதேயாகும். இந்த வம்பன், பிக்ரு என்ற பெரியார் அடிக்கடி அரசரிடம் சென்று சிறிதும் பயமின்றி அவ்வரசருக்கு உபதேசம் செய்வதைக் கண்டு பொருமை கொண்டான். இவரைப்பற்றி பல விஷயங்களை அரசரிடம் கூறி எவ்விதத்திலாவது இவரைக் கொன்றுவிடும்படி முயற்சிக்க வேண்டும் என்று மனவுறுதி கொண்டான். சமயம் எப்பொழுது கிடைக்கும் என்று எதிர் நோக்கிக் கொண்டிருந்தான்.

இந்நிலைமையில் வம்பன் ஒரு தினம் அரச சமூகத்திற்குச் சென்றான். தனது நோக்கம் நிறைவேறுவதற்கு சந்தர்ப்பம் வாய்த்தது என்று மனம் பூரித்தான். அரசரும் இவ் வம்பனை யழைத்து பல விஷயங்களை விசாரித்தார். வம்பனோ இதுதான் சமயமெனக் கருதி அரசரை நோக்கி, "தவநெறி பிறழாது நடந்து வரும் கண்ணிய மிக்க அரசரே! யான் தங்களுக்கு ஒரு இரகஸியத்தைக் கூறுகிறேன்: அதாவது பிரதிதினமும் தங்கள் சமூகம் வந்து தங்களுக்கு உபதேசம் புரியும் 'பிக்ரு' என்பவர் 'தாங்கள் வாய் நாற்ற முடையவர்' களென்றும், 'தங்களின் சமூகம் துர் நாற்றமுடைய இடம்' என்றும் எண்ணிக் கொண்டிருக்கிறார். தாங்களோ அவரை ஒரு பெரியார் என்று மதித்து மிக மேதை மரியாதை செய்கின்றீர்கள்" என்று கூறினான். இதைக்கேட்ட அரசர் "உண்மையிலேயே அவரை யான் ஒரு பெரியார் என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கின்றேன்; நீர் கூறிய கூற்றை யான் எவ்விதம் நம்ப முடியும்?" என்று கேட்க அவ்வம்பன், 'அரசரே! அம்மனிதர் தங்கள் சமூகம் வந்தால் அவரை தங்களுக்கு சமீபத்தில் அழையுங்கள். அப்போதவர் தங்களின் சமீபத்தில் நெருங்கினால் அவரின் கரத்தைத் தனது மூக்கில் வைத்துப் பிடித்துக் கொள்வார். ஏனெனில், தங்களின் வாய் நாற்றத்தை அவர் நுகர்ந்து கொள்ளாம லிருப்பதற்காகவே அவ்வாறு செய்வார். தாங்கள் இதைக் கவனித்துப் பாருங்கள்" என்று கூறினான். இவ்வார்த்தை

களைக் கேட்ட அரசருக்கு அப்பெரியார்மீது அளவற்ற கோப மேற்பட்டது. இதற்குத் தகுந்த சிக்ஷை 'பிக்ரு' என்பவருக்குக் கொடுக்கவேண்டும் என்று உறுதி செய்து கொண்டார்.

இங்ஙனமாக அரசருக்கு அப்பெரியார்மீது கோப மேற்பட்டதைக் கண்ட அந்த வம்பன் அளவற்ற சந்தோஷ மடைந்தான். உடனே அரசமாளிகையைவிட்டு வெளியாகி, நேராக 'பிக்ரு' என்ற பெரியாரின் இல்லத்திற்குச் சென்று, அப்பெரியாரிடம் தான் இன்று ஒரு அழகான விருந்து தயாரித்திருப்பதாகவும், தாங்கள் வந்து அவ்விருந்தை யருந்தி எங்களுக்காகப் பிரார்த்தனை புரியவேண்டு மென்றும் மிகவும் பணிவுடன் வேண்டி நின்றான். யாதொரு கபடமுமின்றி அப்பெரியார், அவ்வம்பனின் வேண்டுகோளுக் கிசைந்து, தான் விருந்தருந்துவதாகவும் வாக்களித்தார். வம்பனுக்கோ ஆனந்தம் பொங்கியது. மனம் பூரித்தது. தனதில்லத்திற்கு விரைந்து சென்றான். வெங்காயத்தால் ஒரு விருந்து தயார் செய்தான். அப்பெரியாரின் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தான். அப்பெரியாரும் தாம் வாக்களித்த பிரகாரம் அங்குவந்து விருந்தருந்தினார். விருந்து முடிந்ததும் தமது வழமைப்பிரகாரம் அரசகொலுமண்டபத்திற்குச் சென்று, அரசரின் எதிரே நின்றுகொண்டு "நன்மை புரிந்தவர்கட்கு நன்மையே செய்வாயாக; தின்மை புரிந்தவர்கட்கு அவர்களின் தின்மையே போதுமானது?என்று வழமைபோல் கூறினார்.

இப்பெரியார் இவ்வாறு கூறிமுடிந்ததும் அரசர் அப்பெரியாரை தனக்குச் சமீபத்தில் வந்து உட்காரும்படி அழைத்தார். அப்பெரியார் தனது வலக்கரத்தைத் தனது வாயில் வைத்து மறைத்துக்கொண்டு அரசர் சமீபம் நெருங்கினார். ஏன் எனின், தனது வாயினுடைய வெங்காய நாற்றத்தை அரசர் அறிந்துகொள்ளாமலிருப்பதற்காகவும், அரசர் இதனால் மனநோவினை யடையாமலிருப்பதற்காகவுமே இவ்வாறுசெய்தார். இவ்வாறு இப்பெரியார் செய்வதைக்கண்ட அரசர் "இவர் விஷயத்தில் முன்னால் கூறியவனின் வாக்கியம் இப்பொழுதுதான் எனக்குத் தெரியவந்தது; அவன் கூறியது முற்றும் உண்மையே" என்று உறுதி கொண்டார்.

இவ்வரசர் எப்பொழுதும் யாருக்கும் எவ்விதக் கடிதமும் தனது கைப்பட எழுதுவது வழக்கமில்லை. ஆனால், யாருக்காவது தருமம் கொடுக்க நாடினால் அப்பொழுதுதான் தனது கரத்தால் கடிதம் வரைந்து தனது பொக்கிஷ அதிகாரிக்கு அனுப்புவார். இவ்வாறு தனது முன் 'பிக்ரு' என்பவர் நடந்துகொண்ட விஷயத்தைப் பார்த்ததும் அரசர் ஒரு கடிதம் வரைந்து தனது முத்திரையையும் வைத்து 'பிக்ரு' என்பவரிடம் கொடுத்து, "இக்கடிதத்தை இம்மாகாணத்தின் கவர்னரிடம் கொண்டுகொடும்" என்று கூறினார். அக்கடிதத்தில் அரசர், "இக்கடிதம் கொண்டுவருபவரை அறுத்து பலதுண்டங்களாகச் செய்து நன்கு காயவைத்து அதை என்னிடம் அனுப்பிவிடு" என்று எழுதியிருந்தார்.

'பிக்ரு' என்பவர் அரசரின் ஆக்ஞைக்கு அடிபணிந்து அக்கடிதத்தை வாங்கிக்கொண்டு, கவர்னரிடம் கொடுப்பதற்காகப் பிரயாணமாகிச் சென்றுகொண்டிருக்கிறார். வழியில் பொறாமையாளனான அவ்வம்பன் இப்பெரியாரைச் சந்தித்து, "இக்கடிதத்தை யாரிடம் எதற்காகக் கொண்டு செல்கின்றீர்கள்!" என்று கேட்க, அப்பெரியார் "இம்மாகாணத்தின் கவர்னரிடம் கொண்டு கொடுக்கும்படி அரசர் இக்கடிதத்தை என்னிடம் தமது கைப்பட எழுதிக்கொடுத்தார்; அக்கட்டளைப்படி யான் இக்கடிதத்தைக் கொண்டு செல்கிறேன்; எதற்காக இதை எழுதினார் என்று எனக்குத்தெரியாது" என்று பதில் கூறினார். இதைக்கேட்ட வம்பன் பின்வருமாறு சிந்திக்கலானான். அதாவது:—"எப்பொழுதும் எவருக்கும் அரசர் தமது கைப்பட கடிதம் எழுதுவது வழக்கமில்லை. அவ்வாறு எழுதினாலும் யாருக்காவது தருமம் செய்யும்படியாகத்தான் எழுதுவது வழக்கம். ஆதலால், இப்போழ்தும் இப்பெரியாருக்கு ஏதாவது வெகுமதிகள் கொடுக்கும்படியாகத்தான் எழுதியிருப்பாரென்பது நிச்சயம். 'நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்' என்ற பழமொழியைப்போல் நமது நோக்கம் நிறைவேறவில்லையே! என்செய்யலாம்? நாம் இவரிடமிருந்து இக்கடிதத்தைவாங்கிக்கொண்டு இம்மாகாணத்தின் கவர்னரிடம் கொடுத்தால் அவருக்குக் கிடைக்கும் வெகுமதிகள் நமக்குக் கிடைத்துவிடும்; இதுதான் தற்பொழுது வேண்டிய முறை" என்று மனப்பால் குடித்து அப்பெரியாரிடம், தான் அக்கடிதத்தைக் கொண்டு கொடுப்பதாகவும் தன்னிடம் அதைக் கொடுத்துவிடும்படியும் மிகவும் பணி

வுடன் மன்றாடி வேண்டிக்கொண்டான். அப் பெரியாரும் இவனது வேண்டுகோளை மறுக்க மனமில்லாது அக்கடிதத்தை இவ்வம்பனிடமே கொடுத்துவிட்டு தனதில்லம் திரும்பினர்.

அந்த வம்பன் அக்கடிதத்தை வாங்கிக் கொண்டு வாய்வேக மனவேகமாய் மஹா ஆனந்தத்துடன் விரைந்து சென்று அம்மாகாண கவர்னரிடம் கொடுத்தான். அந்த கவர்னர் அதை வாங்கி நன்கு கவனத்துடன் பலதடவைகள் திருப்பித்திருப்பி வாசித்துப் பார்த்துவிட்டு, கடிதம் கொண்டு வந்தவனை நோக்கி, "இக்கடிதத்தில், உன்னை அறுத்து, உனது தோலை உறித்து, காயவைத்து அனுப்பும்படி அரசர் எனக்குக் கட்டளையிட்டிருக்கின்றார்" என்று கூறிவிட்டு, ஜெயில் அதிகாரியை அழைத்து வரும்படி மற்றொரு வேலையாளனுக்குக் கட்டளையிட்டான்.

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் பொறுமையாளனை இவ்வம்பன், திடுக்கிட்டான். பதறினன். மனசஞ்சலமடைந்தான். 'தினை விதைத்தவன் தினை யறுப்பான், வினை விதைத்தவன் வினையறுப்பான்', 'பிறர் உயிரைதாகிப்பவன் தனது உயிரை இழப்பான்' என்ற முதுமொழிகள் உண்மையாயிற்றே! நாம் அந்தப் பெரியாரைக்கொல்ல வேண்டுமென்று முயற்சித்த முயற்சி யாவும் நமக்கே ஆபத்தாக வந்து முடிந்ததே. தாம் இப்பொழுது இதை விட்டுப் தப்பியோடுவதற்கு எவ்வித வழியையும் காணவில்லையே. என்று பலவாராக நினைத்து மனமுறுகியவனாக அந்த கவர்னரை நோக்கி, மிகப்பணிவுடன் "தலைவரே! இக்கடிதத்தை என்னிடம் நேரடியாக அரசர் கொடுக்கவில்லை. வழியில் இங்கு வந்துகொண்டிருந்த மற்றொருவரிடம் யான் வாங்கியே தங்களிடத்திற்கு கொண்டுவந்தேன். ஆதலால், தாங்கள் எனது விஷயத்தில் அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள்! யான் கூறுவதில் தங்களுக்கு சந்தேகமிருப்பின் அரசரிடம் தகவல்தெரிந்து, பின் தங்களிஷ்டம்போல் செய்யலாம்" என்று தாழ்ந்த குரலில் மிக வணக்கமாக வேண்டிநின்றான். ஆனல், அந்த கவர்னரோ இவனது வேண்டுகோளை சிறிதும் கவனிக்கவில்லை. "அரசர் இட்டகட்டளைக்கு மாற்றம் கிடையாது" என்று கூறி, அந்த வம்பனைக் கொன்றுவிடும்படி கட்டளையிட அவ்வாறே, அவனின் ஆன்மாவை இஸ்ராயீல் (அலை.) வசம் ஒப்படைக்கப்பட்டது.

பொறுமையாளனை வம்பனின் நிலைமை இவ்வாறு முடிந்தது. ஆனல், 'பிக்ரு' என்ற அந்தப் பெரியாரோ தமது வழமைப் பிரகாரம் அரசர் சமுகம் சென்று "நன்மை புரிந்தவர்கட்கு நன்மையே செய்வாயாக; தின்மை புரிந்தவர்கட்கு அவர்களின் தீமையே போதுமானது" என்று கூறினர். அரசரோ இவரைக் கண்டதும் திகைத்து மஹா ஆச்சரியத்துடன் அப்பெரியோரை நோக்கி, "நுங்களிடம் யான் கொடுத்த கடிதத்தை யாது செய்தீர்கள்" என்று கேட்க, அதற்கவர், அந்த வம்பனை சுட்டிக்காட்டி தாங்கள் என்னிடம் கொடுத்த கடிதத்தை அந்த கவர்னரிடம் தான் கொண்டு கொடுப்பதாகக் கூறி மிகவும் மன்றாடிவேண்ட, நானும் அவ்வாறே அதை அவனிடம் கொடுத்துவிட்டேன்" என்றார். அரசர், "தாங்கள் என்னை வாய்நாற்ற முடையவனென்று நினைத்திருக்கின்றீர்களென அவன் என்னிடம் கூறினனே அது உண்மையா?" என்க, அப்பெரியார் "இல்லை அவ்வாறு ஒருபோழ்தும் மனதிற்கூட யான் நினைக்கவில்லை" என்றார். "பின்னர் எதற்காக தாங்கள் என் சமூகம் அணுகியதும் நுங்களின் கரத்தை மூக்கில்வைத்துப் பிடித்துக்கொண்டீர்கள்" என்று அரசர்கேட்க, "அன்றையத்தினம் அவ்வம்பன் எனக்கு வெங்காயத்தால் தயாரித்த விருந்தொன்று அளித்தான். ஆதலால், அதன் வாடையை தாங்கள் நுகராமலிருக்கவே அன்று யான் எனது கரத்தை வாயில்வைத்து மறைத்துக் கொண்டேன்" என்று அப்பெரியார் கூறினர். இவ்வார்த்தைகளைக் கேட்டதும் அரசர் அப்பெரியாரை நோக்கி "தாங்கள் கூறுவது முற்றும் உண்மையே. தாங்கள் எனக்கு முன் நின்றுகொண்டு அடிக்கடி கூறுவதே போன்று "தின்மைசெய்தவர்கட்கு அவர்களின் தின்மையே போதுமானது" என்ற வாக்கியம் உண்மையாயிற்று" என்று வெகு ஆனந்தமாய்க்கூறி, அப்பெரியாரை வாழ்த்தி, ஏராளமான வெகுமதிகளையும் 'பிக்ரு' என்ற பெரியாருக்குக் கொடுத்தார்.

எனதருமைச் சோதரீர்!

மேல் வரையப்பெற்ற சிறிய கதையை நன்கு கவனித்துப் படித்துப் பார்ப்பீர்களாயின், 'பிக்ரு' என்ற பெரியாரை பொறுமையால் கொல்ல வேண்டுமென்று நினைத்து பல சூழ்ச்சிகள் புரிந்து யாதும்பயன்படாது தானே இறுதி

யில் கொல்லப்பட்ட வம்பனின் துற் எண்ணத்தை உணர்ந்துகொள்வீர்களென்பது திண்ணம். இவ்வாறே ஒருவர்மீது பொறாமை கொண்டு அவருக்குச் செய்யும் தீங்குகள் யாவும் செய்தவனுக்கே வந்து முடியுமென்பது திண்ணம். இஸ்லாத்தின் போதனையும் இதுவே தான். இறைவன் திருமறையில் "கேடுதியான ஒரு சூக்ஷியாகிறது அதைச்செய்தவனையே சாரும்" என்று கூறியிருக்கின்றான். இன்னும், நமது நபிகள் நாயகமும் "நெருப்பானது எவ்வாறு விரகைத் தின்றுவிடுகிறதோ அவ்வாறே பொறாமையானது அப்பொறாமையாளனின் நல்லதவங்களைத் தின்றுவிடும்" என்று கூறிப் போந்தார்கள். உலக நீதியும் உலக அநுபவமும் இதையே மெய்ப்பிக்கின்றது. ஆதலின், நீங்கள் ஒவ்வொருவரும் பிறருக்குக் கெடுதிசெய்ய வேண்டும்; பிறரைக் கெடுக்கவேண்டும் என்று ஒருபோழ்தும் கனவிற்கூட கருதாதீர்கள். எப்பொழுதும் யாவருக்கும் மேன்மையும், கீர்த்தியும் கிடைக்க வேண்டுமென்று மனம் மொழி மெய்களால் இறைவனிடம் பிரார்த்தனை புரியுங்கள். இறைவனும் இவ்வாறே நம் அனைவரையும் ஆக்கி யருள்புரிவானாக.

வஸ்ஸலாம்.

"நஞ்சிறுர்கட்கு"

(வடகரை மாணவன் பா. அ. ஹமீது வரைவது)

இற்றைக்குப் பன்னூற்றாண்டுகட்கு அப்பால், அராபியாவின் கண்ணே சத்தியமழிந்து அசத்திய அந்தகாரமே யாங்கும் தலைவிரித்தாடி, அநியாய ஆபாச அட்டூழியமனைத்தும் ஒருங்கே திரண்டு ஓம்பி, சுருங்கப் புகலத் துவக்குங்கால் மானிட மக்களே மாக்களாய் திகழ்ந்த அதுகாலை உலகஞான அருட்பிழம்பாய், அவனிமீதவதரித்து சத்திய ஒழுக்க சன்மார்க்கங்களை எடுத்தியம்பி, அளவிட யியலா அனந்த அற்புதங்களையும் அவ்வப்போதெண்பித்தறைந்து, இஸ்லாமிய வெற்றி துவஜங்களை வேரூன்றச் செய்து, அந்தோ! அப்பால் நம்மை விட்டகன்று போந்த நன் நபிகள் கோமான் (ஸல்.) அவர்கள் ஒருதருணம் தங்களது ஆறுவதாட்டை யெற்றிய இளம்பிராயத்ததுபோழ்து, உற்சாகத்தால் உடலனைத்தும் உவகை விம்ம, பெற்ற மாதாவாம் ஆமினு அம்மையார் அவர்கள் புறத்தே ஏகி, "அருமை தாயார் அவர்களே! என் பிராயத்தை யொட்டிய ஏனைய சிறுர்களனைத்தும் அவரவர்களை ஈன்ற பிதாவின் பெருமைகளை துருவி துருவி பேசி குதூகலிக்கிறுர்கள். அவர்களால் ஈயப்பெறும் வஸ்துக்களை யெடுத்தோதி பிதாக்களைப் போற்றி களிப்பேறுவகை பூண்டு செருக்குறுகிறுர்கள். எனவே, யானும் என் பெற்றாரின் உயரிய குணதிசயங்களை அவர்கள்பால் எடுத்தோத வேண்டாமா? அவ்வரும்பிதாவாற் ஈயப்பெறும் வஸ்துக்களையும் யெடுத்தெண்பித்து பேரானந்த மேலீட்டால் பெருமையுற வேண்டாமா? ஆகவே, என் பிதா யாங்கிருக்கிறுர்கள்? அவர்களை யான் நேரிற் காணவேண்டும். அவர்களின் அமுத மொழிகளைக் கேட்டானந்த ஆதியிற் மூழ்கவேண்டும் என கூறுகிறுர்கள்.

சேயின் செம்மொழிகளை செவிமடுத்த அருமைத் தாயார் ஆமினு அம்மையார் அவர்கள் ஒருபக்கல் பாலரின் பரந்த நோக்கைக் கண்டு உற்சாகத்தாற் உடற்பூத்தார்கள். பிறிதொரு பக்கல் இத்துணை அம்மிலங்க முதுமொழிகளை கேட்டக மகிழ்ந்து அந்தோ! இவ்வுலகை நீத்தப்பால் மறைந்த கணவரை நினைத்துங் கண்களில் நீரை பெருக்குகிறுர்கள். தாயின் கண்களில் நீரைக் கண்ட தரும தயாள தூதராம் நபிகள் பெருமான் (ஸல்.) அவர்களும் விழிகளிலிருந்து நீரை விரையஞ் செய்கிறுர்கள்.

பிறகொருவாறு மனதைத் தேற்றி பிரிய குமாரரை நோக்கி, அருமைக் குழந்தாய்! நுங்களை ஈன்ற பிதா இதோ! சமீபத்தில்தான் இருக்கிறுர்கள். அவர்களிருப்பிடத்திற்குக் கொண்டுபோய் சேர்ப்பிக்கிறேன். நினது அவாவே போன்று அவருடன் உறையாடி பிரீதியை பூர்த்தி செய்துகொள்வாயாக! எனக் கூறி, கணவர் இறந்தடக்கப்பட்டுள இடமாம்

'அப்வா'யென்ற இடத்திற்கு பிரயாணித்தேக ஆவன கிரியைகளை செவ்வனே செய்து முடித் தார்கள்.

பின், மாதுலர் தம் சமுகம் ஏகி, 'மாது லர் அவர்களே! நுங்களின் பிரிய பேரனுராம் முஹம்மது என்பவருக்கு அவருடைய பெற்றோரின் இருப்பிடத்தைக் காண்பிக்கும்பொருட்டு அப்வா என்னுமிடத்தே ஏக எத்தனித்துள்ளேன். நல்விடை தந்தருள்வீராக', எனப் புகன்றார்கள். பேரனின் பெருமுவலைக் கண்ட அப்துல் முத்தலிப் அவர்கள் உளம் பூரித்தார்கள். பால்யப் பிராயத்தின் பரந்த நோக்கைக் கண்டு பக்தரை மெச்சினார்கள். பின்னர், உம்மு அய்மன் எனும் துணைத் தோழியுடன் சென்று திரும்புமாறு விடை பகன்றார்கள்.

பாலரை சுமந்து, துணை தோழியுடன் காத தூரங்கள் கடந்து அப்வா என்னும் இடத்தை அடைந்த ஆமினா அம்மையார் அவர்கள் அவண் சார்ந்த அதுசமயம், ஏனைய இருவர்களை விட்டு விட்டு இறைவனின் விதி வசத்தால் மரணம் பூண்டு இறைவன் பக்கல் ஏகினார்கள்.

பெற்ற பிதாவின்மேல் அளவிடயியலா பிரீதி பூண்டு, கண்டு களிப்பெய்தி குதூகல ஆழியிற் மூழ்கசென்ற நபிகள் கோமான் (ஸல்.) பெற்ற பிதா இறந்தார்கள் என்பதை உணர்ந்து பின் தாயின் பிரிவாற்றாமையால் தயங்கினார்கள், அழுதார்கள், கண்களில் துக்க நீரை கக்கினார்கள். பிரிதொருவாறு யெல்லாம் இறைவன் செயலே என மனத்தி லெழுப்பி துக்கமே யுருக்கொண்டிலங்கினார்கள். என்னே! பெற்றோர்களின்மீது நபிகள் பெருமானின் பிரீதி யிருந்தவாறு!

இளஞ்சோதரர்காள்! நாமும் நம் பெற்றோர் மேல் பிரீதி பூணுவோமாக. அவர்களின் ஆக்ஞைகட் கடிபணிவோமாக! அவர்களின் மொழிகளே அமுத மொழியென அகத்துள் பதிப்போமாக! நபிகள் கோமான் (ஸல்.) அவர்களின் நற்பற்று உண்டாகும் வண்ணம் நடக்க நாயன் நன்னருள்புரிவானாக! வஸ்ஸலாம்.

முஸ்லிம்களின் வீழ்ச்சிக்குக் காரணமென்ன?

(அமீர் ஷக்கீப் அர்ஸலான்)

(முன் 241-பக்கத் தொடர்)

குறுகிய நோக்கமும், துவேஷமும், மார்க்கப் புரட்டும்

இஸ்லாத்தின் வீழ்ச்சிக்குரிய முக்கிய காரணங்களில் குறுகிய நோக்கம், துவேஷம் மார்க்கப்புரட்டும் சேர்ந்திருக்கின்றன. முற்காலத்தைய ஆசாரங்களையும் பழக்க வழக்கங்களையும், சொள்கைகளையும் வேரறுத்துவிட விரும்புகின்ற மார்க்கப்புரட்டர்கள் இஸ்லாத்திற்கு இடறல் செய்வது போலவே குறுகிய நோக்கமும் துவேஷமு முள்ளவர்களும் இஸ்லாத்திற்குத் தீங்கிழைத்து வருகின்றனர். பிரயோஜனகரமான எந்தச் சீர்திருத்தத்தையும் ஒப்புக்கொள்வதற்கு இவர்கள் தயாராக இல்லை. எந்தப் புதிய காரியத்தையும்—அது எவ்வளவு நன்மை கொடுப்பதாக இருந்தாலும் சரியே அதனை—அங்கீகரிக்காமலிருப்பது மட்டுமல்லாமல் அதனை ஒப்புக்கொள்வது மாபெரும் பாதகத்தை யுண்டாக்கிவிடும் என்றும், இஸ்லாத்திற்குத் தீங்கிழைக்குமென்றும் கருதுகின்றனர். எனவே, இவ்விருவகைக் கூட்டத்தாரும் இஸ்லாத்திற்கு எல்லையற்ற இடறல் செய்துவிட்டனர் என்பது உண்மை.

ஜாதி மத வித்தியாசம் அடியுடன் இல்லாதொழிந்து பரங்கியரும் கீழ்நாட்டவரும் ஐக்கியமாகிவிட வேண்டும் என்று மார்க்கப்புரட்டர்கள் விரும்பி முயலுகின்றனர். பரங்கியரின் நாகரீகத்தில் கீழ்நாட்டவர் ரசாயன மாறுபாட்டைப்போல் முற்றிலும் கலந்து இல்லாதொழிந்துவிட வேண்டுமென்பதே இவர்களது நோக்கமாகும். ஐரோப்பிய நாகரீகத்தைக் கண்டு மெய் மறந்து அதன் உன்னதத்தை ஒப்

புக்கொண்டுள்ளவர்களால் மேலே கண்ட முயற்சி செய்யப்படுகிறது. ஆனால், ஒவ்வொரு ஜாதியினரும் தங்களுக்குரிய ஆசாரம், பழக்கம், வழக்கம், உடை, நடை, பாஷை, உண்டி முதலிய சகல காரியங்களிலும் ஸ்திரமாக இருந்துகொண்டு தங்களுக்கு அக்கம்பக்கத்திலுள்ளவைகளையும் அனுசரித்து இயற்கையான வாழ்க்கை முறையை நடத்தவேண்டும் என்பதே இயற்கைச் சட்டத்தின் நோக்கமாகும்.

நாம் பரங்கியரை எடுத்துக்கொண்டு அவர்கள் உலகினுக்கு உயர்ந்த முன்மாதிரி என்று கருதப்படுவதாக வைத்துக்கொள்வோம். அப்படி இருப்பினும் ஒவ்வொரு ஆங்கிலேயனும் ஆங்கிலேயனாக இருப்பதையே விரும்புகிறான். ஒவ்வொரு பிரஞ்சுக்காரனும் பிரஞ்சுக்காரனாக இருக்கவே விரும்புகிறான். ஒவ்வொரு ஜெர்மானியனும் ஜெர்மானியனாக இருப்பதிலேயே திருப்தி கொள்கின்றனன். இதே நிலைமைதான் இத்தாலியர், ரஷ்யர், டச்சுக்காரர் ஆகியவர்களுக்கெல்லாம் இருந்து வருகிறது. இப்பொழுது அயர்லாந்துக்காரர்களை எடுத்துக்கொள்வோம். இவர்களது தேசம் இங்கிலாந்திற்குப் பக்கத்திலுள்ள ஒரு சிறு தீவு. ஆங்கிலேயர்கள் சென்ற எழு நூறு வருஷ காலமாக அத்தேசத்தினரைத் தங்களுடன் இணைத்துவிட முயன்று கொண்டிருந்தனர். இறுதியாக ஆங்கிலேயர்கள் இம்முயற்சியில் தோல்வியே யடைந்தனர். இப்பொழுது அவர்களது பாஷை ஆங்கிலத்திற்கு வேறானதாகவும், சமூகப் பழக்க வழக்கங்களும் அவ்விதமாகவே வேறாகவுமிருக்கின்றன. இவர்களைப்போலவே பிரான்சு தேசத்திற்கு வடக்கில் பிர்த்யூனி என்ற ஒருவகை ஜனங்களிருக்கின்றனர். பிரஞ்சுக்காரர்கள் இவர்களைத் தங்களுடன் ஐக்கியப்படுத்திவிட முயன்றும் இவர்கள் தெளிவாக மறுத்துவிட்டு அவர்கள் தங்களது சமூக சுதந்திரத்தைப் பாதுகாத்துக்கொண்டிருக்கின்றனர். இதுபோலவே பிரான்சின் தென்பகுதியில் பாஷ்கன்ஸ் என்பதாக ஒருவகை ஜனங்களிருந்து வருகின்றனர். அவர்கள் பூர்வ காலந்தொடுத்து நாளிதுவரை வேறு எந்த ஜனங்களுடனும் சேர்ந்துகொள்வதே இல்லை. அவர்கள் மொத்தம் ஜனத்தொகையில் 10 லக்ஷம் பேர்களேயாவர். ஆயினும், அவர்கள் அறபியர், ஸ்பானியர், பிரஞ்சுக்காரர் முதலியவர்களுக்குக் கீழில் அடங்கிப் பிரஜைகளாக இருந்தும் எந்த சமூகத்தாருடனும் ஐக்கியமாகிவிடவே இல்லை. இவர்கள் இன்னும் கூட தங்களது தாய்பாஷையையும், சொந்த பழக்க வழக்கங்களையுமே அனுஷ்டித்து வருகின்றனர்.

இவ்விதமாக பெல்ஜிய தேசத்தில் பல மின்க் என்பதாக ஒரு சிறுவகுப்பினரிருக்கின்றனர். இவர்கள் பேசும் பாஷைபிரஞ்சு பாஷை அல்ல. பெல்ஜிய தேசத்தினர் பிரஞ்சுபாஷை பேசுபவர்களாக இருந்தும் இவர்கள் தங்கள் ஸ்கூல்களில்பிரஞ்சுப் பாஷை போதிப்பதை அடியுடன் நிராகரித்துவிட்டனர். இதன் பலனாகபெல்ஜிய கவர்ன்மெண்டு இவர்களது பாஷையையும் அரசாங்க பாஷைகளிலொன்றென ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று.

ஸ்விட்ஜர்லாந்தில் பிரான்சு, இத்தாலி, ஜெர்மன் ஆகிய மூவகை தேசத்தினர் வசிக்கின்றனர். இவர்களில் ஜெர்மானியர் 28 லக்ஷம், பிரஞ்சுக்காரர்கள் 8 லக்ஷம், இத்தாலியர்கள் 2 லக்ஷத்திற்குக் கொஞ்சம் அதிகமாக இருக்கின்றனர். இம்மூவகை ஜனங்களும் ஒரே அரசாங்கத்தின் கீழிருந்தும், இன்னும் இவர்கள் எல்லோருக்கும் ஒரேவிதமான நன்மை யிருந்தும் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பாஷையையே பேசி வருகின்றனர். தங்களது சமூகாசாரத்தைக் கைவிடாமல் அதனைப் பாதுகாத்தும் வருகின்றனர்.

டென்மார்க், ஸ்கான்டிநேவியா, ஹாலண்டு ஆகிய தேசங்களில் வாழ்பவர்கள் ஜெர்மானியர் எனும் விருக்ஷத்தின் கிளைகளேயாவர். ஆனால், அவர்கள் ஒருமுறை தங்கள் சமூகத்திலிருந்து பிரிந்துபோன பின்னர் இப்பொழுது திரும்பவும் அதனுடன் சேர்ந்துகொள்ளச் சம்மதிக்கின்றனரில்லை. சீக் என்னும் ஜாதியினர் பல நூற்றாண்டுகளாக ஜெர்மனியருக்குக் கீழாகவே இருந்தனர். ஆயினும், அவர்கள் தங்கள் சமூக அந்தஸ்தையும் ஆசாரத்தையும் விட்டுவிடவில்லை. அவர்கள் ஜர்மனியராகி விடவில்லை. ஆனாலும், இவர்கள் 500 வருஷங்களாகத் தங்களது பாஷை, ஆசாரம் ஆகியவைகளைப் பாதுகாத்து வந்து இப்பொழுது மகாயுத்தத்திற்குப் பிறகு சுயேச்சை யடைந்தனர்.

போலண்டு தேசத்தினரைத் தங்களுக்குள் ஐக்கியப்படுத்திவிட வேண்டுமென்று ரஷ்யர் இருநூறு வருஷ காலமாக முயன்று பார்த்தனர். அவர்களது சுயபாஷையை அழித்துவிடவும் பிரயத்தனம் செய்தனர். இவ்விரு தேசத்தினரும் ஒரு தாதுவிலிருந்து பிரிந்தவர்களா

யிருந்தும் ரஷ்யரின் இம்முயற்சி பிரயோஜன மற்றதாகவே முடிந்தது. இறுதியாக மகாயுத்தத்திற்குப் பிறகு போலண்டு வாசிகள் அரசியல் சுயேச்சையையும் அடைந்துவிட்டனர்.

போலண்டு வாசிகள் மூன்று கோடி ஜனத்தொகையினராக இருப்பதால் சுயேச்சையடைந்தனர் என்று நினைக்கவேண்டாம். இருபது லக்ஷம் ஜனத்தொகையினராகவுள்ள ஸ்தூனியரும் சுயேச்சையடைந்தனர். இதற்குக் காரணம் அவர்கள் தங்களது சமூகாசாரங்களை எப்பொழுதும் மங்கவிடாமல் வைத்திருந்ததேயாகும். இவர்கள் இப்பொழுது ரஷ்யர்களை விட்டுப் பிரிந்து சுயேச்சையானதுமட்டுமில்லாமல் தங்களது தாய் பாஷையையும் உயிர்ப்பித்ததுடன், அதற்கு வேண்டிய நெடுங் கணக்கையும் (அக்ஷரங்களையும்)கூட உண்டாக்கிக்கொண்டனர். இதே மாதிரியாகவே பின்லாண்டு வாசிகளுமிருக்கின்றனர்.

லிதுவானியரைத் தங்களுக்குள் ஐக்கியப்படுத்திவிடுவதற்காக ரஷ்யர்கள் தங்களாலான எல்லா முயற்சிகளையும் செய்தனர். ஆயினும், அவர்கள் வெற்றியடையவே இல்லை. இவர்களது சமூக வித்தியாசங்களும் ஆசாரங்களும் அழியாமலிருந்ததனாலேயே இவர்கள் மகாயுத்தத்திற்குப் பிறகு சுயேச்சையடையமுடிந்தது. இந்த ஜனங்களது ஜனத்தொகை 40 லக்ஷம் தான். எனினும், இப்பொழுது அவர்களுக்கு ரஷ்யர்களுடன் எத்தகைய சம்மந்தமுமில்லை.

நாம் மேலே எடுத்துக்கூறியுள்ள உதாரணங்களிலிருந்து நாம் அறிந்துகொள்ள வேண்டிய விஷயமென்னவெனில், ஐரோப்பியரில் எந்தெந்த வகுப்பினர் தங்கள் வகுப்பினுக்குரிய ஆசாரங்களை மங்கவிடாமற் காப்பாற்றி வைத்திருந்தார்களோ அவர்களனைவரும் சுயேச்சையும் சுதந்தரமுமடைந்தனர் என்பதேயாகும். ருஷியாவைப் பார்க்கினும் பலம் பொருந்திய அரசாங்கம் வேறேதேனுமுளதோ? அந்த அரசாங்கமும்கூட சிறு சிறு ஜாதியினரையும் தங்களுக்குள் ஐக்கியப்படுத்திவிட முடியவில்லை. இதுபோலவே ஜெர்மானியரும் தங்கள் முயற்சியில் தோல்வியடைந்தனர். இவ்வாறு தோல்வியுற்றதற்குக் காரணமென்ன வெனில், உலகில் உயிருள்ள எந்தச் சமூகமும்—அது எவ்வளவு சிறியதாயிருந்தாலும் சரியே—தனது சமூகத்திற்குரிய ஆசாரம் பழக்க வழக்கம் ஆகியவைகளை இழந்துவிடத் தயாராக இல்லாதிருந்ததேயாகும். ஆகவே, எந்த சமூகம் தனது சமூக அந்தஸ்தைக் காப்பாற்றியதோ அதுதான் இறுதியில் சுயேச்சையடைந்தது.

இவ்விதமாகவே, துருக்கர் ஸர்பியரின்மீது பல நூற்றாண்டுகள் ஆட்சிபுரிந்தனர். ஆயினும், அவர்களது அதிகாரம் அச்சமூகத்தவரின் ஆசாரங்களை மிகைக்க முடியவில்லை. அல்பானியர் வெகுகாலமாக கிரேக்கருக்கும் ஸலாவியருக்கும் இடையில் வசித்து வருகின்றனர். அப்படி இருந்தும் அவர்கள் இன்றைக்கும் கூடபரிபூரணமான அல்பானியராகவே இருந்து வருகின்றனர். பல்கேரியரை எடுத்துக்கொள்வோம். இவர்கள் உரோமர் ஸலாவியர், லத்தீனியர் ஆகிய மூன்றுவகை சமூகத்தினருக்கு மத்தியில் வாழ்கின்றனர். துருக்கருக்குக் கீழிலுமிருந்தனர். அவர்களது பாஷையையுங்கற்றனர். ஆனாலும், அவர்கள் தங்கள் சமூக நாகரீகத்தையும், சமூகாசாரங்களையும் அழியவிடவில்லை. இதன் பலனாக இவகர்ளனைவரும் ஒருவர்பின் னொருவராகச் சுதந்திரம் பெற்றனர்.

நான் மேலே கூறிய உதாரணங்களெல்லாம் ஐரோப்பாவிற்குள்ளிருந்தே எடுத்துக் காட்டியவைகளாகும். நாகரீக மடைந்தவர்களென நினைத்துக்கொண்டு, மேனாட்டு மோஸ்தரிலிருக்கும் மார்க்கப் புரட்டை விரும்பும் நண்பர்கள் வீழ்ச்சியடைந்த சமூகத்தினரைப் பின்பற்ற விரும்பவில்லை என்று கூறாமலிருக்க வேண்டும் என்பதற்காகவே நான் ஐரோப்பிய சமூகத்தினரிலிருந்து உதாரணங்காட்டி இருக்கிறேன். ஆகவே, நான் கூறி இருக்கிற உதாரணங்களின்மீது இக்கூறாத்தினர் எவ்விதத்திலும் ஆக்ஷேபனை செய்வதற்கில்லை. நான் உதாரணம் கூறிய மேனாட்டினர் அனைவரும் கற்றோர்கள், நாகரீகமடைந்தவர்கள், அழகிய நகரங்களில் வசிப்பவர்கள், சர்வகலாசாலைகள், புத்தகாலயங்கள், கல்விச்சபைகள், ராணுவம், கப்பற்படை முதலியவைகளெல்லாம் வைத்துக்கொண்டிருப்பவர்களாவார்கள்.

ஜப்பானியரைக் கவனியுங்கள்

இப்பொழுது நான் ஐரோப்பைவிட்டு ஜப்பானின்பால் திரும்புகிறேன். ஜப்பானியரின் முன்னேற்றம் பரங்கியரின் முன்னேற்றத்திற்கு எவ்விதத்திலும் குறைந்ததில்லை. அவர்கள் பரங்கியரைப்போல் தங்களது ஆசாரம், பழக்கம், வழக்கம், பாஷை, மதம் ஆகியவைகளைப் பரிபூரணமாகப் பாதுகாத்து வருகின்ற

றனர். ஜப்பானின் தற்போதைய நிலைமையை அறிய வேண்டுமாயின் ஐரோப்பிய பத்திரிகா நிருபர் ஒருவர் ஜப்பானைப்பற்றி எழுதியனுப்பியதைக் கீழே தருகிறேன். இவ்வியாசம் ஜினீவாவிலுள்ள ஒரு பத்திரிகையில் 20-10-31-ல் பிரசுரமாகி இருக்கிறது. அவ்வியாசம் வருமாறு:—

"ஜப்பானியர் சிங்காரித்துக்கொள்ளும் காரியத்தில் அதிகம் சிரத்தைகாட்டி வருகின்றனர். ஜப்பானியர் பணம் சம்பாதிப்பதில் அதிகம் ஈடுபட்டிருந்தாலும் தங்களது விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்காகவே அதாவது தங்களை அழகுபடுத்திக்கொள்ளுதல் சம்மந்தமான காரியங்களுக்காகவே சம்பாதிக்கின்றனர். இதற்கப்புறம் அவர்களுக்கு தங்கள் சமூக அபிமானம் மிக விருந்துவருகிறது. ஏழு வருஷ காலங்களுக்குள் அவர்கள் சிதறிக்கிடந்த பல அரசாங்கங்களை ஒன்றுகூட்டி கட்டுப்பாடான ஒரு அரசாங்கத்தை ஏற்படுத்திக்கொண்டதைப்பற்றிப் பெருமை கொள்கின்றனர். ஜப்பானியரின் இந்த ராஜீய புரட்சியில் அவர்களது மதத்திற்கு வேண்டிய செல்வாக்கு குன்றாமலிருந்துகொண்டே இருந்தது."

இந்நிருபர் எழுதியுள்ள இவ்வியாசத்தின் கடைசி வாக்கியத்தை வாசகர்கள் கவனிக்க வேண்டும். அதாவது ஜப்பானியர்களின் ராஜீய புரட்சியில் மதத்தின் செல்வாக்கிருந்துகொண்டிருந்தது என்ற வாக்கியத்தைக் கவனிக்கவேண்டும். உண்மை ஜப்பானியரின் மதம் ஒன்றுமே இல்லை; முன்னோர்கள் செய்துவந்த ஆசாரங்கள் தான் அவர்களது மதம். அப்படி இருந்தும் இன்றைய ஜப்பானியர் நவநாகரீகத்திற்குரிய சகல காரியங்களையும் ஸ்வீகரித்துக்கொண்டதுடன், தங்களது பூர்வத்தை மறந்துவிடவுமில்லை, தங்கள் சமூகத்தைத்துறந்துவிடவுமில்லை. மேனாட்டினரின் கூற்றுக்களைச் செவியேற்று மேனாட்டினருடன் போர்செய்வதற்குரிய காரியங்களைமட்டிலும் எடுத்துக்கொள்கின்றனர். ஷை பத்திரிகா நிருபர் மேலும் எழுதுவதாவது :—

"முற்காலத்தில் ஜப்பானியர் தூரதேசங்களுக்குச் செல்வதை மிகவும் கண்டிப்பாகவெறுத்துக்கொண்டிருந்தனர். தங்கள் நாட்டில் அந்நியர் வருவதையும் அனுமதிப்பதில்லை. ஆனால், இந்தப் புதிய முன்னேற்றத்திற்குப் பிறகு இவ்வபிப்பிராயங்களெல்லாம் மாறிவிட்டன. அவர்கள் பிரமிக்கத்தக்கவிதமாக இறந்த காலத்தினுடைய குறைகளை நிவர்த்திசெய்துவிட்டனர். இவர்களது இம்முயற்சிகளின் பயன்கள் இப்பொழுது நம்கண்முன் நிற்கின்றன. அப்படி இருந்தும் ஜப்பானியர் தங்களது இறந்தகால நிலையை மிகவும் கிருபையாகவே மதிக்கின்றனர். தவிரவும் தங்களுக்கு இன்றியமையாதனவாகவுள்ள காரியங்களையே அவர்கள் மேனாட்டினரிடமிருந்து எடுத்துக்கொள்கின்றனர். இன்னும் தங்களது நாகரீகமும் ஆசாரமும் மற்றவர்களது ஆசாரங்களைப் பார்க்கினும் சிறந்தனவென்று கருதி ஒவ்வொரு ஜப்பானியனும் எப்பொழுதும் மகிழ்ச்சியடைந்து கொண்டே இருக்கின்றனர்.

இன்றுவரை ஜப்பானியரின் வணக்கஸ்தலங்களில் புத்தருடைய விக்கிரகமுமிருக்கிறது. இவ்விக்கிரகமும் இதர விக்கிரகங்களும் அவர்களால் கண்ணியமாக மதிக்கப்பட்டு வருகின்றன. இன்றுங்கூட பூர்வீக காலத்தைப்போலவே அவைகள் வணங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. பலநூற்றாண்டுகளுக்குமுன் அவர்கள் அவைகளின்பால் எவ்வாறு பக்திகொண்டிருந்தனரோ அவ்வாறே இன்றும் நம்பிக்கை கொண்டுதானிருக்கின்றனர். ஜப்பானியரை போல்ஷவிக் இயக்கமும் இதர தீங்கான இயக்கங்களும் பாதிக்காதிருப்பதற்குக் காரணம் அவர்கள் தங்கள் தேவதைகளையும் ஆசாரங்களையும் பெருமையாக மதிப்பதேயாகும்.".

ஜப்பானியரைப்பற்றி சில வருஷங்களுக்கு முன் பிரஞ்சு பத்திரிகை ஒன்றில் ஒரு வியாசம் வெளிவந்தது. அவ்வியாசக்கர்த்தா நடுநிலைமையாக இருந்து அவ்வியாசத்தை எழுதி இருப்பதால் அதற்கு நாட்டில் மிகுந்த ஆதரவேற்பட்டது. ஆகவே, அவ்வியாசத்திலுள்ள சில வசனங்களைமட்டிலும் ஈண்டு குறிப்பிடுகின்றேன் :—

"ஜப்பானியர் முன்னேற்ற மடைய விரும்பிய போது ஐரோப்பா, அமெரிக்கா நாடுகளில் பொருளாதாரம், ராஜீயம், நாகரீகம், ராணுவம் முதலிய அவசியமான காரியங்களையே ஸ்விகரித்துக்கொள்ள முயன்றனர். அவர்கள் தங்கள் சமூகத்திலுள்ள சில காரியங்களைச் சீர்திருத்துகின்றனர். சில விஷயங்களைப் புதிதாகச் சேர்த்துக்கொள்கின்றனர். சில காரியங்களை விட்டுவிடுகின்றனர். இவ்விதமாகவே எல்லா இலாக்காக்களிலும் சீர்திருத்தம் செய்கின்றனர்."

ஜப்பானியரும், பரங்கியரும் தங்களுடைய மதாசாரப்படி நடந்துகொள்வதன் காரணமாக அவர்களை நாம் மத வைராக்கிகள் என்று கருதுகிறேமா?

முஸ்லிம்கள் தங்கள் மதத்தைப் பின்பற்றி நடப்பதன்காரணமாக அவர்களை மதவைராக்கிகள் என்று சொல்வதாயின் ஜப்பானியரை ஏன் மதவைராக்கிகள் என்று சொல்லக்கூடாது என்ற வினு இந்த இடத்தில் உண்டாகின்றது. அவர்கள் அபாரமான முன்னேற்றமடைந்த பின்னரும் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னுள்ள இவ்வாருன ஆசாரங்களையும், கொள்கைகளையும் அனுஷ்டித்து வருவதும், தங்களரசரை, தெய்வமாகவும், வணங்கப்படத் தகுந்தவராகவும் கருதி வருவதும், பிற்போக்கல்லவோ? என்னைப் பொறுத்தவரையில், ஜப்பானியரை ஒருவர் மத வைராக்கியங்கொண்டவர்களெனக் கூறுவாராயின் அப்படிப்பட்ட மத வைராக்கியம் வரவேற்கத் தகுந்ததென்றே யான் கூறுவேன். இன்னமும் பாருங்கள்! இங்கிலாந்தின் அரசரும், இந்தியாவின் சக்கிரவர்த்தியுமானவர் 40 கோடி மக்களுக்கு அரசராக இருக்கிறுர். இவரது பிரஜைகளில் வெள்ளையர், கருப்பர், கீழ்நாட்டவர், மேனட்டவர் முதலிய பலவகை வர்ணத்தாரிருக்கின்றனர். அவர் கிறிஸ்துவர்களால் மாதாகோவிலில் பிரதம குருவென்பதாகவே கருதப்பட்டு வருகிறுர். அப்படி இருப்பதால் அரசர் பெருமானை மதவைராக்கியம் பொருந்தியவர் என்று ஏன் நாம் சொல்வதில்லை? அவரது சமூகத்தினரை நாகரீகமற்றவர்களென்று நாம் கூறுவதில்லை? தவிரவும், ஐரோப்பியர்கள் தங்களுக்குள் விரோதமும் வேற்றுமையும் இருந்தும் அவர்களனைவரும் கிறிஸ்து மதத்தைப் பிரசாரம் செய்வதில் ஒற்றுமையாகவே இருக்கின்றனர். இவர்களை நாம் மதவைராக்கிகள் என்று கூறுவதில்லை. இவர்களது மதம் 1900-வருஷங்களுக்கு முன்னர் தோன்றியதாக இருப்பதால் சீர்திருத்தத்தை விரும்பும் ஜனங்களுக்கு இவ்வருஷங்களே நீண்டகாலமாக இருக்கிறது.

நாம் யூதர்களைச் சிறந்தவர்களென ஒப்புக்கொள்ள விரும்பமாட்டோமாயினும் அவர்களது புத்திசாலித்தனத்தையும் முயற்சியையும் நாம் மறுக்கமுடியாது. இவர்களும்கூட இற்றைக்குப் பல்லாயிரம் வருடங்களுக்குமுன் அருளப்பட்ட தௌருத் வேதத்தைப்பற்றி இன்றைக்கும் பெருமை கொள்கின்றனர். இதுமட்டுமா? இன்றுள்ள யூத வாலிபர்கள் செத்துப்போன தங்களது 'ஹிப்ரு' பாஷையை மறுபடியும் உயிர்ப்பிப்பதற்காக இடைவிடாதுழைத்து வருகின்றனர். இவர்களையும் நாம் மதவைராக்கிகள் என்றுரைப்பதில்லை. பிரபல யூத தலைவர் ஒருவர் பிரஞ்சு பத்திரிகை பிரதிநிதிக்குப் பேட்டி யளித்தபோது "இன்றைய பாலஸ்தீனம் முழுவதும் நபிமார்களது பாஷையைப் பேசி வருகிறது" என்று பெருமையாகக் கூறினுர். இன்றைய பாலஸ்தீனம் என்றதில் "யூதர்களது பாலஸ்தீனம்" என்பது அவர் கருத்தாகும். அங்கு யூதர்கள் தங்களது பழைய தாய்பாஷையான ஹிப்ருவைத் தங்கள் பிள்ளைகளுக்குக் கற்பிப்பதற்காக எங்கும் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி இருக்கின்றனர். இப்பொழுது உலகில் என்ன நிகழுகின்றதென்பதை முஸ்லிம்கள் கேள்விப்பட்டேனுமிருக்கின்றனரா? அல்லது இன்றைய நாகரீக உலகம் எந்நிலைமையி லிருக்கிறதென்பதை உணர்ந்தேனுமிருக்கிறுர்களா? இச்சிறு வியாசத்தில் இதனைப்பார்க்கினும் அதிகமான உதாரணங்களை எடுத்துக் கூறமுடியவில்லை. சுருங்கக் கூறுமிடத்து முஸ்லிம்களைத் தவிர்த்து உலகிலுள்ள மற்றெல்லா ஜாதியினரும் தங்கள் சமூகம், மதம், பழக்கம்,வழக்கம், ஆசாரம், ஒழுக்கம் ஆகிய சகலவற்றையும் காப்பதில் முனைந்து நிற்கின்றனர்.

ஆனுல், முஸ்லிம்களது நிலைமையைப் பார்க்குமிடத்து நமக்கு மிகவும் ஆச்சரியமேற்படுகிறது. உண்மை முஸ்லிம் ஒருவர் திருகுர்ஆனின்பால் தனது முஸ்லிம் சகோதரரை அழைப்பாராயின் அல்லது இஸ்லாமியக் கொள்கைகள், ஆசாரங்கள், அறபிப் பாஷை, கீழ்நாட்டு நாகரீகத்தை உயிர்ப்பித்தல் ஆகியவைகளின்பால் அழைப்பாராயின் நவநாகரிகத்தில் சிக்குண்ட முஸ்லிம்கள் இவர்களுக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்கின்றனர். இவர்களை மத வைராக்கியம் கொண்டவர்களென இயம்புகின்றனர். "இப்புதுக் காலத்தில் நீங்கள் பழைய காலத்துச் சமாச்சாரத்தைக் கடைப்பிடித்தொழுகுவதுடன் பிரசாரமும் செய்வதால் நீங்கள் உறுப்படியாகப் போவதில்லை" என்று அவரிடம் நேருக்கு நேராகவும் கூறிவிடுகின்றனர்.

இந்த நவ நாகரீகக்காரர்களின் புத்தியைப் பார்த்து நாம் கண்ணீர் வடிக்க வேண்டியதாக இருக்கிறது. எல்லா ஜாதியினரும் முன்னேற்ற

மடைந்துவிட்டனர். முன்னேறிச் சென்று கொண்டு மிருக்கின்றனர். இப்படி முன்னேற்ற மடைந்தவர்களில் கிறிஸ்துவர்கள் தங்களது இஞ்ஜீல் வேதத்தையோ மாதா கோவிலேயோ விட்டுவிடவுமில்லை. யூதர்கள் தங்களது தௌராத்தையோ வணக்கஸ்தலத்தையோ ஒழிக்கவுமில்லை. ஜப்பானியர் தங்களது விக்கிரகத்தைப் பரிசுத்தமாக எண்ணிக்கொண்டிருக்கின்றனர். ஆனால், மேனாட்டு மோஸ்தராவுள்ள முஸ்லிம் இளைஞர்கள், அடிமைகளாகவும், பின் தள்ளப்பட்டவர்களாகவுமிருந்து கொண்டு "நாம் திருகுர்ஆனையும், நமது மதக் கொள்கைகளையும், ஆசாரங்களையும், உணவு உடை முதலியவைகளையும் விட்டுவிடாத வரை நாம் முன்னேற்ற மடைய முடியாது என்று கூறுகின்றதைப் பார்த்து வருந்தாதிருக்க முடியவில்லை. இது புத்திசாலித்தனமா? அல்லது கூபத்தியக்காரத்தனமா? கீழ்நாட்டிலுள்ள மார்க்கப்புரட்டர்களான இவ்வறிவிலிகள் கீழ்நாட்டிற்கும் இஸ்லாத்திற்கும் இழைத்துவரும் தீங்குகள் அனந்தமாகும். இனி பிற்போக்காளர்களானவர்கள் இஸ்லாத்திற்கு எவ்வளவு தீங்கிழைத்து வருகின்றனர் என்பதைக் கூறுவாம்.

(தொடரும்)

வஹ்தத்துல் உஜூத். அல்லது உள்ளமைப் பொருள் ஒன்றே

(சென்ற 234-ம் பக்கத் தொடர்)

"இஷ்கு" "முஹப்பத்" (காதல்—அன்பு) என்பதன் இரகசியங்களை, யாவரும் நன்குணர்ந்திருப்பார்கள் என்பதற்கில்லை யாதலால் நாம் இராஜபாட்டையில் இறங்கி நடப்பதற்கிடையே 'இஷ்கை'ப்பற்றி சற்று ஆராய்ந்து செல்லுவோம்.

'இஷ்கு' என்னும் காதல் 'ஹகீகி' (உண்மையானது) என்றும் 'மஜாஸி' (பொய்மையானது, உண்மையைப்போன்றது) என்றும் இருவகைப்படும். இவ்விரண்டில் முந்தியதான 'ஹகீகி' எல்லையற்றதாகும். இதையே பொதுவாய் நாம் பேரின்பமென்று பகருகின்றோம். மற்றது எல்லைகுட்பட்டதாகும். அதைச் சிற்றின்பமென்று சாற்றுகிறோம். உண்மையான பொருளை, அல்லது அவ்வுண்மைப் பொருளின்பால் கொண்டு சேர்க்கும் பொருளை காதலிப்பதுதான் பேரின்பமாகும். சிற்றின்பமென்பது பொய்ப்பொருளை காதலிப்பதாம். மெய்ப்பொருள் எனப்படுவது அல்லாஹு சுபுஹானஹு வத ஆலா ஒருவனேயாகும்; மற்றவைகளெல்லாம் பொய்ப்பொருள் என்பதை நாம் முன்னமேயே வாசித்து வந்திருக்கிறோம்.

'ஹக்கு' என்னும் மெய்ப்பொருள், எவ்வித எல்லைக்குள்ளும் கட்டுப்படாதிருப்பதனால், அப்பொருளைக் காதலிப்பதான பேரின்பத்திற்கு, எல்லை இல்லை என்றும் 'கல்கு' என்னும் ஏனைய பொய்ப்பொருளைக்காதலிப்பதான சிற்றின்பத்திற்கு, அப்பொய்ப் பொருள்களே எல்லையா யிருப்பதனால், அது (சிற்றின்பம்) எல்லைக்குட்பட்டதென்றும் கூறலானோம்.

உதாஹரணமாக, 'கைஸு' (மஜ்னூன், ரஹ்) வின் காதலுக்கு ஏந்திழை 'லைலா' தானே எல்லையா யிருந்தாள்; நல்லவேளையாக 'கைஸு' வென்னும் அப்பெரியார் எல்லைக்கப்பால் சற்று சென்றுவிட்டார்; என்றென்றும் அழியாப் பாக்கியம் பெற்றார். இல்லையென்றால் அவர் கதியை என் கேட்கின்றீர்கள்; அதோகதி தான்.

'ஹஜ்ரத்' "பஹ்லூலெ மஜ்னூன்" (ரஹ்.) போன்ற ஆரிபீன், (மெஞ்ஞானி)கள் யாவரும் காதல்கொண்டவர்கள்தாம். ஆனால் அவர்களின் காதலுக்கு எல்லையே இல்லை. ஏனெனில் 'ஹக்கு' (மெய்ப்பொருள்) என்னும் வல்ல நாயன் அல்லவா அவர்களின் காதலுக்குரியபொருள். அம்மெய்ப் பொருளை (ஹக்கை)யே அவர் (ஆரிபீன்)களின் காதலுக்கு எல்லையாயிருக்கின்றதென்று இயம்பலாமே என்றால் ஆதி அந்தம், காலம் கோலம், ஆழம்

நீளம், மேல்கீழ், முதலிய திட்டத்திற்குள் மட்டிடப்பட்டு, கட்டுப்படாததும், தன்னில் எல்லாவற்றையும் கட்டுப்படுத்திக் கொண்டு அவைகளோடு சேராது பரிசுத்தமாயும், தன்னை விட்டு எப்பொருளும் அப்புறப்படாதவாறு அணுவினுக் கணுவாய், உயிரினுக் குயிராய் உரைந்த மெய்ப்பொருளை எல்லையென்றுகொள்வது எங்ஙனம் பொருந்தும். எல்லையென்றால் அஃதொரு முடிவை காட்டவேண்டு மல்லவா? அம்மெய்ப்பொருளுக்கோ, முடிவே இல்லை; என்பதனால் அதை எல்லையென்று கொள்வதற்கில்லை. எனவே 'அல்லாஹ்வை ஆசித்தோர்களாய அன்பியாக் (தீர்க்கதரிசி)கள் அவ்லியாக் (மெஞ்ஞானி) கள் பேரின்பக்காதல் கொண்ட அன்று முதல் இன்றுவரை அக்(காதற்) கடலிலே அவரவர்கள் தங்கள் தங்கள், திறமைக்குத்தக்கவாறு மூச்சைபிடித்து மூழ்கிபாக்கியத்தின்மீது பாக்கியமாக கொடிக்கு கோடி மேல் போய்கொண்டே இருக்கிறார்கள். இனியும் ஊழி ஊழி என்றென்றும் அவ்வாறுதான், ஆழ போய்கொண்டே இருப்பார்கள் என்றால், அப்பேரின்பக் கடலை பேனா முனையில் காட்டுவதெங்ஙனம்?

'லைலா' வின்மீது காதல்கொண்ட 'கைஸு' வின் உண்மைக்கதையின் முடிவுதான், 'ஆரிபீன்' களின் அகண்ட மெய்க்காதலின் ஆரம்பமாகும்; என்றால் அவர்களின் உன்னத நிலைமைக்கும் உணர்ச்சிக்கும் ஒரு எல்லை இருப்பதாக எண்ணமுடியாது. இவர்களின் உணர்ச்சி 'கைஸு' வின் உணர்ச்சியை பார்க்கினும் வலிவுள்ளது என்பதை நாம் உணரவேண்டுமானால் 'கைஸு'வின் கதையைப் படித்ததைப்போல் 'ஆரிபீன்' களின் சரித்திரங்களில்சிலவற்றையாவது படிக்கவேண்டும். அப்பொழுது அவர்களின் உணர்ச்சித்திறனும், அவ்வுணர்ச்சியின்எழுச்சியினால் அவர்களில் ஏற்படும் அனேக மனேக நிலைமைகளும் நமக்கு நன்கு புலனாகும். அதன்பின், 'வஹ்தத்துல் உஜூத்' என்பதை நமக்கு ஒருவர் சொல்லிவைக்கவேண்டும்; அல்லது எழுதிக்காட்ட வேண்டுமென்னும் அவசியமேற்படாது. உண்மையில் 'வஹ்தத்துல் உஜூத்,' அல்லது தவ்ஹீத் என்பது, ஒருவர் சொல்லி விளக்கி காட்டுவதற்கான விஷயமன்று.

அறிவென்னும் 'இல்மு' "இல்முல்கஸ்ப்" என்றும் "இல்முல் கஷ்ப்". என்றும் இருவகைப்படும். 'இல்முல் கஸ்ப்' என்பது பிரயாசையால் ஏற்படும் அறிவாகும். இதையே 'இல்முல் முஆமிலா' என்று கூறுவர். இவ்வறிவை ஒருவருக்கொருவர்சொல்லித்தெறிந்து கொள்ள முடியும், "இல்முல் கஷ்ப்" என்பது பிரையாசையினால் தோன்றும் அறிவன்று; 'அல்லாஹ்' வின் அருளினால் அகந்தெளிந்து தோன்றும் அறிவாகும். இதை 'இல்முல்முகாஷியா' என்பர். இவ்வறிவு ஆண்டவன் நாடிய பேர்களுக்கன்றி மற்றவர்களுக்குத் தெறியாது. சொன்னாலும் விளங்காது. விளங்காதுபோனாலும் பாதகமில்லை சொல்லுவதினால் என்ன குற்றம் ஏற்படப்போகிறதென்று நினைக்கலாம். ஆனால் அதை விளக்கிச்சொன்னால் கேட்பவர்கள், நேர்மாற்றமாய் விளங்கிக்கொள்ளுகிறார்கள். அவர்களின் 'ஈமான்' பலப்படுவதற்காக 'தவ்ஹீதை' விபரித்தால் 'காபிரா'கி விடுகின்றனர். அவர்கள் தப்பாய் விளங்கிக்கொண்ட 'குப்ரை' சரியான 'ஈமான்' என்று நினைத்துகொண்டு அவர்கள் சும்மா இருப்பதுமில்லை. வாதாடி வம்புக்கு நின்று 'குப்ரு' பிரசாரமும் செய்யத்தலைப்படுகிறார்கள். இந்தத் தொல்லையினாலேயே உண்மையான 'ஆரிபீன்' கள் தங்கள் அறைகளை தாளிட்டுக்கொண்டு இருக்குமிடம் தெரியாமல் இருக்கின்றனர். 'ஆரிபீன்' கள் வேடம் பூண்ட அஞ்ஞான பூபதிகளை நாம் இங்கு பொருட்படுத்துவதற்கில்லை.

உதாரணமாக நீண்டகாலத்திற்கு முன் 'ஹஜ்ரத் அபூ அப்தில்லாஹில் குரஷீ, (ரஹ்) அவர்களின் சீடர்கள் ஒருநாள் 'வஹ்தத்துல் உஜூத்' போன்ற "இல்முல் முகாஷபா"வில் சிலவற்றை தங்களுக்கு எடுத்துரைக்க வேண்டுமென்று அவர்களிடம் கேட்டுக்கொண்டார்கள். அப்பெரியார் சீடர்களை நோக்கி நீங்கள் எத்துணைபேர்கள் இருக்கின்றீர்களென்று கேட்கவே, சீடர்கள் நாங்கள் அறுநூறுபேர்களிருக்கின்றோம் என்றார்கள். ஹஜ்ரத்தவர்கள் அவ்வாறானால் உங்களுக்குப் பிரதிநிதிகளாக உங்களில் நூறுபெயர்களை தெறிந்தெடுங்கள். எனக் கட்டளையிட்டதற்கிணங்க நூறுநபர்களை தேர்ந்தெடுத்தார்கள். பின்னால் அந்த நூறு நபர்களில் இருபதுபேர்களை தேர்ந்தெடுக்கும்படி அப்பெரியார் கட்டளைசெய்தார். அவ்வாறே தேர்ந்தெடுக்கப்பட்டது. அதன்பின்னும் இருபதுபேர்களில் நாலுநபர்களை தேர்ந்தெடுக்கும்படி உத்திரவு செய்தார். அவ்வாறே நாலுபேர்களை எடுத்தார்கள் சீடர்கள். இவ்வாறு

தேர்ந்தெடுக்கப்பெற்ற நாலு பிரதிநிதிகளும் கலாவல்லுனர்களாகவும், அறிவும் ஆற்றலு முள்ளவர்களாயு மிருந்தனர். அப்பொழுது எல்லா சீடர்களையும்நோக்கி 'ஹஜ்ரத் அபூ அப் தில்லாஹில் குரஷி' (ரஹ்.) அவர்கள் கூறியதா வது, அகந்தெளிந்து ஆண்ட கையின் அருளி னுல் தானுய்த்தோன்ற வேண்டிய இரகசியங்களை நான் உங்களுக்கு எடுத்துக் கூறினுல் முதன் முதலில் என்னை காபிர் என்று தீர்ப்பளிப்பவர் கள் நீங்கள் தேர்ந்தெடுத்த இந்நால்வர்தான் என்பதே.

இதுவென்ன "ஜைனுல் ஆபிதீன் (ரலி.) அவர்கள் நாயகா! இரத்தினம்போன்ற அறிவை நான் வெளியிடுவேனென்ருல், "நீர் விக்ரக ஆராதனை செய்யும் 'முஷ்ரிக்' காகும்" என்று சொல்லப்படுவேன். மேலும் ஜனங்கள் எனது இரத்தத்தை ஒட்டிக் கொல்லுவதை ஆகுமான தென்றும் கருதுவார்கள். எனக் கூறி இருக் கிருர்கள். மேலும் ஹஜ்ரத் அபூ ஹுரைரா (ரலி.) அவர்கள் கூறி இருப்பதாவது: நான் நமதிரக்ஷகர் (ஸல்.) அவர்களிடமிருந்து இரண்டு வகை குடிப்பை அருந்தி இருக்கின் றேன். (இரண்டுவகை அறிவை தெரிந்திருக் கின்றேன்.) நான் இதுவரை உங்களிடம் வெளி யிட்டிருப்பதெல்லாம் அவ்விரண்டில் ஒரு வகையேயாகும். மற்ருென்றை வெளியிடுவே னென்ருல் எனது இக்குரல்வளை அறுக்கப்பட் டுப்போகும் என்பதே.

நேயர்காள்! இம்மூன்று பெரியார்களின் கூற் றுகள் எதைச் சுட்டிக்காட்டுகிற தென்பதை சற்று நாம் ஆருய்ந்து பார்க்கக்கடவோமாக. ஏனெனில், இக்காலை மார்க்கப் புறட்டர்களான அஞ்ஞானிகள் இக்கூற்றுகளை தங்களுக்காதர வாய் எடுத்துரைக்கவும்கூடும். (தொடரும்.)

மதம் மாறும் பிரசினையும், ஹிந்து மனப்பான்மையும்

இந்திய நாட்டில் வாழும் சுதேசிகளில் ஒரு வகுப்பார் மற்ருெரு வகுப்பினரைத் தாழ்த்தப்பட்டோர் என்றும் தீண்டத்தகாதவ ரென்றும் பிரித்து வைத்திருக்கின்றனர். இவர் கள் இப்படிச் செய்வது மார்க்கச் சட்டப்படி நியாயமா அல்லவா என்பதை சர்ச்சை செய்ய நாம் விரும்பவில்லை. சம்பந்தப்பட்ட வகுப் பினரே இதனைப்பற்றி முடிவு செய்துக்கொள்ள வேண்டும். ஆனுல், அவர்களிலொரு வகுப்பி னர் தங்களது கஷ்ட காலத்தை யுத் தேசித்து பிற மதத்தைத் தழுவியேனும் தங்களது தாழ்ந்த நிலைமையை உயர்த்திக் கொள்ள விரும்புகின்றனர். இவர்கள் இப்படி விருப்புவதைப்பற்றி முஸ்லிம்கள் அக்கரை செலுத்த வேண்டிய அவசியமுமில்லை. ஆனுல், அந்த ஜனங்கள் இஸ்லாத்தைத் தழுவ முன் வரும்போது முஸ்லிம்கள் அவர்களை அன்புடன் வரவேற்று, இஸ்லாத்தைச் சட்டப்படி தழுவச் செய்து, உபசரித்து வேண்டுவன செய்வதில் பிற சமயத்தார் எவரும் முஸ்லிம்களை வெறுப் புடன் நோக்க உரிமை பெற்றிலர். முஸ்லிம்கள் தங்களது மதத்தைத் தழுவ விரும்பும் ஜனங் களை மேற்கண்டவாறு உபசரித்து உடனே எவ் விதத் தாமதமுமின்றி இஸ்லாத்திற் சேர்த்துக் கொள்ள அவர்களது மத தர்மப்படி கடமைப் பட்டவர்களாக இருக்கிருர்கள். அவர்களது இக் கடமையை அவர்கள் நிறைவேற்றும்போது அவர்களை எந்த சக்தியும் தடுத்துவிட முடி யாது. இவ்விஷயத்தில் பிறர் அனுவஸ்யமாகச் செய்யும் எந்தக் காரியத்தையும் முஸ்லிம்கள் பொருட்படுத்தப் போவதில்லை.

கேரள நாட்டிலுள்ள ஒரு வகுப்பினர் தங்க ளது தாழ்ந்த நிலைமையைத் தவிர்த்துக்கொள் வான் வேண்டி இஸ்லாத்தைத் தழுவ விரும்பு கின்றனர். இஸ்லாத்தின் தத்துவங்களைப்பற் றித் தங்களுக்குச் சொல்லிக் காண்பிக்க பூர்வீக முஸ்லிம்களையும் புதிய முஸ்லிம்களையும் அழைக்கின்றனர். இவ்வழைப்பிற் கிணங்க முஸ்லிம்கள் அங்குச் சென்று இஸ்லாம் மதத் தினைப்பற்றி அவர்களுக்குச் சொல்லிக் காண் பிக் கின்றனர். இப்படிச் சொல்லிக் காண்பிக்கச் சென்றவர்களில் ஷெய்கு அப்துல்லா காந்தியும்

ஒருவர். இவர் இந்திய ராஜிய தலைவர் ஒருவரது புதல்வராகவும், புதிதாக இஸ்லாத்தைத் தழுவியவராகவும் இருப்பதால் அவரைத் தாழ்த்தப்பட்ட சகோதரர்கள் அழைத்து இஸ்லாம் மதத்தைப்பற்றிக் கூறுமாறு கேட்டுக்கொள்கின்றனர். அப்துல்லா காந்தியும் தம்மை வேண்டிக் கொள்பவருக்குத் தம்மாலான உதவியைப் புரிய வேண்டும் என்ற நோக்கத்தால் இஸ்லாம் மதத்தைப்பற்றித் தமக்குத் தெரிந்ததைக் கூறுகிறார். அநேகமாக அப்துல்லா காந்தி செய்த பிரசங்கத்திற்காக எவரும் இஸ்லாத்தைத் தழுவ முன்வராத நிலைமையில் இஸ்லாத்தைத் தழுவ முன்வந்தவர்களுக்குத்தான் அவர் இஸ்லாத்தைப்பற்றிக் கூறுகிறார். இந்நிலைமையில் இவர்பால் சில ஹிந்துக்களுக்கு வருத்தமும் பகையுமிருப்பதாகத் தெரிகிறது. இப்படி விரோதமாக எண்ணுகிற நண்பர்கள் தங்களது ஹிந்து மதத்திலுள்ள அத்தாழ்த்தப்பட்ட சகோதரர்களின் குறைபாடுகளை விசாரித்து, அவர்களது மனக்குறையை மாற்ற முற்படுவது சாலச் சிறந்ததாகும். இந்நாளில் இஸ்லாத்தைத் தழுவும் தாழ்ந்த வகுப்பினரிற் பலர் தங்களுக்குப் பாரமார்த்திகத் துறையில் முக்தி கிடைக்க வேண்டும் என்றோ, ஆத்மார்த்த முன்னேற்றம் வேண்டுமென்றோ விரும்புபவர்களல்லர். ஆனால் இவ்வுலகிலேயே லௌகிக முன்னேற்றத்தைத் தான் பெரிதாகப் பாவிக்கின்றனரெனத் தெரிகிறது. ஆகவே, அக்குறையை நீக்க அவர்கள் முயலுவதுதான் நேர்மையும் பெருந்தன்மையுமாகும். இதனை விட்டுவிட்டு அப்துல்லா காந்தியின்பால் குரோத மனப்பான்மை காட்டுவது நேர்மையும் நீதியுமாகாது. அப்துல்லா காந்தி இஸ்லாத்தைத் தழுவிய ஆரம்பக்காலத்தில் சிலர் அவரைப் பலவாறு தூஷித்தெழுதினர். இப்பொழுது பேச்சளவில்மட்டும் நில்லாமல் கிரியாம்சையிலும் இறங்கிவிட்டனர். சென்னைக்கு விஜயம்செய்த அப்துல்லா காந்தி குஜராத்திகளால் அழைத்துச்செல்லப்பட்டதும், அப்பால் குடிவெறியால் பிதற்றித் திரிந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு ஒரு ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டதும் எவ்வளவு மோசடி என்பது நேயர்களறிந்த விஷயம். இவ்விவகாரத்தைப்பற்றியோ கோர்ட்டுத் தீர்ப்பைப்பற்றியோ யாம் குறைகூறவோ, அவமதிக்கவோ விரும்பவில்லை. அது எப்படியானாலும் நமக்கு அக்கரையில்லை. ஆனால், அப்துல்லா காந்தி அளித்த ஸ்டேட்மெண்டைப் பார்க்கும்போது அவரை இரு குஜராத்திகள் சினிமா பார்ப்பதற்காக அழைத்துச் சென்றதாகவும், ஒரு இடத்தில் தித்திப்புப் பதார்த்தம் கொடுத்ததாகவும், அதற்கப்புறம் அவருக்கு புத்தி சுவாதீனமில்லை என்றும் தெரியவருகிறது. எனவே, தித்திப்புப் பதார்த்தத்தில் புத்தியை மாற்றக் கூடிய லாகிரி வஸ்து சேர்க்கப்பட்டிருந்ததோ என்பதாகச் சந்தேகப்பட வேண்டியதாக இருக்கிறது. சில அறியாத ஜனங்கள் தங்களுக்குள்ள அறிவற்றதன்மையால் செய்யும் பேடித்தனமான இத்தகைய காரியங்கள்தான் பிற்காலத்தில் பெரிதாக வளர்ந்து ஹிந்து முஸ்லிம் மாச்சர்யம் என்ற வகுப்புப் பிணக்கை யுண்டாக்கி விடக் கூடியதாக இருக்கிறது. பொதுஜன நன்மையை உத்தேசித்து அப்துல்லா காந்தியார் அந்த குஜராத்தி நண்பர்களை இன்னார் என்று பத்திரிகைகளில் சொல்லாமல்விட்டது நல்லதேயாகும். இது எவ்வாறாயினும் சரி, அப்துல்லா காந்தி தமது சுயேச்சையாகவே குடிக்கச் சென்றார் என்று வைத்துக்கொள்வோமாயினும் இதனால் யாருக்கு என்ன சேதம். முஸ்லிம்கள் அவரை இதற்காகத் தங்களது மதத்திலிருந்து பிரஷ்டம் செய்துவிடப் போவதில்லை. தன்னை முஸ்லிம் என்று சொல்லிக்கொள்கிற ஒருவரை முஸ்லிம் அல்லர் என்று கூறி மதத்தைவிட்டுப் பிரஷ்டம் செய்ய முஸ்லிம்கள் துணியமாட்டார்கள். அப்துல்லா காந்தி குடிகாரர் என மதித்து தாழ்த்தப்பட்ட சகோதரர்கள் அவரை அழைக்கமாட்டார்களாதலின், அவர்களை இஸ்லாத்திற் சேராமற் றடுத்துவிடலாம் என நினைப்பதும் தவறு. அப்துல்லா காந்தியை அவர்கள் அழைக்காவிடினும் அவர்கள் இஸ்லாத்தைத் தழுவுவதை தடுத்துவிடப் போவதில்லை. அறிவிலிகளான துரோகிகள் செய்யும் இவ்வாறான அடாச் செயல் ஹிந்து மதத்தின்பால் தாழ்த்தப்பட்டோருக்கு இருக்கும் வெறுப்பை வளர்க்குமேயன்றி இதனால் ஹிந்து மதத்திற்கு உயர்வு வந்துவிடப் போவதில்லை. இவ்விதமான செய்கை அதாவது இஸ்லாத்தைத் தழுவுவோருக்கு அவர்களது பூர்வீக மதத்தினரால் இடைஞ்சலும் இன்னலும் செய்யப்படுவதும் இப்பொழுது புதிதாக ஏற்பட்டதன்று. இஸ்லாம் மதம் தோன்றிய அந்தக்காலத்திலிருந்து இன்றுவரை நடைபெற்று வரும் காரியமாகவே இருப்பதால் இந்த அனுபவம் முஸ்லிம்களுக்குப் பழக்கத்திலிருந்து வருகிறது. ஆதலால், முஸ்லிம்கள் இதற்காக

ஆயாசப்படவோ, ஹிந்துக்கள்பால் கோபமடையவோ, அப்துல்லா காந்தியைத் துரத்திவிடவோ மாட்டார்கள். ஆனால், இதற்கு நேர்மாறாக இஸ்லாத்தின் சத்தியத்தன்மை இவ்வுலகில் இன்னும் அதிகமாகப் பிரகாசித்து நீதியும் நேர்மையுமுள்ள பல கனவான்களை இஸ்லாத்திற் சேரும்படிச் செய்துவிடும் என்பதை உணர்வார்களாக.

முஸ்லிம் சோதரீர்! இச்சூழ்ச்சி எவ்விதமிருந்தாலும் சரி, அதனைப் பொருட்படுத்தாமல் இஷாஅத்தே இஸ்லாம் சம்மந்தமாகவுள்ள உங்கள் கடமையை நிறைவேற்றவும் இஸ்லாத்தைத் தழுவிய உங்கள் சகோதரர்களை ஆதரிக்கவும் தவறக்கூடாது என்பதை அறிவித்துக் கொள்கிறோம்.

முஸ்லிம்களின் முதற் கிப்லாவும், இந்திய முஸ்லிம்களது கடமையும்

முஸ்லிம்களது முதற் கிப்லாவாகிய 'மஸ்ஜிதுல் அக்ஸா'வும் அதனைச் சார்ந்த பிராந்தியங்களும் இரண்டாவது கலீபாவாகிய ஹஜ்றத் உமர் பாறூக் (றலி) அவர்களது காலத்தில் முஸ்லிம்களது ஆதிக்கத்தில் வந்தன. இந்தப் புண்ணிய பூமி அன்று எம்முறையில் ஹஜறத் உமர் பாறூக் (றலி) அவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டதென்பது உலக சரித்திரத்திலேயே விசித்திரமான ஒரு சம்பவமாகும். அன்று முதல் இன்று வரை இப்புண்ணிய பூமியை முஸ்லிம்களிட மிருந்து மீட்டுக் கொள்ள யூத கிறிஸ்துவர்கள் எங்ஙனம் முயன்றனர் என்பதை இச்சிறு வியாசத்தில் கூறுவதெனின், ஊசித் துவாரத்தில் ஒட்டகையைப் பிரவேசிக்கச் செய்யும் முயற்சிக் கொப்பாகவே இருக்கும். ஐரோப்பிய அரசாங்கங்களெல்லாம் ஒரு காலத்தில் ஒன்று திரண்டு யுத்தம் செய்தும் அவர்கள் வெகுகாலம் வரை இப்புண்ணிய பூமியில் நிலைத்த அதிகாரம் செலுத்த முடியவில்லை. இப்புண்ணிய பூமி இறைவன் சங்கல்பமாக முஸ்லிம்கள் வசம் ஒப்புவிக்கப்பட் டிருப்பதால் இதில் நீடித்த ஆட்சி செய்ய பிறமதத்தாரால் முடியாது என்பது உறுதி. ஆயினும், அன்று முஸ்லிம்கள் செய்த துரோகத்தாலும், இஸ்லாமியக் கடமைகளை அலக்ஷியம் செய்த தோஷத்தாலும் மகா யுத்தத்தில் துருக்கியர் ஷாம், பலஸ்தீன் முதலிய நாடுகளை இழக்க வேண்டியதாயிற்று. யுத்தம் முடிந்த பின் துரோகம் செய்த அறபியர்கள் வஞ்சிக்கப்பட்டனர். பாலஸ்தீனம், ஷாம், இராக் முதலிய இஸ்லாமிய நாடுகள் சர்வதேச சங்கத்தாரால் பிரஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் முதலியவர்களிடம் மேல்பார்வைக்கு விடப்பட்டது. அதாவது, இத்தேசங்களி லுள்ளவர்களைச் சுயாட்சிக்குரியவர்களாகத் திருப்பி அவர்களிடம் அத்தேசங்களை ஒப்புவிக்க வேண்டியது அவர்களது பொறுப்பாக இருந்தது. ஆயினும் இராக் தேசம் பிரிட்டிஷாரின் மேற்பார்வையிலிருந்து விலகி பூரண சுயேச்சையுள்ள ஒரு நாடாக மாறிவிட்டது. ஷாம் தேசமும் எத்தனையோ கஷ்ட நஷ்டங்களுக்குட் படுத்தப்பட்டு இப்பொழுது ஏற்பட்ட ஒரு உடன்படிக்கையின் பயனாக இன்னும் சில காலத்திற்குள் பூரண சுயேச்சையுள்ளதாகப் போகிறது. ஆனால், பாலஸ்தீனத்திற்கு மட்டிலும் அத்தகைய சுபிட்சம் ஏற்படுவதாகக் காணோம். ஏனெனில், மகா யுத்த காலத்தில் பிரிட்டிஷாருக்கு யூதர் செய்த பேருபகாரத்திற்காக, நன்றி மறவாத பிரிட்டிஷ் அரசாங்கம் பாலஸ்தீனத்தை யூதர் குடியேற்ற நாடாகச் செய்யத் திட்டம் போட்டு அதனை அமலில் கொண்டு வருவதற்குப் படிப்படியாக வேலை செய்கிறது. பிரிட்டிஷார் நன்றி மறவாமல் அவர்களுக்கு உதவி செய்ய முன் வந்திருப்பது போற்றத் தக்கதுதான். இப்படி ஒவ்வொரு ஜாதியினரிடமும் அவர்கள் தங்களது நன்றி மறவாமையைக் காண்பித்துக் கொண்டால் இந்த வியாச மெழுதவேண்டிய அவசியமே இராது. துருக்கியருடன் சேராமல் தங்களுடன் சேர்ந்து கொள்ளும் பக்ஷத்தில் சுயேச்சை யளிப்பதாகக்கூறி அறபியருக்கும் துருக்கியருக்கு மிடையில் பிளவை யுண்டுபண்ணித் தங்கள் காரியத்தைச் சாதித்தனர். இறைவன் நீதிவானுகையால் அறபியர் செய்த துரோகத்திற்குத் தக்க தண்டனையைக் கைமேற் பல

ளுக அடைந்தனர். இத்தண்டனையில் தங்கள் குற்றத்தை யுணர்ந்து தக்க பிராயச் சித்தம் செய்து கொண்டவர்கள் சுயேச்சையை அடைந்தனர். அப்படி யில்லாதவர்கள் அடிமைப்பட்டனர். இப்படி அடிமையாக இருப்பவர்களில் பாலஸ்தீன்வாசிகளும் ஒருவர், பக்கத்திலுள்ள ஷாம் தேச வாசிகள் இவ்வுண்மையை இதற்கு முன்னரே யுணர்ந்து அநேகம் உயிர்களையும் தியாகம் செய்து சொல்லொணுத் துன்பங்களை யனுபவித்த பின்னர் இப்பொழுது சுயேச்சையின் வாசலைநெருங்கிவிட்டனர். ஆனல் இப்பொழுது தான் பாலஸ்தீனத்திலுள்ள முஸ்லிம்கள் தங்களது நிலைமையை உணர வாரம்பித்து உயிருள்ள முயற்சியைச் செய்யத் துணிந்திருக்கின்றனர். இத்தேசத்தார்களது இறந்த கால நடத்தையை உத்தேசித்து அவர்களுக்குப் பிறர் உதவிபுரியாமல் தண்டனையை அனுபவிக்க விட்டுவிடலாம் என்ருலும், அத்தேசத்திற்குப் பூரண சுயேச்சை இல்லாதிருப்பது உலக முஸ்லிம்களுக்கு ஆபத்தைபுண்டுபண்ணுவதாக இருக்கிறது. எவ்வாறெனில், இரண்டொரு வருஷங்களுக்குமுன் இராக் தேசத்தில் ஒரு பெரும் புரட்சி ஏற்பட்டு புரட்சிக்காரர்கள் ஆயுதந்தாங்கி இராணுவ முறையில் அரசாங்கச் சைனியங்களை எதிர்த்தனர் என்பது பத்திரிகை வாசிப்போருக்குத் தெரிந்திருக்கும். இக்கலகத்தை அரசாங்கத்தார் அடக்கி, இது சம்பந்தமாகச் செய்த விசாரணையிலிருந்து, கலகக்காரர்களுக்கு ஆயுத உதவி செய்தவர்கள் யூதர்கள் என்பதாகவும், இக்கலகத்தைத் தூண்டிவிட்டதற்கு முக்கிய காரணஸ்தர்கள் யூதர்கள்தாம் என்பதாகவும் வெளியாகுவதாகச் சொல்லப்படுகிறது. எனவே, இவ்விதமான கோர மனப்பான்மையும், ஆராத பகையுமுள்ள யூதர்கள் முஸ்லிம்களைச் சிதறடித்து ஒடுக்குவதற்காகத் தங்களது பணப் பெருக்கால் எத்துணை காரியங்கள் தாம் செய்யக்கூடாது? இராக்கில் நடந்த இந்தப் புரட்சி ஹிஜாஸ், யமன், பிரான்ஸ் ஜார்டோனியா, துருக்கி, ஷாம், எகிப்து முதலிய இஸ்லாமிய நாடுகளிலும் ஏற்படாது என்று நம்புவதற்கு இடமில்லை. இவ்வரசாங்கங்களின் மத்தியிலுள்ள பாலஸ்தீனத்தில் பணக்காரர்களாகிய யூதக் கோஷ்டியினர் இருக்கும்வரை இஸ்லாமிய நாடுகள் அமைதியாகவும் சமாதானமாகவும் வாழ முடியாது என்ற அச்சம் ஒரு பக்கல் கிடக்க, இஸ்லாமிய அரசாங்கங்களும் ஒன்றுக்கொன்று சண்டை போட்டுக்கொள்ளத்தக்க நிலைமையை இவர்கள் உண்டு பண்ணிவிடுவார்களாயின் அது முஸ்லிம் சமூகத்திற்கே பேராபத்தாக வந்து முடியும். இஸ்லாமிய உலகினுக்கு வரக்கூடிய இப்பேராபத்தைத் தடுப்பதற்காகவேனும் முஸ்லிம் உலகம் பாலஸ்தீனத்தை யூதர் குடியேற்றத்தைவிட்டுச் சுத்தப்படுத்த வேண்டியதவசியமாக இருக்கிறது. இவ்வவசியத்தை யுத்தேசித்தே பாலஸ்தீன அறபியர் செய்துவரும் இக்கிளர்ச்சியை இஸ்லாமிய உலகம் முழுவதும் மிக ஊக்கமாகக் கவனித்து வருகிறது. முஸ்லிம்கள்பால் அதிக சிரத்தையும் பற்றும், வாஞ்சையுமுள்ள பிரிட்டிஷ் அரசாங்கம் அந்நாட்டறபியருக்கு எங்ஙனம் துணைபுரிகிறது என்பதை முஸ்லிம் உலகம் ஊர்ந்து கவனிக்கிறது. அங்கு உயிர்ச்சேதம் பொருட்சேதங்களை யடைந்து துன்பத்திற்காளாகி இருக்கும் அறபியர்களுக்கு இஸ்லாமிய உலகம் முழுவதும் பொருளுதவிபுரிய முன்வந்திருக்கிறது. பக்கத்திலுள்ள ஷாம் தேசம் மிகவும் சிறியதொரு தேசமாகும். இச்சென்னை மாகாணத்திலுள்ள 2 அல்லது மூன்று ஜில்லாவின் விஸ்தீரணமும் ஒரு ஜில்லாவின் ஜனத்தொகையும்தான் அத்தேசத்திற்கிருக்கிறது. அங்குள்ள முஸ்லிம்கள் ஏறக்குறைய 15 சபைகளை இதற்கென இயற்றி இருக்கின்றனர். இவைகளில் ஒரு சபை மட்டிலும் 6 ஆயிரம் ரூபாய்களை நிதியாகத் திரட்டி இருக்கிறது. இவ்வண்ணம் ஆங்காங்குள்ள எல்லா தேசங்களும், அங்குள்ள சபைகளும் இதில் அதிகம் சிரத்தை எடுத்துக்கொண்டிருக்கின்றன. தவிரவும், பாலஸ்தீனத்திலுள்ள பிரதம முப்தியான ஸெய்யிது அமீனுல்ஹுஸைனீ பாலஸ்தீன அறபியருக்கு கஷ்ட நிவாரண உதவியளிக்கும்படி உலகத்தை வேண்டிக்கொண்டிருப்பதுடன் இந்தியாவின் உதவியைப் பெரிதும் நாடி இருக்கிருர். இதற்குக் காரணம் இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்திலுள்ள முஸ்லிம் பிரஜைகளில் முக்கால் பாகத்தினராக இருப்பதால், இவர்களது ஏகோபித்த வேண்டுகோளை பிரிட்டிஷ் அரசாங்கம் அலட்சியம் செய்வதற்கில்லை என்றதனுலேயாகும். அவர் இந்திய முஸ்லிம்களிடம் மூன்று வேண்டுகோள்களை விடுத்துள்ளார்.

பாலஸ்தீனத்தில் உயிர் துறந்தவர்கள், காயம் பட்டவர்கள், அனுதைக் குழந்தைகள், விதவைகளானவர்கள் ஆகியவர்களுக்குப் பொருளுதவி செய்யவேண்டும் என்பது ஒன்ருகும். பாலஸ்

தீன முஸ்லிம்களுக்கு அனுதாபம்காட்டி ஆங்காங்கு கூட்டங்கூடி தங்களது நோக்கத்தை அரசாங்கத்திற்கு அறிவித்துக்கொள்ள வேண்டும்; இக்கண்டனக் கூட்டங்களைக் கண்டேனும் பிரிட்டிஷ் அரசாங்கம் அடக்குமுறையைத் தளர்த்தக்கூடும் என்பது இரண்டாவது கோரிக்கையாகும். இந்திய முஸ்லிம்கள் ஒரு தூதுவக் கூட்டத்தை அனுப்பி அங்குள்ள நிலைமைகளை விசாரணைபுரிய வேண்டும் என்பது மூன்றாவது கோரிக்கையாகும். இக்கோரிக்கைகளுக்கேற்ப இந்தியாவின் பல இடங்களிலும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அடக்குமுறையைக் கண்டித்துக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இந்தியா சட்டசபையிலும்கூட இதனைப்பற்றிக் கேள்விகளும் கேட்கப்பட்டிருக்கின்றன. இன்னமும் பல கூட்டங்களைக் கூட்டி பாலஸ்தீன அறபியர்பால் தங்களுக்குள்ள அபிமானத்தையும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அடக்குமுறையையும் குறித்துத் தீர்மானங்கள் செய்து அரசாங்கத்திற் கனுப்பிக்கொண்டே இருப்பது அவசியமாகும். அத்துடன் நம்மாலியன்றவரை அவர்களுக்கு உதவியாக நிதி திரட்டி அனுப்புவது மிகவும் முக்கியமாகும். இதற்காக ஆயிரக்கணக்கான நிதி திரட்ட வேண்டுமென்ற அவசியமில்லை. 'பல துளி பெரு வெள்ளம்' என்றபடி அவரவராலியன்ற அளவு மனமுவந்து உதவி அளிக்க முன்வரின் அஃதொரு பெருந்தொகையாகி விடுமென்பதில் சந்தேகமில்லை. பாலஸ்தீன பிரதம முப்தி அவர்கள் கேட்டுக்கொண்டபடி பைத்துல் முகத்தஸிலுள்ள அரபி பாங்கியின் மூலம் மத்திய சங்கத்தின் தலைவரான ஸெய்யித் அமீனுல் ஹுஸைனி அவர்களுக்கு அனுப்பிவைக்கலாம். இவ்விதமாக நாம் உதவிசெய்யக் கடமைப்பட்டுள்ளோம். இதனைக் கூட நாம்செய்யத்தவறி பாலஸ்தீன் அறபியர்கள் தங்கள் முயற்சியில் தோல்வியடைந்து, யூதர்களது குடியேற்ற நாடாக அந்தத் தேசம் ஏற்பட்டுவிடுமாயின் அதனால் விளையக்கூடிய ஆபத்துகளின் தீமையினை இந்திய முஸ்லிம்களாகிய நாமும் அனுபவிக்க வேண்டியதாகத்தான் ஏற்படும். அல்லாமலும், இறைவனால், நம்மிடம் ஒப்புவிக்கப்பட்ட நமது முதற் கிப்லாவை வேறொரு மதத்தினர் வசம் விட்டுவிட்டு வாளா இருந்துவிடுவதானது இறைவனது கோபத்திற்கு நம்மை ஆளாக்கிவிடும். ஆதலின், முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் நமது முதற் கிப்லாவில் உள்ள உரிமையையும் பாத்தியதையையும் காப்பாற்றிக்கொள்வதற்கும், இஸ்லாமிய உலகின் சுதந்தரத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்கும் வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்வதவசியமாகும்.

நம்மவரின் பெரும்பாவம்

எல்லாம் வல்ல இறைவன் ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு காரணம் அல்லது பல காரணங்களை உண்டாக்கி இருக்கிறான். காரணமில்லாமல் எக்காரியமும் கைகூடுவதில்லை, தவறிப் போவதுமில்லை. எனவே, ஒற்றுமைக்கும் வேற்றுமைக்கும் கூடப் பல காரணங்களிருக்கின்றன. ஒரு காரணத்தின் மூலமாக இன்னொரு காரண முண்டாகின்றது. உதாரணமாக, ஒற்றுமை ஏற்படுவதற்கு அன்பும் வாஞ்சையும் இருக்கவேண்டியது அவசியமாகும். அன்பும் வாஞ்சையு மில்லாமல் உண்டாகின்ற ஒற்றுமை நிலைத்திருப்பதில்லை. இன்னமும் மனிதன் சகிப்புத் தன்மை, அபிமானம் ஆகியவைகளின்பால் பிரேமை கொள்ளாமலும், பிறருக்காகத் தனக்குக் கஷ்டம் வருவதைச் சகித்துக் கொள்ளாமலும் இருக்கும்வரை அன்பும் வாஞ்சையும் நேசமும் உண்டாவதில்லை. நாம் நமது நன்மைக்காகப் பிறருக்கு நஷ்டம் உண்டாக்குவதில் முனைந்திருப்பதுதான் சச்சரவுகளுக்கும், பிளவுகளுக்கும், வேற்றுமைகளுக்கும் ஆணிவேராகஇருக்கிறது. மற்றவர்களின் நிமித்தமாக நமக்கு ஒரு கஷ்டம் சம்பவிக்குமாயின் அதனைச் சகித்துக்கொள்ள முடியாமலிருப்பதுதான் இதில் மிகவும் கீழ்த்தரமான சுயநலம். ஒரு சமூகத்திற்கு ஏற்படும் பெரும் குறை என்னவென்றால், அச்சமூகத்தைச் சேர்ந்த ஒவ்வொரு

அங்கத்தினரும் நீதியை யுணராமலும், நன்றி மறந்திருப்பதுமேயாகும். எவர் பிறருடைய ஊழியத்தைப் பாராட்டாமலும், தான் செய்த அல்லது செய்யாதிருக்கிற ஊழியங்களுக்காக மற்றவர் தன்னைப் போற்ற வேண்டுமென்று விரும்புகிறாரோ அவர்தான் எல்லாரிலும் அதிகமான நன்றி மறந்தவரும் நீதியற்றவருமாவார். இப்படிப்பட்ட மனிதர் சகிப்புத் தன்மையும் அபிமானமு முள்ளவராக இருக்கவே முடியாது. ஒரு வகுப்பில் இப்படிப்பட்ட ஆசாமிகள் அதிகமாக இருப்பார்களாயின் அந்த சமூகத்தில் அன்பும் வாஞ்சையு மிருப்பது குதிரைக் கொம்பேயாகும். இருதயத்தில் அன்பில்லையாயின் ஒற்றுமை யுண்டாகும் என்ற காரியமும் தெரிந்த விஷயமாகும். இதனால் "அடியார்களுக்கு நன்றி செலுத்தாதவர் ஆண்டைக்கும் நன்றி செலுத்தமாட்டார்" என்பதாகக் கூறப்பட்டது.

மேலும், ஒவ்வொரு வகுப்பினரும் ஒற்றுமை, அன்பு ஆகியவைகளையே விரும்புகின்றனர். கலகம், மாச்சரியம், பிளவு ஆகியவைகளைத் தீமை என்பதாகவே கருதுகின்றனர். ஆனால், ஒற்றுமையைக் குலைத்து, வேற்றுமையைக் கிளப்பக்கூடிய மேற்கண்ட காரணங்களை அச்சமூகம் எவ்வளவு தூரத்திற்குப் புறக்கணித்திருக்கிறது என்பதை கவனித்துப் பார்ப்பதுதான் இதிலுள்ள சத்தான விஷயம். அவ்வாறில்லையாயின், ஏன்? அவ்வாறு புறக்கணிக்கிறது என்பதைக் கவனிக்க வேண்டும்.

இஸ்லாமிய ஒற்றுமை என்பது பயிற்சி, இருதயங்களின் சீர்திருத்தம் ஆகியவைகளினால் ஏற்படவேண்டும். நமது இருதயம் உண்மை, சத்தியம் ஆகியவைகளினால் நிரம்பி இருக்காதவரை நமது காரியம் இறைவனால் ஒழுங்கு செய்யப்படமாட்டாது. நாம் ஒருபோதும் நமக்குள் ஒற்றுமையாகிவிடவுமுடியாது. ஒற்றுமையேற்படவேண்டுமாயின் தியாகமும் தன்னலமறுப்பு மிருக்கவேண்டியது இன்றியமையாத விஷயம். சுயநலம், கீர்த்திப் பிரபலத்தை விரும்புபவர், தமது சொந்த லாபத்திற்காக மற்றவரின் குரல்வளையை நெறிக்கின்றவர், தன்னுடைய சொற்பகாரியங்களுக்காக பிறரது அரும்பெருங் காரியங்களின்மீது திரைபோடுபவர்கள் ஒருபோதும் ஒற்றுமையின் பலனை ருசிக்கமுடியாது.

தலைவர்களின் பெருந்தவறு

இன்று நாம் இதே வியாதியால் பீடிக்கப்பட்டிருக்கிறோம். நமது தலைவர்கள், வழிகாட்டிகள், லீடர்கள் எனப்படுவோரில் சிலர் நீங்கலாகப் பெரும்பாலர் தங்கள் தங்கள் ராகங்களைப் பாடிக்கொண்டே இருக்கின்றனர். தலைமைத்தனம் என்ற வியாதி அவர்களது நரம்புகளிலும் நாடிகளிலும் கலந்துவிட்டது. இவர்களில் ஒவ்வொருவரும் தம்முடைய பெயர்தான் முன்னுக்கு வரவேண்டும், உலகம் முழுவதும் தம்முடைய தலைமைத்தனத்தை அங்கீகரித்துவிடவேண்டும் என்று விரும்புகின்றனர். மத்தியகாலத்தில் அராஜகம் தோன்றி கண்ட கண்ட இடங்களிலெல்லாம் அரசுரிமைக்குப் போட்டிபோட்டு முஸ்லிம்களது கட்டுக்கோப்பைச் சிதறவடித்திருந்ததுபோல ராஜ்ய மில்லாத இவ்வரசர்களின் தற்பெருமை, தலைமைத்தனம் ஆகியவைகளுக்காகப் போட்டுக்கொள்ளும் சண்டையானது முஸ்லிம்களை அழித்துத் தாழ்த்தி வைத்திருக்கிறது. முஸ்லிம்கள் ஒன்றுபட்டுவிட வேண்டுமாயின் நமது சமூகத்தை நாம் சுத்தப்படுத்தவேண்டிய தவசியமாகும். தான் செய்யாத ஒருகாரியத்திற்காகத் தம்மைப் பிறர் ஸ்தோத்திரம் செய்யவேண்டுமென எதிர்பார்க்கிற இந்த வியாதியை நமது இருதயங்களை விட்டு நாம் சுத்தப்படுத்திக் கொள்ளவேண்டும்.

நன்றியுள்ளவர்களாகுங்கள்

தங்களுடைய நோக்கப்படி நடந்துகொண்டு, தங்களது காரியங்களைப்பற்றிப் பெருமைபேசிக்கொண்டு, தாங்கள் செய்யாத காரியங்களுக்காகத் தங்களைப் பிறர்புகழ வேண்டுமென விரும்புவோர் வேதனையைவிட்டுத் தப்பியவர்களென்று நீங்கள் கருதாதீர்கள். அவர்களுக்கு மகத்தான வேதனை இருக்கிறது என்பதாக திருகுர்ஆனில் சொல்லப்பட்டிருக்கிறது. சமூகத்திலுள்ள ஒவ்வொரு அங்கத்தினரின் உழைப்பு, பிரயாசை, மூளைவேலை, யுக்தி முதலியவைகளை அம்பலத்திற்குக் கொண்டுவந்து அவர்களைப் பாராட்டுவதுதான் அன்பு என்பதற்குரிய முதற்படியாகும். மேலும் இதரரின் ஊழியங்களைப் பாராட்டி, தன்னுடைய அரும்பெருங் காரியங்களைப் பிரஸ்தாபிப்பதற்காகத் தமது பேனாவையோ நாவையோ அசைக்கவும் விரும்பாதவர்கள்பால் ஜனங்களது உள்ளத்தில்

அபிமானமும் கண்ணியமும் உண்டாகிவிடுகிறது. அவரைப்பற்றி ஜனங்கள் பாராட்டும்படியாக எல்லாம்வல்ல இறைவன் செய்துவிடுகின்றான்.

நாசகரமான பிரக்கியாதியும் பிரபல்யமும்

எவர் பிரபல்யமாக விரும்புகிறாரோ அவரை இறைவன் தாழ்த்திவிடுகின்றான்; ஒருவர் பிறரை மெய்ப்பிப்பதற்காகவும், தம்மைப் பிறர் ஸ்தோத்தரிப்பதற்காகவும் ஒரு காரியத்தைச் செய்வாராயின் அல்லாஹு தஆலாவும் அவருடன் அவ்வண்ணமாகவே நடந்துகொள்கிறான். அதாவது அவருக்கு அவரது காரியங்களுக்குரிய புண்ய பலனை அளிப்பதில்லை என்பதாக ஹதீதில் வந்திருக்கிறது.

எவர் தனது கிரியைகளில் அல்லாஹு தஆலாவைத் தவிர்த்து மற்றவரையும் கூட்டாக ஆக்கிக்கொண்டாரோ அவர் அக்காரியத்திற்குரிய புண்ய பயனை அக்கூட்டாளியினிடம் தான் வாங்கிக்கொள்ள வேண்டும் என்பதாக இறுதித் தீர்ப்பின் நாளன்று அறிக்கை செய்யப்படும், என்பதாக மற்றொரு ஹதீதில் வந்திருக்கிறது. அல்லாஹு தஆலா இவ்விதமான காரியங்களின்பால் தேவையுள்ளவனல்லன். அப்படிப்பட்ட காரியங்களை அவன் ஒப்புக்கொள்ளவுமாட்டான். எந்தக் காரியத்தில் பிறரை மெய்ப்பிக்கச் செய்வதனுடைய வாடை இருக்கிறதோ அந்தக் காரியத்திற்குப் பயன் கிடைப்பதில்லை. ஒருவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து "நான் ஒரு காரியத்தை அல்லது ஜிஹாதை அல்லாஹு தஆலாவுக்காகவே செய்ய விரும்புகிறேன்; ஆனால், ஜனங்களிடம் எனது அந்தஸ்து வெளியாகிவிட வேண்டுமென்றும் விரும்புகிறேன்; இப்படிப்பட்ட காரியங்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவை" என்பதாக வினவினர். அதற்கு, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உடனே பதில் கூறாமல் மௌனமாக இருந்தார்கள். உடனே இறைவன் "எவர் அல்லாஹு தஆலாவைச் சந்திக்கவேண்டியதிருக்கிறது என்ற விஷயத்தை உறுதியாக விசுவாசித்திருக்கிறாரோ அவர் நற்கிரியைகளைச் செய்யவேண்டும். ஆனால், அல்லாஹ்வின் வணக்கத்தில் வேறு யாரையும் இணையாக ஏற்படுத்திக் கொள்ளல் கூடாது" என்ற வசனம் அருளப்பட்டது. ஜனங்கள் தம்மைப் போற்றவேண்டுமென்பதற்காகவோ அல்லது பிறரை மெய்ப்பிக்கவேண்டும் என்பதற்காகவோ எதையும் செய்யலாகாது என்பது தான் மேலே கண்ட ஹதீதிலிருந்தும் வசனத்திலிருந்தும் தெரியவருகிறது.

பயங்கரமான ஹதீது

நியாயத் தீர்ப்பின் நாளன்று, நியாயத் தீர்ப்பதற்காக, மார்க்க யுத்தத்தில் ஷஹீதான ஒரு மனிதரை எல்லோருக்கும் முதலில் கொண்டுவரப்படும். அவருக்கு இறைவன் உலகில் அளித்திருந்த பாக்கியங்களெல்லாம் நினைவிற்குக் கொண்டுவரப்படும். அவர் அப்பாக்கியங்களனைத்தையும் அங்கீகரிப்பார். பிறகு, இந்தப் பாக்கியங்களுக்கு பதிலாக நீர் என்ன வேலை செய்தீர்? இவைகளுக்காக நீர் நன்றி செலுத்தினீரோ? என்று வினவப்படும். அதற்கவர் "யான் நினது சன்மார்க்கத்தின் பொருட்டு ஜிஹாதுசெய்து, எனது ஜீவியத்தை அற்பணம் செய்து ஷஹீதாகிவிட்டேன்" என்று பதில் கூறுவார். அப்பொழுது "நீர் பொய்புரைக்கின்றீர்; உமது வீரதத்துவத்தை ஸ்திரம் செய்வதற்காக அல்லது ஜனங்கள் உம்மை வீரர் என்று கூறுவதற்காக யுத்தம் செய்தீர். எனவே, உனது நோக்கம் சித்தியாகிவிட்டது; ஜனங்கள் உம்மை வீரர் என்றுகூறிவிட்டனர். என்பதாகப் பதில் சொல்லப்பட்டு அவரை நரகில்போடும்படி உத்தரவிடப்படும். அந்தக்ஷணத்திலேயே அவரை இழுத்துக் கொண்டுபோய் நரகில் வீழ்த்தப்படும். பிறகு, மற்றொரு மனிதர் அழைத்துவரப்படுவார். அவர் படித்து, பிறருக்குப் படிப்புச்சொல்லிக் கொடுத்தவராகவும், குர்ஆன் ஓதியவராகவுமிருப்பார். அவரிடமும் இவ்விதமாகவே கேட்கப்படும். அவருக்களிக்கப்பட்ட நற்பாக்கியங்களை ஞாபகமூட்டி இவைகளைக் கொண்டு நீர் என்னவேலை செய்தீர் என்பதாக வினவப்படும். அதற்கவர் "யான் கல்விகற்றேன், பிறருக்குக் கற்பித்தேன், உனக்காகவே யான் குர்ஆன் ஓதினேன்" என்றுரைப்பார். அப்பொழுது அவரை நோக்கி "நீர் பொய்புரைக்கின்றீர்; உமது நோக்கம் கீர்த்தியும் பிரபல்யமேயாம்; உம்மை ஜனங்கள் கற்றோர் என்றழைப்பதற்காகவே நீர் கல்விகற்றீர்; இன்னமும் ஜனங்கள் உம்மை "காரீ" என்றழைக்கட்டும் என்பதற்காகவே நீர் குர்ஆன் ஓதினீர்; அவ்விதமாகவே நடைபெற்றுவிட்டது. ஜனங்கள் உம்மை காரீ என்றும், கற்றோர் என்றும் அழைத்தனர், என்று பதில் கூறப்பட்டு, அவரது

முடிவும் மேற்சொன்னவாறே யாகிவிடும். அவரும் முகங் குப்புற இழுக்கப்பட்டு நரகிற்றள்ளப்படுவார். பிறகு, பணமும் செல்வமுமுள்ள மற்றொரு மனிதர் அழைத்துவரப்படுவார். அவருக்குக்களிக்கப்பட்டிருந்த பாக்கியங்களை அவரிடம் ஞாபகமூட்டப்படும். அவர் அவைகளை ஒப்புக்கொள்வார். பிறகு, உமது செல்வங்களையும், உமக்களிக்கப்பட்டிருந்த பாக்கியங்களையும் எவ்விதம் உபயோகித்தீர்? அவைகளை எவ்விதத்தில் செலவு செய்தீர்? என்று வினவப்படும். அதற்கவர் "நாயனே! உனக்குத்திருப்தியாக இருந்த எந்த நற்காரியத்திலும் எனது செல்வத்தைச் செலவு செய்யாமல் நான் விடவில்லை. அதாவது எனது செல்வங்களை உனது சன்மார்க்கத்திற்காகவே செலவு செய்தேன் என்று கூறுவார். அதற்கு உத்தரமாக "நீர் பொய்யுரைக்கின்றீர்; தர்மகர்த்தா என்று பிரபல்யமடைய வேண்டுமென நீர் விரும்பிக் கொண்டிருந்தீர்; உமது விருப்பத்திற்கேற்ப நீர் தர்மகர்த்தா என்று பெயர்வாங்கிவிட்டீர். என்று சொல்லப்பட்டு அவரையும் அவ்விதமாகவே நடத்தப்படும். அவரும் முகங் குப்புற இழுக்கப்பட்டு எரிநரகில் எறியப்படுவார்" என்று நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் கூறக் கேட்டேன் என்பதாக ஹஜ்ரத் அபூஹுறைரு (றலி.) அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

சோதரீர்! இந்த ஹதீதானது கீர்த்தியையும் பிரபலத்தையும் விரும்புவோருக்குச் சரியான சாட்டையாகும். இந்தப் பயங்கரயான ஹதீதைக் கேட்ட பின்னரேனும் நம்மவர் அனுவசியமான கீர்த்தியை அடையவிரும்பாமல், அல்லாஹு தஆலாவுக்கென அந்தரங்க சுத்தியோடு நற்காரியங்களைச் செய்யவும், செய்யும்படி சொல்லவும் செய்வீர்களாக.

வமா அலைனா இல்லல்பலாக்.

இஸ்லாமிய சமத்துவம்

காப்பக நூலகம் 600 008

இஸ்லாம் மத சம்மந்தமான விஷயங்களை நாம் சொற்பமாகத் தெரிந்திருப்பதால், இஸ்லாமிய சமத்துவம் என்பதுபற்றி எவ்வளவு விரிவாகவும் தெளிவாகவும் எழுதவேண்டியதவசியமோ அந்த அளவிற்கு வியாசமெழுத முடியாமைக்கு மிக மிக வருந்தவேண்டியதாகவிருக்கிறது.

இலக்கியம் சம்மந்தப்பட்டமட்டில் "இஸ்லாம்" என்ற பதத்திற்கு "தலைசாய்த்தல், கீழ்ப்படிதல்" என்பது பதப்பொருள். ஆனால், சிருஷ்டிக்கப்பட்ட செயற்கை அல்லது இயற்கைப் பொருளுக்கு முன் தலை சாய்க்கும்படி இஸ்லாம் போதிக்கவில்லை. இச்சராசரங்களனைத்தையும் சிருஷ்டித்தவனது மாற்றமுடியாதனவும், திருத்தமுடியாதனவுமான சட்டங்களுக்கு வழிப்பட வேண்டும்; அவைகளுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்பதையே போதிக்கின்றது. இந்தச் சட்டங்கள் உலக முழுவதும் கடைப்பிடிக்கத் தகுந்தனவா யிருக்கின்றன. உண்மையாகவே இச்சட்டங்கள் உலகத்தாரால் கடைப்பிடித்தொழுகப்படுமாயின் மனித வர்க்கத்தினுள் அகில உலக சகோதரத்துவம் உண்டாகிவிடும் என்பது உறுதி. இன்னும் தனிப்பட்டவர்களது உரிமைகள், பாத்தியதைகள் சம்மந்தமாகவும் மனிதர்களுக்கிடையில் சமத்துவம் ஏற்பட்டுவிடும் என்பதும் நிச்சயம். ஆகவே, மனித வர்க்கத்துடன் ஒற்றுமையாகவும், சச்சரவில்லாமல் சமாதானமாகவும் சமமாகவும் நடந்துகொள்வது ஒவ்வொரு முஸ்லிமுடையவும் முதல் வேலையாகும். இந்தச் சிறந்த திட்டத்தின்மீதுதான் மனித வர்க்கத்தின் அஸ்திவாரம் எழுப்பப்பட்டிருக்கிறது. மனித வர்க்கத்தினுடைய இந்தத் திட்டத்தில் நன்மையின்பாலும் பிரயோஜனத்தின்பாலும் அழைத்துச் செல்லக்கூடிய எல்லாக்காரியங்களும் சேர்ந்திருக்க வேண்டியதும், தீமையையும் கெடுதியையும் உண்டுபண்ணக்கூடியவைகளையும் தள்ளுபடி செய்வதும் அவசியமாகும். சுருங்கக் கூறுமிடத்து ஒவ்வொருவரும், தமது இயற்கைத் திறமையாலும் கெட்டிக்காரத்தன்மையாலும் முன்னேற்றமும் அபிவிருத்தியும் அடைந்துகொள்வதற்கு வசதியும், ஸ்திரீ புரு

ஷர்களிருவரும் அவரவருக்குரிய உரிமைகளை யும், பாத்தியதைகளையும் இனிதடைவதற்குச் சந்தர்ப்பம் கிடைப்பதற்கும் ஏற்ற விதமாக நீதியையே அஸ்திவாரமாகக் கொண்டு ஒரு சமூக முண்டாக வேண்டும் என்பதே இஸ்லாத் தின் நோக்கமாக இருந்து வருகிறது. மனிதருக் கிடையில் உயர்வு தாழ்வு என்ற வித்தியாசமில் லாமல், ஒவ்வொருவரும் தமது அபிப்பிரா யத்தை வெளியிட்டுப் பூரண சுயேச்சையுடன் முன்னேறுவதற்குச் சந்தர்ப்பம் அளித்தால் தான் இந்நோக்கம் சித்தியடைய முடியும். ஆகவே, இங்கு எல்லாக் காரியங்களும் தெளி வாக இருக்க வேண்டிய தவசியமாகும். மனிதர் களுக்கிடையில் உயர்வு தாழ்விருக்குமானாலும், அதிகாரம் வகிப்பவர், ஆளப்படுவோர் என்ற வகுப்புப் பாகுபாடிருக்குமாயினும், எல்லா மனிதர்களும் சமத்துவமான ஒரே அந்தஸ்தை அனுபவிக்க முடியவில்லையானாலும் மேலே கூறப்பட்ட அபிப்பிராய சுதந்திரம், உள்ளக் கிடக்கையே வெளியிடும் சுதந்திரம் அர்த்த மற்ற சுதந்தரமாகிவிடும். எனவே, சமத்துவம் தான் ஒரு பெரும் பீடமாக இருந்து வருகிறது என்பதும், அதனையே இஸ்லாமிய சமூகம் சுற்றி வந்து கொண்டிருக்கிறது என்பதும் இதி லிருந்து வெளியாகிறது. இதற்கு அந்த அறபி நபி ஹஜ்ரத் முஹம்மது (ஸல்.) அவர்கள் தான் பரிபூரணமான முதலாவது உதாரணமாக இருந்து வருகிறார்கள். ஆத்மார்த்த உன்னதங் களைப் பொறுத்தமட்டில் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் திரிகாலத்திலுமுள்ள எல்லா மனிதர் களையுங் காட்டினும் அதி உன்னதமான அந் தஸ்தை அடைந்திருந்தபோதினும் லௌகிகத் துறையில் அந்நாயகர் அவர்களுக்கும் சாமான்ய அறபி ஒருவருக்கும் எவ்வித வித்தியாசமு மில்லை. இந்த உதாரணத்திற்கு நிகராக இக்குவ லயத்தில் வேறெங்கும் எந்த உதாரணமு மில்லை. இந்த உதாரணத்தை ஸங்கைவான்க ளான ஸஹாபிகள் பின்பற்றினார்கள். ஹஸ்றத் உமர் பாறூக் (றலி.) அவர்கள் இந்தத் திட்டமே யுருவாயமைந்தவராக இருந்தார்கள்.

இஸ்லாம் அறபிதேசத்தில் தோன்றுவதற்கு முன்னர் மனித வர்க்கத்தார் பல சமூகங்களாக வும் வகுப்பினராகவும் இருந்தனர் என்பதும், இச்சமூகங்களும் ஜனநாயகதத்துவ முள்ளவை களாக அமைக்கப்பட் டிருக்கவில்லை என்பதும் நமக்குத் தெரியவருகிறது. ஒரு அரசன் அரச னாகவே இருந்தனன். ஆண்டி ஆண்டியாகவே இருந்தனன். ஆண்டிக்கும் அரசனுக் கிடையி லுள்ள வாழ்க்கையின் அந்தஸ்துகள் ஒன்றுக் கொன்று நேர்விரோதமான தன்மைகளையே யுடையனவா யிருந்தன. ஆடவர் முன்னிலையில் ஸ்திரீயின் அந்தஸ்து மிகவும் கீழ்ப்பட்ட தாகவே இருந்தது. அவர்களது பிறப்புரிமை யையும் பாத்தியதையையும் அடைய முடியாத வர்களா யிருந்தனர். வேற்றுமை, உயர்வு தாழ்வு என்ற பாகுபாடுகள் தலைவிரித்தாடின. தாழ்ந்த நிலையிலுள்ள ஜனங்களுக்கு தஞ்சம் அளிக்க எவருமில்லை. அடிக்கடி நபிமார்கள் வந்து கொண்டுதானிருந்தனர். ஆனால், சமத் துவம் என்ற தெய்வ நியதியை அறபி நபியவர் கள் அவனியோர்க் கறைந்தார்கள். இன்னும், உயர்வு தாழ்வுகளையும், எல்லா வீண் நம்பிக்கை களையும் சிதற வடித்துவிட்டார்கள். மனிதனை அவனது உன்னத ஸ்திதிக்கு கொண்டு சென் றார்கள். அதற்கப்புறம் தான் ஐரோப்பிய தேசங்கள் சமத்துவம் - சமத்துவம் என்று இவ்வளவு ஆர்ப்பாட்டங்களைச் செய்கின் றன.

இன்றுங்கூட இஸ்லாத்தின் சமத்துவம், கொள்கை யளவிலுள்ள வெறும் நம்பிக்கை யல்ல; உலகில் முஸ்லிம்கள் வீழ்த்தப்பட் டிருக்கும் இன்னிலைமையிலும்கூட சமத்துவம் என்ற நியதி முஸ்லிம்களுக்குள்தான் பெரிய அளவிற்கு கிரியாம்சையில் கையாளப்பட்டு வருகிறது. முஸ்லிம்களது இச்சமத்துவம் மேனாட்டின் சமத்துவத்தைப் பார்க்கினும் எத் தனையோ மடங்கு உண்மையானது. நாம் முஸ் லிம்களது சென்ற கால சரித்திரத்தைப் புரட் டிப் பார்ப்போமாயின் அதாவது இஸ்லாத்தின் சத்தியத் திருத்தூதர் அவர்களினுடையவும், "குலபாயே ராஷிதீன்" களது வரலாறுகளையும் ஊன்றிப் படிப்போமாயின் மறுபடியும் முஸ் லிம்களது நக்ஷத்திரம் உச்ச ஸ்தானத்தில் வர முடியாது என்று கூறுவதற்கு எவ்விதக் கார ணமுமில்லை. இவ்விஷயத்தில் முஸ்லிம்களுக்கு அசையாத உறுதியும், துணிவும் இருக்கவேண் டியது மட்டிலும்தான் தேவை. ஆனால், அந் தத் துணிவும் உறுதியும் மேலே கூறப்பட்ட முதற்காலத்தவர்களது துணிவிற்கு வேறு பட்டதாக இருக்கக்கூடாது.

உதிர்ந்த மலர்கள்

(அமீர்ஷக்கீப் அர்ஸலான் வரைவது)

ஜலம் எவ்வளவு நேரம் பாத்திரத்தில் அசைவற்றிருக்கிறதோ அவ்வளவிற்குத் தெளிவாகவும் கலங்கலில்லாமலு மிருக்கிறது. இதுபோல மனிதன் எத்தனை காலத்திற்கு ஜீவித்திருக்கிறானோ அதற்குத் தக்கவாறு நுட்ப புத்தியும், களங்கமற்ற சிந்தையு முள்ளவனாக இருக்கிறான்.

....

ஒவ்வொரு வஸ்துவையும் அதற்குரிய பொருத்தமான இடத்தில் வைப்பதுதான் மிகவும் பெரிய புத்திசாலித்தனமாகும். நாம் சத்தியம், உண்மை, நேர்மை ஆகியவைகளையும் கூட அதற்குரிய இடத்தில் வைக்காவிடில் தவறிழைத்தவர்களாகி விடுவோம். எவ்வாறெனில், வெண்ணெய் நல்ல பொருளேயாயினும், அதனை வைப்பதற்குத் தக்க பாத்திரமும் இருக்க வேண்டிய தவசியமன்றோ.

....

ஒரு விபத்தைக் கண்டு பயப்படுபவர்கள், ஒரு கஷ்டத்தைப் பார்த்து சோர்வடைபவர்கள் அல்லாஹு தஆலாவின் பால் சரியான விதத்தில் விசுவாசங் கொண்டிருப்பார்கள் என்று நம்பமுடியாது.

....

அலக்ஸாண்டர் தி கிரேட், நெப்போலியன் போனபார்ட், முஹம்மது பாத்திஹ் முதலிய வீரர்கள் பூலோகத்திலுள்ள பெரும் பாகங்களை ஜெயித்து வாகை மாலை சூடினர். ஆனால், அவர்களில் ஒருவரும் தமது மனத்தை அடக்கி ஆள முடியவில்லை. ஆதலின், மனத்தை எதிர்த்துப் போர் செய்வதுதான் பெரிய போர் என்பதாக மெஞ்ஞானிகள் கூறுவார்களாயின், அதனைக் கேட்டு ஆச்சரிய மடையவேண்டிய விஷயமொன்றுமில்லை.

ஆசை என்ற மைதானம் விசாலமானதாக இல்லா திருப்பின் ஜீவியம் களங்க முள்ளதாகவும் நெருக்கமானதாகவுமே இருக்கும். வாழ்க்கையின் முடிவு சமீபத்தி லில்லாதிருப்பின் உல்லாச வாழ்க்கையின் விசாலத்திற்கு எல்லையே இருக்காது.

....

கீழ்நாட்டு ஜனங்கள் தங்கள் செய்கைக்காக வெட்க மடைகின்றனர். மேனாட்டினர் தங்கள் சொல்லுக்காக வருந்துகின்றனர்.

....

மேனாட்டு உடை நல்லதா? அல்லது கீழ்நாட்டு உடை நல்லதா என்று ஒருவர் என்னை வினவினர். அதற்கு யான் விசாலமாகவும் திறந்ததாகவு மிருக்கிற வீடு நல்லதா? விசாலமில்லாமல் இடைஞ்சலாகவும் இருளாகவு மிருக்கிற வீடு நல்லதா என்று வினவினேன். அதற்கவர், விசாலமாகவும் திறந்ததாகவு மிருக்கிற வீடுதான் நல்லது என்று பதிலளித்தார். அப்படியாயின், கீழ் நாட்டுடைதான் நல்லது. ஏனெனில், உடலத்திற்கு உடை வீடாக இருக்கிறது என்று கூறினேன்.

....

ஸ்கூலில் சில புத்தகங்களை நெட்டுருச் செய்துவிடுபவர் அறிஞராகிவிட முடியாது. அறிவை எங்கெங்கிருந்து தெரிந்து கொள்ளலாம் என்பதை உணர்ந்தவன்தான் அறிஞனாவன்.

....

"மனிதன் இளவயதில் எதையும் சிந்திப்பதில்லை. இருபது வயதில் அநேகம் காரியங்களைப்பற்றி சிந்தனை செய்யத்தொடங்குகிறான். முப்பது வயதில் பாதி ஜீவியம் முடிந்து விட்டதாக எண்ணுகிறான். நாற்பது வயதில் மூன்றிலொரு ஜீவியம்தான் பாக்கி இருக்கிறது என்று நினைக்கிறான். ஐம்பது வயதில் பூர்த்தியான வாழ்விருக்கும் பக்ஷத்தில் இன்னும் பத்து வருஷம்தான் என்று கூறுகிறான். அறுபது வயதாகிவிட்டால் இன்னும் அதிகமாக ஜீவித்திருந்தால் சில வருஷங்கள்தான் ஜீவித்திருப்பேன் என்று கூறுகிறான். உங்களுக்கு எழுபது, எண்பது வயதாகிவிட்டதே, நீங்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்

பதாக எண்பதுவயது சென்ற ஒரு வயோதிகரை வினவினேன். நீங்கள் தமாஷாகக் கேட்கிறீர்களோ என்று அவ்வயோதிகர்என்னை விசாரித்தார். அதற்கு யான் "அதிலென்ன சந்தேகம்?" என்றேன். அதற்கவர் "இந்த வயதில் எவ்விதமான கவலேயோ சிந்தையோ இருப்பதில்லை" என்று கூறினர்.

கவலை யற்றிருப்பதே கவலையாகிவிடக் கூடிய வேளை மனிதனுக்கு ஒரு சந்தர்ப்பத்தில் வரும் என்பதிற்சந்தேகமில்லை.

....

மேனாட்டு அரசாங்கங்கள் கீழ்நாட்டிற்கு ஒரு வேதனையாக இருக்கின்றன என்று கீழ்நாட்டு மக்கள் கூறுகின்றனர். இதில் எவ்வித ஆக்ஷேபனையுமில்லை. ஆனல், உண்மையை உணர்ந்து கொள்வது அவ்வரசாங்கங்களை எதிர்ப்பதற்குப் போதுமானதா? என்று நான் அவர்களை வினவுகின்றேன்.

இந்த நேரத்தில் இதுவே போதுமானது ஏனெனில், துரோகிகள் நமக்கு இவ்வுண்மையும்கூடப் புரியாமலிருக்கச் செய்ய முயலுகின்றனர். அப்புறம் இதற்குத்தக்கன செய்து கொள்ளலாம். வைத்தியனுக்கு நோயை நிர்ணயிப்பதுதான் கடினம், அப்புறம் நோய்க்குத் தகுந்த சிகிச்சைசெய்வது சுலபம். இதுபோல, இவ்வுண்மை நம்மில் எல்லோருக்கும் ஆழமாகப்பதிந்து விடுவதே போதுமானது. அப்புறம் இதற்குத்தக்க வழிபிறந்துவிடும்.

....

நாகரீகம் என்பது காரியத்தில் முன்னேற்றமடையவில்லை. பேச்சளவில்தான் முன்னேறி இருக்கிறது. ஐரோப்பிய மகாயுத்தத்தில் நாகரீகமடைந்தவர்கள் சிந்திய ரத்தத்தின் அளவு நாகரீகமற்ற பர்பரியர்கள் முற்காலத்தில் ரோமாவின் மீது படையெடுத்தபோது சிந்தினார்களா?

தாழ்த்தப்பட்டோர் மதம் மாறும் பிரசினை

தாழ்த்தப்பட்டவர்களின் தலைவர்களிலொருவரான பாபா பத்தத் பாவன்தாஸ் என்பவர் இரண்டு மாதங்களுக்கு முன்னர் லக்ஷ்மணபுரியில் தாழ்த்தப்பட்டோர் மதம்மாறும் பிரசினையைப்பற்றிப் பிரசங்கம் செய்தபோது "முஸ்லிம்கள் தங்கள் மதத்தைப் பிரசாரம் செய்யும் விஷயத்தில் அதிக பிரயத்தனம் எடுத்துக்கொள்ளவில்லையாயினும் சத்தியத்தையும் உண்மையையும் தேடிக்கொண்டிருக்கிற தாழ்ந்த வகுப்பினர் தங்களது குறைகளுக்குரிய சஞ்சீவி இஸ்லாத்திலுள்ளிருக்கிறதென்பதைக் கண்டுகொண்டனர். ஏறக்குறைய தொண்ணூற்றைந்து சதவிகிதம் தாழ்த்தப்பட்டோர் இஸ்லாத்தையே தழுவுவதாக முடிவுசெய்துள்ளனர். ஆகவே, இச்சமயத்தில் முஸ்லிம்கள் விழித்துக்கொள்வதும், தங்களது கடமையையுணர்ந்து, அநீதி செய்யப்பட்ட தாழ்ந்தோருக்கு உதவிசெய்வதும் அவசியமாகும்" என்று கூறிவிட்டு, இஸ்லாத்திற்கும் இதர மதங்களுக்கு மிடையிலுள்ள தாரதம்மியங்களை எடுத்துக் கூறுகையில், இஸ்லாம் உலகில் நிகரற்றதொரு மதமாகும்; இந்த மதத்தில்தான் எஜமான் தனது மைந்தனைப் பார்க்கினும் தன்னடிமையை ஊர்ஜிதம் செய்து தனது அரசாங்கத்திற்கதிபதியாகத் தக்கவரெனத் தெரிந்தெடுத்திருக்கிறார்." என்று கூறி இந்தியாவை ஆட்சிபுரிந்த முஸ்லிம் அரசர்களில் அடிமை வம்சத்தினரின் பிரபல அரசர்களின் பெயர்களைப் பிரஸ்தாபித்தார்.

மேலும், அவர் பேசுகையில், ஹஜ்ரத் பிலால் (றலி.) அவர்கள் கருப்பராகவும், தாழ்ந்தவராகவுமிருந்த அபீசினியராக இருந்தும், முஸ்லிம்களது உண்மையான நபியானவர் (ஸல்.) இவருக்குச் சமத்துவமளித்து அவருக்கு ஒரு உன்னதஸ்தானத்தை அளித்துவிட்டார். இன்றுங்கூட முஸ்லிம்கள் அவரை மிகவும் அதிகமாகக் கௌரவித்து, அவரது நாமத்தைக் கூறும் போது கூட மரியாதையாக உச்சரிக்கின்றனர்" என்று கூறி, அவர் முஸ்லிம்களது வீரப்பிரதாபம், நீதி, உண்மை ஆகியவைகளைப் போற்றினர். மேலும், அவர் பேசுகையில், "தீண்டாதார்கள் ஹிந்து மதத்தைவிட்டு விலகினாலும் இந்தியாவினுடைய எந்தமதத்தையும் தழுவிவிடக் கூடாது" என்றும் தங்களுக்

குள் தீர்மானஞ் செய்துகொண்டிருக்கிறார்கள். ஏனெனில், சீக்கியர்கள் இந்தியாவில் 30, 40 லக்ஷம்பேர்களுக் கதிகமாக இல்லை யாதலால் இவர்களுடன் ஏழுகோடி தாழ்ந்த மக்கள் சேர்ந்து விடுவார்களாயின் தங்களது ஜனத் தொகை $7\frac{1}{2}$ கோடிக்கதிகமாக இருக்காது ; பின்னர், மறுபடியும் அவர்கள் சிறுபான்மையின ராகவே இருப்பார்களாதலின் ராஜீயத் துறையில் மறுபடியும் அவர்கள் நஷ்டத்திலேயே இருப்பார்கள்; இதுவன்றி, கிறிஸ்துவர்கள் இந்தியாவில் கிட்டத்தட்ட $1\frac{1}{2}$ கோடிப்பேரிருக்கின்றனராதலின் அவர்களுடன் சேர்ந்தாலும் சிறுபான்மையினராகவே இருப்பார்கள். ராஜிய விஷயத்தில் இப்படி இருந்தாலும் கிறிஸ்துவ மதத்திலும், சீக்கிய தர்மத்திலும் அவர்கட்கு ஆத்மார்த்த சாந்தியும், ஆறுதலும், முக்திக்குரிய வழியுமில்லை, என்பது நம்பிக்கை. இன்னும் அவர்களிடம் அகில உலக சமத்துவக்காரியங்கள் கிரியாம்சையிலில்லை ; இஸ்லாத்திலிருப்பதுபோன்ற சகோதர வாஞ்சையுமில்லை, என்று கூறிவிட்டு இதற்கு உதாரணங் கூறுகையில் இத்தாலி அபிசீனிய யுத்தம் இதற்கு ஒரு புதிய சான்றாகும். இவ்விரு தேசாதிபதிகளும் கிறிஸ்துவமதத்தைப் பின்பற்றுபவர்களாக விருந்தும், இவர்களில் ஒரு கக்ஷியினர் வெள்ளையர், மற்றொரு கக்ஷியினர் கருப்பாக இருக்கும் நிலைமையில் ஒருவர் மற்றொருவரைத் தனது மன இச்சைக்கிரையாக்கி விட்டார்கள் என்று கூறிவிட்டு இந்த யுத்தத்தில், தங்களுக்கு முஸ்லிம்களது நன்றிமறவாமைக்குப் புதியதொரு திருஷ்டாந்தம் கிடைத்திருக்கிறதென்றும் முன்னொருகாலத்தில் அபிசினியாவிலிருந்த ஒரு அரசர் முஸ்லிம்களுக்கு உதவிபுரிந்தார் என்பதற்காக அவர்கள் எப்பொழுதும் அபிசினியாவினுடையவும் அபிசீனிய மக்களினுடையவும் சுதந்திரத்தைக் கௌரவித்தே வந்திருக்கிறார்கள் என்றும், முஸ்லிம்கள் பெரிய பெரிய ராஜ்யங்களை ஜெயித்துக்கைப்பற்றி இருந்தும், அவர்களது வீரர்கள் அபிசீனியாவை ஏறெடுத்தும் பார்க்கவில்லை ; அத்தேசத்திற்குப் பாதுகாப்பே அளித்து வந்திருக்கிறார்கள். இன்றுங்கூட அபிசீனியா தோல்வியுற்றதற்காக முஸ்லிம்கள் தாம் அதிக துக்கமடைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இத்தியாதி காரியங்களை எல்லாம் கவனித்துத்தான் தங்களது முக்திக்கும் நன்மைக்கும் ஏற்ற மதம் இஸ்லாம் என்பதைக் கண்டு அதனைத் தழுவுவதாக முடிவு செய்துள்ளார்கள். ஆகவே ஏழு கோடி தீண்டாதார்கள் ஒன்பது கோடி முஸ்லிம்களுடன் சேர்ந்துவிட்டால் மிகப் பிரம்மாண்டமான பெரும்பான்மையினராகிவிடுவர். அதற்கப்புறம் "ஹிந்துஸ்தான்" (இந்துக்கள் நிறைந்த இடம்) என்ற பெயர் "இஸ்லாமிஸ்தான்" இஸ்லாம் நிறைந்த இடம் என்பதாக மாறிவிடும்" என்பதாகக் கூறினர்.

சகோதரர்களே! மேலே கூறப்பட்ட விஷயங்கள் தாழ்ந்த வகுப்பு ஜனங்களைச் சேர்ந்த ஒரு தலைவரது பிரசங்கத்திலிருந்து எடுக்கப்பட்டவை. அவர் கூறி இருக்கிற அபிப்பிராயங்கள் மிகவும் முக்கியமானவை. அவர் நிலைமையை உள்ளது உள்ளபடி உரைத்திருக்கிறார். தாழ்த்தப்பட்டமக்கள் கண் மூடித்தனமாக ஹிந்து மதத்தைக் கைவிட முன் வரவில்லை என்பதும், உலகிலுள்ள பல் வேறு மதத்தினர் அவர்களை ஏமாற்றித் தங்கள்பால் சேர்த்துவிட முடியாதென்பதும் இதிலிருந்து நன்கு விளங்குகிறது. தாழ்த்தப்பட்ட சகோதரர்கள் உண்மையாகவே தங்களுக்கு சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் விரும்புவதுடன் ஆத்மார்த்த முன்னேற்றத்தையும் முக்தியையும் பெற விரும்புகிறார்கள் என்பதிற் சந்தேகமில்லை. இதற்காக அவர்கள் முஸ்லிம்களாகிய உங்களைக் கூவி அழைக்கும்போது நீங்கள் ஏன் தூங்கிக்கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் அவர்கள்பால் கவனம் செலுத்துகிறீர்கள் என்பதை சமிக்ஞையாகக் காட்டிக்கொண்டால் போதும்; அவர்கள் தாங்களாகவே உங்கள்பால் வந்துவிடத் தயாராக இருந்துகொண்டிருக்கின்றனர். இதனை அவர்கள் வாய்மொழியாகக் கூறுவது மட்டுமின்றி கிரியாம்சையிலும் காண்பித்து வருகின்றனர். இதற்கு நாம் உதாரணம் காண்பிக்க வெகு தூரத்திற்குச் செல்ல வேண்டியதில்லை. நமது மாகாணத்தைச் சேர்ந்த மலையாளம் ஜில்லாவிலும், கொச்சி, திருவாங்கூர் சமஸ்தானங்களிலுமுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் இஸ்லாத்தைத் தழுவ முன் வந்திருப்பதே போதிய சான்றாகும். அவர்களிலுள்ள பிரபல தலைவர்களில் ஒருவரான டாக்டர் தையில் பல்லாயிரம் பேர் கொண்ட மாபெரும் கூட்டத்தில் பகிரங்கமாக இஸ்லாத்தைத் தழுவியதுமல்லாமல் கோளநாட்டிலுள்ள 25 லக்ஷம் தீண்டாதார்களையும் 5 வருஷ காலத்திற்குள் இஸ்லாத்திற் சேர்த்துவிடுவதற்காகவும், அவர்களது லௌகீக முன்னேற்றத்திற்கும், முஸ்லிம்களது முன்னேற்றத்திற்குமாக ஒரு திட்டத்தைப் போட்டு,

அவர் இஸ்லாத்தைத் தழுவிய தினத்திலிருந்து உண்மை யாவருக்கும் நன்கு புலப்படும். அவர் இதற்காக கேரள நாட்டிலுள்ள பல முக்கிய நகரங்களிலும் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார். அவர் செல்லுமிடங்களிலெல்லாம் முஸ்லிம் தலைவர்களும் பிரபலஸ்தர்களும் ராஜோபசாரத்துடன் வரவேற்று உபசரிப்பதுடன் அவரது திட்டத்தை வெற்றியுறச் செய்வதில் தங்களுக்குள்ள சிரத்தையைக் காண்பித்தும் வருகின்றனர்.

இவர் இஸ்லாத்தைத் தழுவும் வைபவத்திற்குத் தலைமை வகிப்பதற்காக காந்திஜீயின் புதல்வரான ஜனாப் ஷெய்கு அப்துல்லா காந்தி அவர்களும், தென்னாப்பிரிக்கா, மலாயா, ஜப்பான் முதலிய தூர தேசங்கள் சென்று இஸ்லாம் மதப் பிரசாரம் செய்பவரான மீரட், மௌலானா ஹிஸ் ஹோலினஸ் அப்துல் அலீம் ஸித்திக்கீ அவர்களது மூத்த சகோதரர், மௌலானா குஜந்தி, அகில இந்திய தப்லீக் மகா சபையின் காரியதரிசியான ஸெய்யித் குலாம் பேக்நைரங், எம். எல். ஏ., பம்பாய் தப்லீகுல் இஸ்லாம் செக்ரிடரி மௌலானா சேட் ஜகரிய்யா மனியார் முதலிய பல பிரபலஸ்தர்களும் விஜயம் செய்து, சுமார் ஒரு மாத காலமாக கேரள நாட்டின் பிரதான ஸ்தலங்களில் இஸ்லாமியப் பிரசாரம் செய்ததன்பயனாக ஆங்காங்குள்ள பல படிப்பாளிகளும் அறிஞர்களும் இஸ்லாத்தைத் தழுவியுள்ளனர். அப்பிரதேசத்தில் இது போழ்து இஸ்லாமியப் பிரசாரம் ஓரளவு விமரிசையாக நடைபெறுகிற தென்னலாம்.

ஆனால், நந்தமிழ் நாட்டிலோ இஸ்லாமியப் பிரசாரம் இதுபோழ்து அத்துணை வேகமாக இல்லை என்று கூறவேண்டிய திருப்பதற்கு வருந்துகின்றோம். இந்நாட்டிலுள்ள முஸ்லிம்கள் சன்மார்க்க பக்திக்குச் சிறந்தவர்களெனக் கீர்த்தி பெற்றவர்கள். இஷா அத்தே இஸ்லாத்தின் அவசியத்தை நன்குணர்ந்தவர்கள். அப்படி இருந்தும் இது சமயம் அவர்கள் காண்பிக்கவேண்டிய அளவிற்கு இதில் சிரத்தை காண்பிக்கவில்லை என்று கூறவேண்டியதிருக்கிறது. நாம் ஹிந்து முஸ்லிம் மனஸ்தாபத்தை யுண்டாக்க விரும்பவில்லை ஆயினும், தாழ்த்தப்பட்டோரை இஸ்லாத்தில் சேர்ப்பதால் முஸ்லிம்களுக்குள்ள ராஜிய முன்னேற்றத்தை மட்டுலும் ஞாபக மூட்ட விரும்புகிறோம். நஞ்சென்னைமாகாணத்தில் முஸ்லிம்களது ஜனத்தொகை ஆறுசத விகிதமே இருக்கிறது. சட்டசபையிலும், ஸ்தலஸ்தாபனங்களிலும் முஸ்லிம்கள் மிகவும் சிறுபான்மையினராக இருக்கின்றனர். மெஜாரிட்டியாகவுள்ளவர்கள் முஸ்லிம்களது தயவைக் கொஞ்சமும் எதிர்பார்க்காமலே தங்களது காரியங்களைச்செய்துகொண்டே போகமுடியும். ஆகவே, முஸ்லிம்களை எவ்விதத்திலும் லக்ஷியம் செய்யவேண்டிய ஸ்திதியில் அவர்கள் இல்லை. மான்போர்டு சீர்திருத்தத்தின்கீழ் ஏற்பட்ட மந்திரிச்சபைகளில் முஸ்லிம்களில் ஒருவர் கூட நியமிக்கப்படவில்லை. அரசாங்கத்தின் தயவின்பேரில் மாற்றப்படாத இலாக்காவில் ஒரு முஸ்லிமுக்கு ஸ்தானம் அளிக்கப்பட்டு வந்தது. அதுவும் இப்பொழுது இல்லை, எனவே தற்போதுள்ள மந்திரிச் சபையிலோ, நிர்வாகசபையிலோ முஸ்லிம்களுக்கு எவ்விதத்திலும் பிரதிநிதித்துவமில்லை. இதுபோலவே இதர விஷயங்களிலும் முஸ்லிம்கள் அலக்ஷியம் செய்யப்படுவர். ஆகவே முஸ்லிம்கள், தங்களது குறையை அரசாங்கம் கவனித்து வேண்டிய உதவிபுரிய வேண்டுமென்று விரும்புவார்களாயின், சமூக நலனை உத்தேசித்தேனும் இஷா அத்தே இஸ்லாம் வேலையில் சிரத்தை எடுத்து தங்களது ஜனத்தொகை விகிதாசாரத்தைப் பெருக்கிக்கொள்ள முயலவேண்டும். இது சமயம் நாம் தூங்கிக்கொண்டிருந்து நமக்குக் கிடைத்த இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடுவோமாயின் நாம் ராஜியத்துறையில் இம்மாகாணத்தைப் பொறுத்தவரையில் எவ்வித அபிவிருத்தியையும் அடைய முடியாதென்பது திண்ணம்.

மதிப்புரை:—ஜனாப் மௌல்வி I. L. M. முகம்மது பாஸி அவர்களால் எழுதப்பட்டு கொழும்பு ஸீரத் பிரசார சபையாரால் வெளியிடப் பெற்ற பர்தாவின் மாண்பு என்னும் நூல் வரப்பெற்றோம். ஜனாப் மௌலானா அவர்கள் இதனை தக்க மார்க்க ஆதாரத்துடன் வரைந்திருக்கிறார்கள். இதில் பர்தாவின் அவசியம், முதலியவைகள் தெளிவாக விளக்கப்பட் டிருக்கிறது இது ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டியது அத்தியாவசியமாகும்.

ஹஜ்றத் அலீ (றலி.) அவர்களது திருமுகம்

என்றனைவர்காள் !

இறைவனை எந்நேரமும் அஞ்சுங்கள். நீங்கள் கோபமாக இருந்தாலும்சரி அல்லது (கோபமில்லாமல்) சந்தோஷமாக இருந்தாலும் சரி எப்பொழுதும் உண்மையே யுரையுங்கள். நீங்கள் செல்வவந்தர்களாயிருந்தாலும் சரி அல்லது தரித்திரர்களா யிருந்தாலும் சரி எக்காலத்திலும் காரியங்களைச் சிக்கனமாக நிர்வகிக்க வேண்டும். நண்பனுயினும், பகைவனுயினும் யாவருக்கும் நீதியே செய்யவேண்டும். தரித்திரத்திலிருந்தாலும் சரி அல்லது சௌகரியமாக இருந்தாலும் சரி எப்பொழுதும் பொறுமையாளராகவும், நன்றி செலுத்துபவராகவும் இருக்கவேண்டும்.

என்மைந்தர்காள் !

எவர் தனது குறைகளையும் தவறுகளையும் பற்றி கவனம்செலுத்துகிருரோ அவர் பிறருடைய குறைகளையும் தவறுகளையும்பற்றிக் கவனம் செலுத்த அவருக்குச் சாவகாசம் கிடைக்கவே மாட்டாது. எவர் தனக்குக் கிடைத்ததற்கு நன்றியுள்ளவராக இருக்கிருரோ அவருக்கு ஒருபோதும் கைசேதமுண்டாகாது. எவர் அநீதி அக்கிரமம் என்ற வாளை உறையை விட்டு எடுத்துக்கொள்கிருரோ அவர் அதனுலேயே வெட்டுப்பெறுவார். எவர் தனது சகோதரனுக்காகக்குழிதோண்டுகிருரோ அவரே அதில் விழுந்துவிடுவார். எவர் தனது குற்றங்களை மறந்துவிடுகிருரோ அவர்தான் பிறரது குற்றங்களைப் பெரிதாகக் கருதுவார். எந்த மனிதர் தீமைகளின்பால் சார்ந்துவிடுகின்ருரோ அவரை ஜனங்கள் வெறுப்புடன் நோக்குவார்கள். எவர் கொடுமைகளைச் செய்கிருரோ அவர் ஒரு நாளில் எவ்விதத்திலும் அகப்பட்டுக்கொள்வார். எவர் கெட்ட சினேகத்திலிருக்கிருரோ அவர் எப்பொழுதும் கெட்ட எண்ணம் என்பதால் வேட்டையாடப் படுவார். எவர் மரணத்தை மறக்கவில்லையோ அவர் இக்குவலயத்தில் மிக மிக அற்பமான வஸ்துவைப்பற்றியும் திருப்தியடைந்து விடுவார். எவர் பிறர் முன்னிலையில் தனது பாவங்களைப்பற்றி பெருமையாகப் பேசுகிருரோ அவரை இறைவன் எப்பொழுதும் இழிவு என்னும் படுகுழியிலேயேதான் தள்ளிவிடுவான்.

இஸ்லாமிய உலகில் தொழுகை நோன்பின் இன்றைய நிலை

இஸ்லாமிய உலகில் தொழுகை, நோன்பு சம்மந்தமான விஷயங்கள் இன்று என்ன நிலைமையில் இருந்து வருகிற தென்பதைப் பற்றி இதனடியில் குறிப்பிடப்படுகிறது

அவை வருமாறு :—

முதலாவது

ஒருநாள் எகிப்திய கல்வி மந்திரி ஸ்கூல் உபாத்தியர்யர்களை ஒன்று கூட்டி, கல்வி சம்மந்தமான பொதுவிஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். அங்கு விஜயம் செய்திருந்த உபாத்தியாயர்களிலொருவர் மக்ரிபுத் தொழுகையை நிறைவேற்றுவதற்காக எழுந்தார். அப்பொழுது அம்மந்திரியார் அவ் வுபாத்தியாயரை நோக்கி "நீர் செய்வதென்னை? நீர் ஒருவர் தான் மார்க்க பக்தர்; நாங்களெல்லோரும் மார்க்க பக்தி யற்றவர்கள் என்று காண்பித்துக் கொள்ள விரும்புகிறீரோ? இதனை வேறொரு

சமயத்தில் நிறைவேற்றிக் கொள்ளக் கூடாதா?" என்று கூறினர்.

மற்றொரு கூட்டத்தில் இதே உபாத்தியாயர்கள் குழாத்தில் "முஸ்லிம் பெரியார்கள் தொழுவதற்காக இரவின் நித்திரையை ஒழிக்கின்றனர்; இப்படிச் செய்வது சுகாதாரத்திற்கு விரோதமாகும்?" என்று அம்மந்திரி கூறினர். இக்காலத்தில் கதீவிய்யா மத்ரஸாவில் உபாத்தியாயராக இருந்து கொண்டிருந்த தன்தாவீ ஜௌஹரீ செவிக்கி இச் செய்தி எட்டியபோது இதனைக் குறித்து மாணவர்களிடம் அவர் சம்பாஷணை செய்யவேண்டும் என்று முடிவு செய்துகொண்டு மாணவர்களை நோக்கி,

"பிள்ளைகாள்! நாம் நமது முன்னோர்களைப் பார்க்கினும் எத்தனையோ மடங்கு அதிகமாக முன்னேறிவிட்டோம். இறைவன் நமக்குத் தடைகளை எல்லாம் அவிழ்த்துவிட்டான். மார்க்கச் சட்டப்படி நடக்கவேண்டும் என்ற கஷ்டத்தைவிட்டு நமக்கு விடுதலை யளித்துவிட்டான். நாம் தற்போதைய நாகரீகத்தின் பயனாக நமது முன்னோர்களைப் பார்க்கினும் சகல விஷயத்திலும் மேம்பட்டுவிட்டோம். சுகாதார முறைக் கேற்ப இரவு முழுவதும் நிம்மதியாக நித்திரை செய்கிறோம். கர்னடக முஸ்லிம்கள் சுகாதார முறைகள் என்பதை உணரவே மாட்டார்கள். இரவு முழுவதும் வணக்கம் செய்வதாகக் கூறி விழித்துக் கொண்டிருப்பது மல்லாமல் உலர்ந்த, காய்ந்த உரொட்டிகளைப் புசித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குச் செழிமை என்பது எப்பொழுதாவதேற்பட்டதா? இன்று, நாகரீக மடைந்த ஐரோப்பாவின் காரணமாக சகலவிதமான ருசியுள்ள பதார்த்தங்களும், பானங்களும், விதம் விதமான இன்பங்களும் நம்மிடம் குவிந்து கிடக்கின்றன. அவைகளை நாம் மனமாரப் புசித்துப் பருகுகின்றோம். சகலவிதமான இன்பங்களையும் தாராளமாக உபயோகிக்கின்றோம். யாரும் எவரையும் தடைசெய்ய முடியாது. மதுபான மருந்துபவர் எவரையும் யாரும் அவமானப் படுத்த முடியாது. விபசாரம் செய்பவரையோ வேறு எவரையோ தடைசெய்ய முடியாது. இந்த உரிமைகளும் இன்பங்களும் அரசாங்கத்திலளிக்கப்பட்ட சர்வ சுதந்திரத்தின் பயனேயாகும். இச்சுதந்திரம் புனிதமான இந்த நவநாகரீத் தினலேயே கிடைத்திருக்கிறது." என்று கூறினர்.

அவருடைய இந்தப் பிரசங்கத்தை மாணவர்கள் நிசப்தமாக இருந்து அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். இதனால் அவர்களது மண்டை கிறுகிறுத்துவிட்டது என்றே கூறலாம். பிறகு அவர் அம்மாணவர்களை நோக்கி "நாம் ஒவ்வொருவர்க்கத்தாருக்கும் அடிமைகளாகவே இருக்கிறோம். ஐரோப்பா முழுவதற்கும் நம்மீது ஆதிக்க மிருந்து வருகிறது. அவர்களிலெவரேனும் நம்மில் ஒருவரைக் கொலை செய்துவிட்டால் அதற்குத் தக்க பரிகாரம் கிடைப்பதில்லை. அவர்களது நீதி மன்றங்கள் தாம் இதனை விசாரித்து முடிவு கூறவேண்டியவைகளாக இருக்கின்றன. அவர்கள் கூறும் தீர்மானத்தை எவரும் நிராகரிக்க முடியாது. ஏனெனில், அவர்களிடம் பல மிருக்கிறது. நாம் பலஹீனர்களாக இருக்கிறோம். அந்த வர்க்கத்தினரில் பெரும்பாலர் ஆளும் ஜாதியினராக இருக்கின்றனர். அவர்களைக் கண்டாலே நமது மனத்தில் ஒருவிதமான பயம் தோன்றிவிடுகிறது. ஆகவே, நாம் இவ்வளவு நாகரீக முன்னேற்றமடைந்திருந்தும் நாம் வாழ்வது எதற்காக என்பது எனக்குப் புரியவில்லை. நாம் றஹ்மானின் கிருபையால் முன்னேற்றத்தின் உச்சஸ்தானத்தை அடைந்துவிட்டோம். அப்படி இருந்தும் கேவலமும், இழி நிலைமையும் நமக்குத்தானிருக்கிறது. கண்ணியமும் பெருமையும் அவர்களுக்கு இருந்துவருகிறது. இதன் இரகசியம்தான் புரியவில்லை.

பிள்ளைகாள்! மார்க்கவரம்புகளையும், ஷரீஅத்தின் பந்தத்தையும் விட்டு நாம் விடுதலையடைந்திருந்தும் கேவலமான நிலைமையை அடைந்திருக்கிறோம். நமக்கு முன்னுள்ளவர்கள் தற்கால நாகரீகத்தைக் காதாலும் கேட்காதவர்கள். அப்படி இருந்தும் அவர்கள் எல்லோரையும் அதிகாரம் செலுத்திக்கொண்டிருந்தனர். எனவே, இந்த விஷயத்தில் உங்கள் அபிப்பிராயம் என்னவென்பதைக் கூறுங்கள்" என்று கூறினர்.

இவைகளைக் கேட்டுக்கொண்டிருந்தபின் அவர்களிலுள்ள ஒரு வாலிபர் எழுந்தார். அவரை பஹன் ஸாவீ என்று கூறுவர். அவர் தன்தாவியை நோக்கி "தாங்கள் எங்களுக்கு இந்தத் தலைவாசலைத் திறந்துவிட்டீர்கள். ஆனாலும், தாங்கள் எங்களை மாற்றிவிட முடியும் என்று நினைக்கிறீர்கள்? இவ்விதமான உபதேசம் எதுவும் எங்களது ஒழுக்கத்தையும் வழக்கத்தையும் மாற்றமுடியுமா? நாங்கள் இவைகளை

எங்களது பெற்றோர்கள், உபாத்தியாயர்கள், சட்டாம் பிள்ளைகளிலிருந்து அனந்தர பாத்திய மாகவன்றோ அடைந்திருக்கிறோம்? நாங்கள் பிரைமரி வகுப்பில் படித்திருக்கிறோம். அங்கு ஒருவரும் தொழுபவரில்லை. இப்பொழுது உங்க ளிடம் கல்வி கற்க வந்திருக்கிறோம். இங்கும் கூடத் தொழுபவர் ஒருவரையும் காணோம். நாங்களும் தொழுகையைக் கேவலமான செய்கை என்று மதித்துக்கொண்டிருக்கிறோம். ஒரு மாணவன் தொழுதால் அவனை மற்றவர் பரி கசிக்கின்றனர். இந்த நிலைமை ஸ்கூலில் மட்டு மில்லை. வீடுகளிலுள்ள ஸ்திரீகளுக்கும்கூட இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தொழுகை யில்லாத ஸ்திரீகள் தொழுகையுள்ள ஸ்திரீ களைக் கேவலமாக மதிக்கின்றனர்" என்று கூறினர். இதைக் கூறியவுடன் மற்ற மாணவர் கள் அந்தப் பையனை உற்று நோக்கினர். அப் பையன் கூறியவைகளை மறுத்து "வாயைப் பொத்து, பேசாதே! நீர் பொய்யுரைக்கிறீர்" என்று கூறினர்.

அதற்கப் பையன் அவர்களை நோக்கி "வாத் தியாருக்கு இது தெரியாதா? இது தினசரி நடைபெறுகிற காரியமல்லவா? ளுஹருடைய வேளையில் இந்த இடத்தில் அவர் ஒருவர் மட் டிலும் தனியாக நின்று தொழுவதை நாம் நின்று பார்ப்பதில்லையா? இந்த ஸ்கூலில் நூற் றுக்கணக்கான மாணவர்களும் உபாத்தியாயர் களுமிருக்கிறார்கள். இவர்களில் தொழுகை யைக் கடைப்பிடித்திருப்பவரை விரல் விட் டெண்ணி விடலாம்." என்று பதில் கூறினர்.

அப்பொழுது தன்தாவி அம்மாணவர்களைப் பார்த்து "அவரை ஒன்றும் சொல்லாதீர்கள். அவர் சொன்ன விஷயங்கள் உள்ளபடி நடை பெறுவனவேயாகும். இதிலிருந்து நம் காலத் தைய எகிப்தின் நிலைமை வெளியாகின்றது" என்று கூறி விவாதத்தை முடித்தார்.

இந்தச் சம்பவம் நிகழ்ந்து 14 வருஷங்க ளாகின்றன. இப்பொழுது நிலைமை ஓரளவு மாறுபட்டிருக்கிறது. கொஞ்ச காலமாக எகிப் திய வாலிபர்கள் ஒரு சங்கத்தை நிறுவி இருக் கிறார்கள். அதற்கு "அஞ்சுமனே ஷுப்பானுல் முஸ்லிமீன்" என்பது பெயர். இவ்விதமான சங்கம் இப்பொழுது எகிப்தில் மட்டுமில்லாமல் இதர முஸ்லிம் நாடுகளிலும் பரவி வருகிறது. தன்தாவி அந்த வாலிபர்களுடன் தொழு கையை நிறைவேற்றி இருக்கிறார். அச்சங் கத்தை நிர்வகிப்பவர் மேலே கூறிய மத்ரஸா ததீவிய்யாவில் தன்தாவியினிடம் கல்வி பயின்ற ஒரு மாணவராகும். அவர் இஸ்லாத் தின் உண்மை பக்தராகவும், சீர்திருத்த வாதி யாகவும், இராக்காலங்களில் தூங்காதிருந்து இறைவனை வணங்குபவராகவும், விவேகமுள்ள வராகவும் இருக்கிறார். அவரது பெயர் யஹ் யாதர்வேர் என்பது. அவர் ஜெர்மனியில் பன் னிரண்டு வருஷ காலம் தங்கி இருந்து கல்வி பயின்று, இஸ்லாத்தின்பால் அணையாத அபி மானமும் பக்தியும் கொண்டவராகத் திரும்ப வந்திருக்கிறார்.

இரண்டாவது

இருபதாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் எகிப்து தேசம் முழுவதிலும் உள்நாட்டுச் சுதந்திரம் வேண்டுமென்ற தாகம் உண்டா யிற்று. இங்கிலாந்திலுள்ள பத்திரிகைகள் இது சம்மந்தமாக எகிப்தியப் பத்திரிகைகளில் எழு தப்படும் வியாசங்களை எடுத்துப் பிரசுரித்து இவ்வியக்கத்திற்கு ஆதரவுசெய்தன. அக்காலத் தில் ஒரு ஆங்கிலப்பத்திரிகையின் நிருபர் பின் வருமாறு தமது அபிப்பிராயத்தைப் பத்திரிகை களுக்கு எழுதி வெளியிட்டார்:—

"பிரிட்டிஷார் எகிப்தைவிட்டு இப்பொழுது வெளியேறுவது சரியன்று. இத்தேசத்தி லுள்ள தலைவர்கள், நிபுணர்கள், ராஜதந்திரிகள் முதலிய யாவருக்கும் ஒழுக்கம், உணர்ச்சி ஆகியவைகளில் விவசாயிகளுக்கு இருக்கிற உணர்ச்சி வரும்வரை அவர்கள் எகிப்திலேயே இருக்கவேண்டும். நான் எகிப்து முழுவதை யும் சுற்றிவந்திருக்கிறேன். விவசாயிகள், படிப்பில்லாதவர்கள், தொழிலாளர்கள் ஆகிய வர்களது நிலைமையை யுணர்ந்திருக்கிறேன். இவர்களிடம் அன்பு, வாஞ்சை, ஏழை எளியா ரைப் போஷிக்கும் உணர்ச்சி, தெய்வபக்தி, மார்க்க வரம்பு கடவாமை ஆகியவைகளிருப் பதை நான் கண்டேன். ஆனால், எகிப்திலுள்ள படித்த வகுப்பினர் மார்க்கத்தைக் கைவிட்டு விட்டனர். மாணாக்கர்கள் உபாத்தியாயரைப் பின்பற்றுகின்றனர். உபாத்தியாயர்கள் இரண்டு வகையா யிருக்கிறார்கள். ஒருவர் அங்குள்ள அஜ்ஹர் கலாசாலையில் படித்துத் தேர்ந்தவர் கள். மற்றவர்கள் இதர ஸ்கூல்களில் கல்வி பயின்றவர்கள். உபாத்தியாயர்கள் கல்வி போதிக்கும்போது அதாவது மார்க்கக் கல்வி யைப் போதிக்கும்போது மாணவர்கள் பாடத் தைப்பற்றிக் கொஞ்சம்கூடக் கவனிப்பதே

இல்லை. ஏனெனில், ஸ்கூல் ஹெட்மாஸ்டருக்கு மத விஷயங்களில் எவ்வித சிரத்தையுமில்லை என்பதும், வணக்கத்தில் பிரியமில்லை என்பதும் அம்மாணவர்களுக்குத் தெரியும். இப்படி இருக்க, ஒழுக்கமில்லாமலும் மார்க்க நெறியற்றவர்களுமான வர்க்கத்தாரிடம் நாம் எங்ஙனம் இத்தேசத்தை ஒப்புவிக்கலாம்?" என்று எழுதி இருந்தார்.

மூன்றாவது

எகிப்துப் பட்டத்திளவரசரின் உபாத்தியாயருடைய தகப்பனார் இதனடியில் கண்ட விபரத்தை எழுதி இருக்கிறார்:—

"கதீவ் அப்பாஸ் எனது புதல்வரைத் தமது பட்டத்திளவரசருக்கு உபாத்தியாயராக நியமித்தார். என்னுடைய குமாரர் எனக்கு இவ் விஷயத்தைக் கூறினார்:—

"நானும், புத்தமதத்தைச் சேர்ந்த ஒரு தத்துவ விற்பன்னரும் பிரஞ்சு ஸ்கூல் ஹெட்மாஸ்டரிடம் சென்றோம். ஹெட்மாஸ்டர் எங்களுக்கென காப்பிபானம் தருவித்தார். நான் அதனை அருந்தவில்லை. அப்பொழுது அந்த ஹெட்மாஸ்டர் என்னை நோக்கி நீங்கள் ஏன் காப்பி சாப்பிடவில்லை என்றார். அதற்கு நான் நோன்பு வைத்திருப்பதாகக் கூறினேன். அதற்கு அந்த ஹெட்மாஸ்டர் என்னை நோக்கி "நீங்கள் இன்னும் எத்தனை காலத்திற்கு இந்த மூட எண்ணத்தில் பீடிக்கப்பட்டிருப்பீர்கள். கடவுளுக்காக இந்த மூட எண்ணங்களையும் நம்பிக்கைகளையும் விட்டுவிட்டு, கீழ்நாட்டை முன்னேற்ற மடைய வழிவிட்டுக் கொடுங்கள். கீழ்நாடு என்ற கப்பல் இதே மார்க்க பக்தி என்ற கொள்கையால் மூழ்கிவிட்டது. உங்களைப் போன்ற நாகரீகமடைந்த மக்கள் இத்தேசத்திலுள்ள வீணான இக்காரியங்களை விட்டுவிடும்படி உபதேசிப்பது உங்கள் கடமையல்லவா? ஐரோப்பாவைப் பாருங்கள். அவர்கள் மார்க்கத்தைக் கைவிட்டவுடன் எவ்வளவு தூரத்திற்கு முன்னேறிவிட்டனர்" என்று கூறினார்.

பிறகு, எனது புதல்வர் அவ்விடத்தைவிட்டு வெளியேறிவந்தபோது அந்த புத்தமத அறிஞர் என் புதல்வரை நோக்கி, தாங்கள் வருகிற ஞாயிற்றுக்கிழமைக் காலையில் இன்ன மாதா கோவிலின் அண்டையில் என்னைச் சந்திக்க வேண்டும் என்று கூறிச்சென்றார். பிறகு இருவரும் குறிப்பிட்ட மாதாகோவிலினண்டையில் சந்தித்து, கிறிஸ்துவர்களது வணக்க ஸ்தலமான அம்மாதாகோவிலினுட் சென்று ஒரு மணிநேரம்வரை தங்கி இருந்து அவர்களது வணக்கத்தைப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு வெளியில் வந்தனர். வெளியில் வந்தவுடன் என் புதல்வருக்கும் புத்தமத அறிஞருக்கும் பின் வருமாறு சம்பாஷணை நிகழ்ந்தது:—

புத்தமதத்தார்:—அபந்தியே! ஏதும் விசேஷம் பார்த்தீரா?

என்புதல்வர்:—என்ன அதிசயம்?

புத்தமதத்தார்:—ஒன்றையும் பார்க்கவில்லையா? உம்மைத் தொழுகை நோன்பு முதலியவைகளைவிட்டு விலக்கிய அதே பிரஞ்சு ஸ்கூல் ஹெட்மாஸ்டர் இன்று கோவிலில்வணங்கிக் கொண்டிருப்பதைப் பார்க்க வில்லையோ?

என்புதல்வர்:—ஆம்! அவர் வணங்கிக் கொண்டிருப்பது மெய்தான்.

புத்தமதத்தார்:—இந்த வீணான காரியங்களை விட்டுவிடுங்கள் என்று நேற்றுத் தங்களிடம் அந்த மனிதர் கூறினாரல்லவா?

என்புதல்வர்:—ஆம்! மெய்தான்.

புத்தமதத்தார்:—ஏன் அவர் தங்களிடம் இம்மாதிரி கூறினார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

என்புதல்வர்:—தாங்களே சொல்ல வேண்டும்.

புத்தமதத்தார்:—நாம் நமது மார்க்க அனுஷ்டானங்களைக் கைவிட்டுவிடவேண்டும் என்பது அவர்களது நோக்கம். அதற்காகத்தான் அவர்கள் கீழ்நாட்டு மதங்களை இகழ்கின்றனர். நமது மார்க்கம்தான் நமது ஒற்றுமைக்குக் கயிறாக யிருக்கிறது. நமது மதத்தைக் கைவிட்டு விடுவோமாயின் நமது ஒற்றுமையும் ஐக்கியமும் போய்விடும். நமது சக்தியும் தொலைந்துவிடும். நமது தேசங்களில் இதரர் அதிகாரம் வகிப்பதற்குவழியும் பிறந்துவிடும். இதற்காகவே, அந்தஜனங்கள் இவ்வேலையை ஆரம்பித்து எப்பொழுதும் விடாமுயற்சியாகப் பிரயத்தனப்பட்டு வருகிறார்கள்.

நான்காவது

முஹம்மது அலிபாஷா எகிப்தைக் கைப்பற்றிய போது எகிப்தின் ஜனத்தொகை 30 லக்ஷம்தானிருந்தது. அக்காலத்தில் ஜனங்கள் தொழுகையாளிகளாகவும், நோன்பாளிகளாகவுமிருந்தனர். மத்ரஸாக்களிலுள்ள உஸ்தாதுமார்கள், மாணவர்கள், நமது தேசத்திலும் சரி,

ஐரோப்பாவிலும் சரி எங்கு சென்றாலும் மார்க்கானுஷ்டானங்களை தவறாமல் நிறைவேற்றுபவர்களாயினர். இவ்வளவு சொற்ப தொகையினராக இருந்த இந்த எகிப்தியர் ஹிஜாஸ், நஜத், அறபிநாட்டின் பெரும்பாலான பிரதேசங்கள், சூடான் ஆகிய நாடுகளுக் கெல்லாம் அதிகாரிகளாகி விட்டனர். ஐரோப்பா குறுக்கேவந்து நிற்காதிருப்பின் துருக்கி ராஜ்யங்கள் மீதிலும் படையெடுத்து நிற்பர். பிறகு, முஹம்மது அலிபாஷாவும் அவர் தம் புதல்வர் இப்றாஹீமும் இறந்துபோனபின் இவர்களது ஸ்தானத்தில் வந்தவர்களில் சிலர் முதலில் தங்களது போக்கை மாற்றிக்கொண்டனர். சில ஜனங்கள் தொழுகையை விட்டுவிட்டு, இச்சைகளை பின்றொடரலாயினர். இதன்காரணமாகபந்தத்துவங்களுக்குள் இடறல் ஏற்பட்டது. இதுதான் தேசத்தில் ஆங்கிலேயர்கள் பிரவேசிப்பதற்கு முதற் படியாயிற்று.

ஐந்தாவது

அல்லாமா ஹென்றி தீ காஸ்டரி என்பவர் தமது கிரந்தத்தில் பின்வருமாறு எழுதி இருக்கிறார் :—

"ஜர்க்கூமுக்கும் புஹைருக்கு மிடையிலுள்ள ஹாரூன் மாகாணத்தில் ஒருநாள் நான் சென்றேன். யாக்கூப் குடும்பத்தைச் சேர்ந்த முப்பது வாலிபர்கள் எனக்குப் பின்னால் வந்துகொண்டிருந்தனர். குதிரைகள் அடங்காததால் இந்தச் சவாரிகள் பல துண்டங்களாகப் பிரிந்தன. முந்தின வரிசையிலுள்ள குதிரைகளை பிந்தின வரிசையிலுள்ள குதிரைகள் கொஞ்சமேனும் தொட்டுவிட்டால் பின்னால் திரும்பிக்கொண்டு பலமாக இரண்டு உதை கொடுக்காமலிருப்பதில்லை. என்றாலும், கொஞ்ச நேரத்திற்குப்பின் இவைகளது கோபங்களெல்லாம் அடங்கி வழக்கம்போல் செல்ல வாரம்பித்துவிட்டன. எல்லாவற்றிற்கும் முதலில் சுறுசுறுப்பான வாலிபர் ஒருவர் பெரிய 'நகரா' ஒன்றை வைத்துக்கொண்டு குதிரையின்மீது சவாரி செய்து தாழ்ந்த குரலில் பாடல்களைப் பாடிக்கொண்டு சென்றார். இதனால் ஜனங்கள் எல்லோருக்கும் ஒருவித உணர்ச்சியுண்டாகி இருந்தது. அப்பாடல்களில் பெரும்பாலானவை என்னைப் பற்றியே இருந்தன. இப்பாடல்கள் பலவற்றை நான் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தேன். அவைகளில் சிலவற்றை நான் ஞாபகமும் செய்து கொண்டேன்.

நாங்கள் சென்றுகொண்டிருந்தபோது எங்கள் புலவர் திடீரெனப் பாடல்களை நிறுத்திவிட்டு, கொஞ்சம் உரத்த குரலில் (என்பால் நின்றுகொண்டு) ஜனாப்! இப்பொழுது அசர்த் தொழுகைக்கு நேரமாகிவிட்டது என்று கூறினார். இந்தக் குரல் வந்தவுடன் எல்லோரும் தங்கள் குதிரையை விட்டிறங்கி வரிசை வரிசையாக நின்றுகொண்டனர். தனித்துத் தொழுவதைப் பார்க்கினும் பலர் ஒன்றுகூடித் தொழுவது முஸ்லிம்களில் மிகவும் விசேஷமாக இருக்கிறது. இப்படித் தொழுவதற்கு புண்ணியமும் அதிகமாம். நம்முடைய கிறிஸ்துவ மதத்திலும் இப்படித்தானிருக்கிறது. நான் அவர்களை விட்டுக் கொஞ்சம் விலகி நின்றுகொண்டேன். ஆனால், என் மனத்திற்குள் இந்தப் பூமி வெடித்துவிடுமாயின் நான் மூழ்கிப் போய்விடுவேனே என்று எண்ணிக்கொண்டிருந்தேன். இவ்வாலிபர்களது தலை குட்டையிலிருந்து தொங்கிக்கொண்டிருக்கும் வால்கள், தொழும்போது அங்குமிங்கும் ஊசலாடிக்கொண்டும் விரிந்துகொண்டு மிருந்தது. அவர்கள் உறத்த சப்தமாக "அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்" என்று தக்பீர் முழக்கிக்கொண்டிருந்தார்கள். இந்த மகத்துவம் பொருந்திய முழக்கமானது எனது இருதயத்தில் வேதாந்த சாஸ்திரிகளும், பிரசங்கிகளும் செய்யாத அவ்வளவு அபாரமான வேலையைச் செய்தது. எனது மனத்தில் ஒருவிதமான அச்சமும் வெட்கமும் நிறைந்திருந்தது. அதனை வர்ணனை செய்ய என்னிடம் வார்த்தை இல்லை. எனக்கு முன்பாக நின்று தலை வணங்கித் தொழுது கொண்டிருந்தனர் இக்கூட்டத்தினர். ஆனால், என் மனத்தின்கண் இந்தத் தொழுகையானது என்னைப்பார்க்கினும் இவர்களை அதிக கௌரவமும் மேதை மரியாதையும், அந்தஸ்துமுள்ளவர்களாக்கிவிட்டது என்ற எண்ணம் உண்டாகிக்கொண்டிருந்தது. அந்நேரத்தில் என் மனம் கூறிக்கொண்டிருந்ததன்படி நடந்திருப்பேனாயின் நான் என்னை அறியாமலே அவர்களிடம் "நானும் தெய்வத்தை ஒப்புக்கொண்டவன்தான். எனக்குத் தொழுகத் தெரியும்" என்று நான் கூறி இருப்பேன்.

உண்மையில் இது மிகவும் நூதனமானதும் அபூர்வமானதும் மனத்தைக் கவருவதாகவும் கூடிய காக்ஷியாக இருந்தது. அவர்கள் தங்களது சாமான்ய உடையில் எவ்வளவு ஒழுங்காகத் தொழுகையை நிறைவேற்றிக்கொண்டிருந்தனர்? அவர்களுக்குப் பக்கத்தில் அவர்களது

குதிரையானது அசைவற்று அமைதியாக நின்றுகொண்டிருந்தன. இவ்விரு காக்ஷிகளையும் பார்க்கும்போது தொழுகையின் ஒழுங்கானது அசுவங்களையுங்கூடத் தலை வணங்கும்படிச் செய்துவிட்டதோ வென்று தோன்றிற்று. இதனால்தான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் குதிரைகளின்பாலுள்ள அளவில்லா பிரியத்தினால் ஹஜ்ரத் ஜிப்ராயில் (அலை.) அவர்களது கட்டளைப்படி—அவைகளது வாயைத் தங்களது ருமாலினால் துடைத்திருக்கிறார்கள்.

இந்த விசாலமான மைதானத்தில் நான் ஒருவன் மாத்திரம்தான் நெருக்கமான ராணுவ உடையில் இருந்துகொண்டிருந்தேன். அவ்வுடை மனிதனை நெருக்கிக்கொண்டிருந்தது. அவ்வுடையினால் எவ்விதமான மகத்துவமும் வெளியாகுவதில்லை. எனது நிலைமையிலிருந்து மார்க்க பக்தியற்ற தன்மை வடிந்துகொண்டிருந்தது. ஆனாலும், யான் அதுபோழ்து மதத்திற்கு உற்பத்தி ஸ்தானமும் வளர்ச்சி ஸ்தானமுமாகிய இடத்திலிருந்து கொண்டிருந்தேன். தங்களுடைய இறைவனின்முன் பலமுறையும் பணிந்து தொழுகையின் கடமைகளை மனப்பூர்வமாகவும், பக்தியுடனும், விசுவாசத்துடனும் நிறைவேற்றிக்கொண்டிருக்கிற இக்கூட்டத்தின்முன் யான் ஒரு கல்லுக்குச் சமமாகவோ, அல்லது நாய்க்குச் சமமாகவோ இருப்பதாக எனக்குத் தோன்றிற்று. இந்த நேரத்தில் எனக்கு தோராவிலுள்ள (தௌராத் வேதத்தின்) "இறைவன் ஸாமுடைய சந்ததியினரது கூடாரத்தில் குடி இருப்பான்; யாபிதுடைய சந்ததியினருக்கு முன்னேற்றத்தைக் கொடுப்பான்" என்ற வசனம் ஞாபகத்திற்கு வந்தது. அதாவது, தொழுதுகொண்டிருந்த அவ்வறபியர்கள் ஸாமுடைய சந்ததியினராக இருந்தனர். இவர்கள் தங்கள் மதத்திற்காக தங்களை அற்பணம் செய்பவர்களாக இருந்தனர். நான் யாபிதுடைய சந்ததியிலுள்ளவன். இவர்களது கீர்த்தி யுத்தங்கள் புரிவதிலும் நாடு பிடிப்பதிலுமே இருந்தது.

எவ்வாறாயினும், எங்களது பிரயாணத்திற்குரிய மன்ஜில் வந்து சேர்ந்தோம். நான் தங்கி இருக்கும் இடத்திலிருந்து திரும்ப வந்தபின் எனது மனத்திலுதித்த உணர்ச்சிகளை எழுதி வைத்துக்கொள்ள வாரம்பித்தேன். இஸ்லாம் மதத்தின் இன்பமானது என்னைத் தன்பால் வசிகரித்து இழுத்துக்கொண்டிருப்பதாக அதுபோழ்து நானுணர்ந்தேன். இதற்குமுன் எப்பொழுதும் எந்தப் பாலைவனத்திலும் எந்த ஜாதியினரும் இறைவனை வணங்குவதை நான் பார்த்ததே இல்லை. அச்சமயம் எனக்கு கிறிஸ்துவர்களது கூடாரங்கள் ஞாபகத்திற்கு வந்தன. அங்கு ஸ்திரீகளை வணங்குவதுமட்டிலும்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த எண்ணம் எனக்கு வந்தவுடன் ஐரோப்பாவினது மார்க்க பக்தியின்மையின்பால் எனக்குக் கோபமுண்டாகிவிட்டது"

ஆறாவது

ஒரு ஜெர்மானிய சஞ்சாரி பின்வருமாறு பத்திரிகைகளுக்கு எழுதி இருந்தார்:—

"நான் மிகவும் சிறந்ததொரு பாக்கியத்தையும், மிகவும் ஆனந்தத்தை யளிக்கத்தக்கதுமான மரியாதையையும், மிகவும் சிறந்த சுகத்தையும், மனச் சாந்தியையும் அளிக்கத்தக்கதாகிய ஹலுவாவை பலுச்சிஸ்தானில்தான் பார்த்தேன். அதனை நான் எனது கண்ணாரவேறு எந்த இடத்திலும் பார்க்கவில்லை. இங்குள்ளஜனங்கள் இமாம் ஷாபியீயைப் பின்பற்றுபவர்கள். ஸுப்ஹுத் தொழுகையின்போழ்து ஸ்திரீ, புருஷர், இளைஞர், முதியோர், யாவரும் தொழுகைக்காக வருகின்றனர். தொழுகைக்குப் பின் இமாமானவர் அவர்களுக்கு மார்க்க சம்மந்தமான பாடம் கற்பிக்கிறார். பிறகு, சூரியோதயமானவுடன் அவர்கள் ஆனந்தமாகவும் சந்தோஷமாகவும் தங்கள் தங்களில்லங்களுக்குச் சென்றுவிடுகின்றனர்.

இத்தேசத்திலுள்ள ஸ்திரீகள் தங்கள் அலுவல்களை வெகு சிரத்தையுடன் கவனிக்கின்றனர். வீடுதான் அவர்களுக்கு மிகவும் பரிசுத்தமானதாகவும், கற்புதான் அவர்களுக்குக் கறையற்றதாகவும், கணவர்கள்தான் அவர்களது தூய உடையாகவு மிருக்கிறார்கள். அவர்களது தேசத்தில் விபசாரம் என்ற பெயர்கூடக் கேள்விக்கு வருவதில்லை"

சோதரீர்! முற்காலத்தில் தொழுகை நோன்பின் நிலை எப்படி இருந்தது. அதனை இதர மதஸ்தர்கள் எவ்வாறு மதித்திருந்தனர்; இதுகாலை அவைகளின் நிலைமை எவ்வாறிருக்கிறது என்பதை உற்றுணர்ந்து பார்ப்பது நமது கடமையாகுமென்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

மதுரை ஹிபாஜத்துல் இஸ்லாம் கிளை சங்கம்.

மதுரை கொல்லம்பட்டரைத் தெரு பள்ளிவாசலில், மதுரை ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தின் அங்கத்தினர்களின் பொதுக்கூட்டம் 13-9-36 காலை 10 மணிக்கு ஜனுப் மௌல்வீ மோ. உ. முகம்மது கனி ஆலிம் சாகிபவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. கீழ்கண்ட உத்தியோகஸ்தர்கள் ஏகமனதாக தெரிந்தெடுக்கப் பெற்ருர்கள்.

அக்கிராசனர் : மௌல்வீ மோ. உ. முகம்மது கனி ஆலிம் சாகிபு
உப அக்கிராசனர் : முகைபத்ஷா சர்குரு சாகிபு.
காரியதரிசி : இ. செ. முகம்மது இப்ராகீம் ருவுத்தர்.
உபகாரியதரிசி : சையது அஷ்ரப் சாகிபு.
பொக்கிஷதார் : கொ. அ. நா. ஷேக் மதார் ருவுத்தர்
ஆடிட்டர் : செ. கா. சி. ஷேக்மீருன் ருவுத்தர்.

நிர்வாக சபை மெம்பர்கள்.

1. இஸ்மால்சா ருவுத்தர்.
2. ஹைதர் ஹனீப் சாகிபு.
3. S. A. சையது ஹபீப் சாகிபு.
4. வி. அப்துல் ஹமீது ருவுத்தர்.
5. சா. பா. கா. பக்கீர் மைதீன் ருவுத்தர்.
6. பி. கா. சையது ஹாஜியார்.
7. முகம்மது ஹஸன் ஆலிம் சாகிபு.
8. சி. உ. முகம்மது இப்ராஹீம் ருவுத்தர்.
9. ப த. சி. வா. திவான் மைதீன் ருவுத்தர் ஏஜண்டு.
10. ச. மு. சி. நாகூர் மீருமைதீன் ருவுத்தர் ஏஜண்டு.
11. உ. சி. ப. செ. இ. மு. ஏஜண்டு.
12. இஸ்மால் பீர் ருவுத்தர்.
13. செ. அ. சே. முகம்மது ஹனீப் ருவுத்தர்.
14. முகம்மது உசேன் சாகிபவர்கள்.
15. சையது இஸ்மால் ருவுத்தர்.
16. M. S. காசிம் ருவுத்தர்.
17. சி. காசிம் ருவுத்தர்.
18. காட்டுவா மைதீன் ருவுத்தர்.
19. தா. முகம்மது அலி சாகிபு.
20. சேக் மதார் சாகிபு.
21. கா. சிக்கந்தர் மைதீன் ருவுத்தர்.
22. கட்பீஸ் அப்துல்லா ருவுத்தர்.
23. S. பீர் முகம்மது.

சென்னை ஹிபாஜத்துல் இஸ்லா
சங்க அறிவிப்பு

சோதரீர் !

சென்னைப்பட்டணப்பதியின்கண் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் உங்கள் "ஷிப
ஜத்துல் இஸ்லாம்" சங்கம், சத்திய இஸ்லாத்திற்கு ஆற்றி வரும் தொண்
களை தாங்கள் நன்குணர்ந்தே இருக்கிறீர்கள். சத்திய இஸ்லாம் பலவகை
லும் தாக்கப்பட்டு வருகிறது. ஒரு பக்கல் கிறிஸ்தவர்கள் எம்பெருமா
நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள்மீது வீணே அபவாதங்களைச் சுமத்
கின்றனர்; ஆரியர்கள் இஸ்லாத்தை நன்குணராது அதைப்பற்றி விபரீத
முறையில் உண்மைக்கு மாருக என்னென்னவோ எழுதத் துணிந்து விடு
கின்றனர். இவைகளுக்கெல்லாம் தக்க பரிகாரஞ் செய்யவேண்டியது நம்
மவரின் கடமையாக இருந்துவருகிறது. மற்றொரு பக்கல், நம்மிடையே
ஒரு சிலர் தோன்றி வழிகெட்டதும் மறுக்கப்பட்டுப் போனதுமான காதி
யானிக் கொள்கைகளைத் தந்திரமாய்ப் பிரசாரம் புரிந்துவருகின்றனர்.
அதில் நம்மக்கள் சிக்கிக்கொள்ளாமலிருப்பான்வேண்டி, அக்கொள்கை
யின் கெடுதிகளையும் இஸ்லாத்தின் நற்போதனைகளையும் தக்க முறையில்
எடுத்துக்கூறி பிரசாரஞ் செய்யவேண்டியதாயு மிருக்கிறது. இத்துறை
களில் நம் சங்கம் அரும் பிரயாசையோடு தீவிரப் பிரசாரஞ்செய்து வருகிற
தென்பது உங்களுக்கெல்லாம் நன்கு தெரிந்த விஷயம். இன்னேக்கங்
களைச் செவ்வனே நிறைவேற்றுவான் வேண்டியே "ஷிபாஜத்துல் இஸ்லாம்
மாசிகை" நடத்தப்பட்டு வருகிறது. இதனை வாசிக்கும் மக்கள் மார்க்க
பக்தியுடையவர்களாகவும், இஸ்லாத்தின் அரும்போதனைகளைத் தெரிந்து
கொள்ளக்கூடியவர்களாகவும், காதியானிகளின் வலையில் சிக்காமல் அவர்
களுக்குத் தக்க மறுப்புக் கொடுக்கின்றவர்களாயுமாய் விடுகின்றனர். இவ்
வரும் அம்ஸங்கள் பொருந்திய மாசிகையை தாங்களெல்லீரும் வாங்கி
வாசிப்பதுடன் தங்கள் நண்பர்களையும் சந்தாதாரர்களாகச் சேர்க்க முயற்
சிப்பீர்களாக. இதுவே நீங்கள் இஸ்லாத்திற்குச் செய்யும் பேருபகாரமா
கும். எனவே நமது சங்கத்தின் நோக்கங்களைப் பிரசாரம் புரிவதற்காக,
ஜனுப்களான மௌலானு மௌலவீ இ. மு. முகம்மது இப்ருஹீம் சாஹிப்
(பாக்கவி), மௌலானு மௌலவீ A. P. முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் (பாக்
கவி), இவ்விருவர்களையும் சங்கப் பிரதிநிதிகளாக தென் ஜில்லாக்களுக்கு
அனுப்பியிருப்பதால், ஆங்காங்குள்ள நண்பர்கள் பிரசாரத்திற்கு வேண்டிய
வசதிகளைச்செய்து, மௌலானுக்களின் அரும் உபந்நியாஸங்களைக்
பயன்பெறுவதுடன் நூற்றுக்கணக்கில் மாசிகைக்குச் சந்தாதா
சேர்த்துக் கொடுக்குமாறும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

காரியதரிசிகள்,

ஹிபாஜத்துல் இஸ்

Printed by V. Sundaram Iyer at the Kesari Printing Works & Edited & Published
A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 43, Post Office St., G. T. M